
# மனம் விந்தையானதுதான்!

## சிறுகதைகள்



யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

மணிமேகலைப் பிரசுரம்

I. kumarathasan

# மனம் விந்தையானதுதான்!

(சிறுகதைகள்)

திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

மணிமேகலைப் பிரசுரம்

தபால் பெட்டி எண் : 1447
7 (ப.எ.4), தணிகாசலம் சாலை,
தியாகராய நகர், சென்னை - 600 017.
தொலைபேசி : 24342926
தொலைநகல் : 0091-44-24346082
மின் அஞ்சல் : manimekalai1@dataone.in
Website : www.tamilvanan.com

## நூல் விவரம்


| | |
|---|---|
| நூல் தலைப்பு | மனம் விந்தையானதுதான் |
| ஆசிரியர் | திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் |
| மொழி | தமிழ் |
| பதிப்பு ஆண்டு | 2006 |
| பதிப்பு விவரம் | முதல் பதிப்பு |
| உரிமை | ஆசிரியருக்கு |
| தாளின் தன்மை | மேப்லித்தோ |
| நூலின் அளவு | கிரௌன் சைஸ் (12½ x 18½ செ.மீ.) |
| அச்சு எழுத்து அளவு | 11 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | 160 |
| அட்டைப்பட ஓவியம் | ஜமால் |
| லேசர் வடிவமைப்பு | கிறிஸ்ட் கம்ப்யூட்டர்ஸ் சென்னை - 26. ✆ 23725639 |
| அச்சிட்டோர் | ஸ்கிரிப்ட் ஆஃப்செட் சென்னை - 94. |
| நூல் கட்டுமானம் | தையல் |

இந்திய விலை : **ரூ. 50.00**

இந்திய விலை : **ரூ. 170.00**

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | மனம் விந்தையானதுதான் ---------------- | 5 |
| 2. | ஆத்ம தாகம் -------------------------- | 14 |
| 3. | கால மாற்றம் ------------------------- | 22 |
| 4. | நேர்த்தி ---------------------------- | 32 |
| 5. | இவனை மாதிரி ஒருவன் வேலை செய்தால் | 41 |
| 6. | என்னுடைய ஆசை ---------------------- | 48 |
| 7. | பாலுக்குப் பாலகி -------------------- | 54 |
| 8. | சங்கமம் ---------------------------- | 64 |
| 9. | போகன் விலா ------------------------ | 83 |
| 10. | கவனிக்காமல்... ---------------------- | 91 |
| 11. | அது உடைந்துவிடக்கூடாது -------------- | 97 |
| 12. | அன்ரி பார்ப்பா ----------------------- | 107 |
| 13. | எம் அபிவிருத்திக்காய் ----------------- | 120 |
| 14. | போரினால் ஒரு போராட்டம் ------------ | 128 |
| 15. | புத்தகமும் செங்கல்லும் ---------------- | 136 |
| 16. | நொய்... ---------------------------- | 140 |
| 17. | நாவால் அரிந்து... -------------------- | 148 |
| 18. | யார் செய்த பாவம்? ------------------ | 153 |

# என்னுரை

எனது நான்காவது சிறுகதைத் தொகுதியும் ஐந்தாவது நூலுமாகிய இதனை வாசகர்களாகிய உங்கள் கரங்களுக்குத் தருகிறேன்.

1996ல் எனது முதலாவது சிறுகதைத் தொகுதியான 'உணர்வின் நிழல்கள்' மல்லிகைப் பந்தல் வெளியீடாக வெளிவந்தது.

நான் ஒவ்வொரு நூலிலும் எழுதுவதுபோல, எமது தேசத்தில் நடந்துவரும் போர் எனது ஆக்கங்களை என் கண்முன்னால் அழித்துக் கொண்டிருப்பதைப் பார்த்ததன் காரணமாகவே அந்த ஆக்கங்களை நூலுருவில் வெளியிட்டால் எங்கோ ஒரு மூலையிலிருந்தேனும் அதை மீளப் பெறலாமென்ற நம்பிக்கையிலேயே அவற்றை அச்சேற்றத் தொடங்கினேன். நாம் பாதுகாக்கும் ஒவ்வொரு சிறுபொருளினதும் பெருமதிப்பு நமக்கு மட்டுந்தான் புரியும். மற்றவர்களுக்கு அது தேவையற்றதாகக் கூடத் தெரியலாம்.

எனது மனதில் தாக்கத்தை ஏற்படுத்திய சில நிகழ்வுகள் அல்லது கருத்துகள் கற்பனையுடன் கலந்து எழுத்துருவில் வெளிவருகின்றன. வாசகர்களாகிய உங்களுக்கு அவை ஏதாவது பயன் நல்குமாயின் அது எனக்கு மகிழ்ச்சியளிக்கும்.

எனது கதைகளுக்கு நூலுருக்கொடுக்கும் மணிமேகலைப் பிரசுரத்தாருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி. யோகேஸ்வரி சிவப்பிரகாசம்**

'மயூரம்'
கோப்பாய் தெற்கு,
கோப்பாய், ஸ்ரீலங்கா

# மனம் விந்தையானதுதான்

புதியதொரு காலைப்பொழுது முகையவிழ்க்கும் நேரம். உள்ளுணர்வு தட்டிவிட ரவிசங்கர் கண்விழித்தான். மனமும் விழித்துக் கொண்டு பரபரத்தது.

சூழ்ந்திருந்த இருளும் குளிரும் அவனைப் போர்வைக்குள் முடங்குமாறு கெஞ்சினாலும், மனதின் பரபரப்பு அவனது உறக்கத்தை விரட்டிவிட அவன் புரண்டு படுத்தான்.

புதிய இடம் எப்படி இருக்கும்? வேலை எப்படி இருக்கும்? அவனுடைய எதிர்பார்ப்புகள் ஈடேறுமா? அல்லது ஏமாற்றமும் ஏற்படக்கூடுமா?

மனம் உணர்ச்சிகளின் கலவையாய்க் கிடந்தது.

அவன் இன்று வட்டக்கச்சிக்குப் புறப்பட வேண்டும்.

அவன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலேயே படித்து பட்டம் பெற்றவன், வீட்டிலேயே அப்பா, அம்மா,

சகோதரர்களென்று சேர்ந்து வாழ்ந்தவன் வேறிடத்திற்கு அதுவும் வன்னிப்பகுதிக்குப் போகப் போகிறான்.

மூன்று ஆண்டுகளாக வேலை தேடியலைந்த அவனுக்கு வேலை கிடைத்த செய்தி, போரினிடையே சமாதான முயற்சி வெற்றிபெற்றதைக் கேள்விப்பட்டது போலிருந்தது.

வட்டக்கச்சியில் பாடசாலை ஆசிரியராக அவனுக்கு நியமனம் கிடைத்திருந்தது. அதைக் கேள்விப்பட்டதும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு அபிப்பிராயங் கூறினர். அவர்கள் கூறியவற்றை நினைவுக்குக் கொண்டுவந்த போது சிரிப்புத்தான் வந்தது.

ஒரே விடயம். எத்தனை வகையான அபிப்பிராயங்கள்!

பல்கலைக்கழகக் கல்வி நிறைவுற்றது முதல் அவன் தனியார் கல்விநிலையங்களில் கற்பித்து வந்தான். தன்னை ஒரு திறமையான ஆசிரியனாக உருவாக்கிக் கொண்டிருந்தான்.

இதுவரை அவனிடம் கல்வி கற்றுக் கொண்டிருந்த மாணவர்கள் அவன் இங்கிருந்து போவதையிட்டுக் கவலைப்பட்டனர். அவன் போவது அவர்களுக்குப் பேரிழப்பாகத் தோன்றியது.

அவனுக்கு ஆசிரியத் தொழிலே கிடைத்தது அவனது திறமையை வளர்ப்பதற்கு வாய்ப்பாக அமைந்துள்ளதாக அவன் கருதினான்.

அவன் சேவையாற்றப் போகும் பாடசாலை எப்படியிருக்குமோ?

'அது எப்படியிருந்தாலும் என்னிடம் படிக்கப்போகும் மாணவர்களுக்கு நான் சிறப்பாகக் கல்வி கற்பிக்க வேண்டும். அங்கிருந்து மாற்றம் பெற்று நான் வரும்போது அவர்களும் இங்குள்ள மாணவர்கள் கவலைப்படுவதுபோல் கவலைப்பட வேண்டும். இதென்ன அங்கு போகவேயில்லை. அதற்கிடையில் இடமாற்றம் பற்றிச் சிந்திக்கிறேனே!'

'எல்லோரது அறிவுரைகளும் மூளையில் பதிந்ததன் பயனாக ஏற்பட்ட எண்ணமோ?'

"ரவி வட்டக்கச்சிக்கே போகப் போறாய்? போன பிறகு முயற்சியெடுத்து, இங்கை மாறிவரலாந்தானே?" அவனது நியமனம் பற்றிக் கூறியதுமே அம்மா தயங்கித் தயங்கிக் கவலையுடன் கேட்டாள்.

"வட்டக்கச்சிக்கே அப்பொாயின்ற்மென்ற்? ஆரையேன் பிடிச்சு யாழ்ப்பாணம் மாத்துமன்."

நண்பன் பாலனின் அறிவுரை இது.

"மச்சான் எனக்குத் தெரிஞ்ச ஒருதர் இருக்கிறார். கொஞ்சம் கூடத்தான் கொடுக்க வேணும். ஆனால் உடனை யாழ்ப்பாணம் கிடைக்கும்."

செவ்வேள் அவனை உடனே அந்த மனிதரிடம் கூட்டிச் செல்லத் தயாராகவிருந்தான்.

முதல் நியமனத்தை இரத்துச் செய்து, இடம் மாற்றலாமென நம்பி, பணத்தையும் நியமனத்தையும் இழக்க ரவி தயாரில்லை. அவன் வட்டக்கச்சிக்கே சென்று பணியாற்றுவது என்று தீர்மானித்து இன்று புறப்படுகிறான்.

இப்படிப் பலரும் கூறியவை அனைத்தும் சேர்ந்து உள்ளே ஒருமூலையில் மாற்றம் பெற வேண்டுமென்ற எண்ணத்திற்கோர் ஊற்றுக்கண் திறந்து வைத்தன போலும்.

போர்வையை இழுத்துவிட்டுக் கொண்டு, மேலும் சிறிது நேரம் படுக்க நினைத்தபோது, மால்மருகனின் அறையினுள் அரவம் கேட்டது.

அண்ணா மால்மருகன் சுவீடன் பல்கலைக்கழகத்திலே மேற்படிப்பைத் தொடர, இன்னும் சரியாகப் பத்து நாட்களின் பின்னர் புறப்படவிருக்கிறான். அந்தப் பத்து நாட்களும் அவனுடனிருக்க முடியாது போய்விட்டதே என்ற கவலையும் அவனது உணர்ச்சிக் கலவையுள் கலந்திருந்தது.

அவன் படித்து முன்னேற ஊக்க சக்தியாக இருந்தவரே மருகு அண்ணாதான். அப்பா நோயுற்ற பின்னர், . சுந்தரேசன் அண்ணாதான் வீட்டுப் பொறுப்புகளைச் சுமந்து, அவர்களைப் படிக்க வைத்தாலும், படிப்பதற்கு உதவியும் உற்சாகமும் தந்தது மருகு அண்ணாதான்.

அவனுக்கு மருகு அண்ணாமேல் தனிப்பட்ட பாசமிருந்தது. பெரியண்ணா சுந்தரேசன் அப்பாவின் இடத்தைப் பிடித்துக் கொண்டதால் அவருக்கு மரியாதை செலுத்தும் மனோபாவந்தான் அவனுக்கிருந்தது.

ஆசை அண்ணனாக, ஒரு தோழன் போல் மனம்விட்டுப் பேச, மருகு அண்ணா இருந்தார்.

அவரைப் பிரிவது பெரும் வேதனைதான். இந்தப் பத்து நாட்களாவது அவருடன் இருந்திருக்கலாம்.

அவன் நிரந்தர வேலையொன்றைப் பெற்று, காலூன்றி நின்று குடும்பப் பொறுப்புகளுக்குத் தோள் கொடுக்க வேண்டும்.

மருகு அண்ணாவும் மேற்கல்வி கற்று பதவி உயர்வுகள் பெற்று குடும்பத்திற்குப் பெருமை சேர்ப்பவராக வேண்டும்.

அவர்கள் பிரிந்து தானாக வேண்டும். இந்த உலகில் குழந்தைகளாகவோ, சிறுவர்களாகவோ மாற்றமின்றி அவர்களிருக்க முடியாதே.

அறைக்கதவைத் திறந்த மால்மருகனுக்கு ரவியின் சிந்தனையிலாழ்ந்த முகம் தெரிகிறது.

குட்டித் தம்பியாக அவனுடன் ஓடித்திரிந்த ரவி, ஆசிரியனாகப் போகிறான். வீட்டிலிருந்து இன்று புறப்படப் போகிறான்.

பத்து நாட்களின் பின் இதே போன்றதொரு காலைப் பொழுதில் அவனும் புறப்படப் போகிறான்.

வெளிநாட்டுப் புலமைப் பரிசிலொன்று மேற்படிப்பிற்காகக் கிடைத்ததும் அவனடைந்த மகிழ்ச்சி நினைவிற்கு வருகிறது. அந்த மகிழ்ச்சியின் பின்புறம் இந்தப் பிரிவு என்னும் வேதனையிருக்கிறது.

இன்னும் மூன்று வருடங்களின் பின் அவன் கலாநிதிப் பட்டம் பெற்றுவிடுவான். அதற்காக இந்த வேதனையைத் தாங்கித்தானாக வேண்டும்.

அவன் மனைவியையும் குழந்தையையும் தன்னுடன் அழைத்துச் செல்லப் போகிறான். அது அவனுக்கொரு திருப்தியைத் தருகிறது.

அவனுடைய உறவு அந்தச் சிறிய வட்டந்தானா?

இல்லையே.

அப்பா, அம்மா, அண்ணா, தம்பி, நண்பர்கள், உறவினர், அயலவர் என்று நீண்டு செல்லும் உறவுகளின் பிரிவு அவனுக்கு வேதனையைத் தரத்தான் போகிறது.

அவன் பிறந்து வளர்ந்த வீடு, சுற்றித் திரிந்த இடங்கள், அனைத்தையும் விட்டு ஒரு நெடுந்தொலைவிற்குச் செல்கிறான்.

படுக்கையிலிருக்கும் அப்பா -

வயோதிபத்தைத் துணையாக்கிக் கொண்டுவிட்ட அம்மா -

குடும்பத்திற்காக உழைக்கும் அண்ணா - அக்கா இல்லாத குறையைத் தீர்க்கும் அண்ணி - "சித்தப்பா, சித்தப்பா" என்று சுற்றிவரும் அவர்களின் குழந்தைகள் - அனைவரையும் பிரிந்து சென்றபின், போர்மூண்டால் தொலைபேசி மூலங்கூடத் தொடர்பு கொள்ள முடியாது.

ஆனாலும் ஓர் ஒளிமயமான எதிர்காலத்திற்கான வாசற்கதவு திறந்தபோது, அவன் ஆனந்தப்பட்டான். அந்த எதிர்காலத்தைப் பற்றிய இனிய கற்பனையினால் மனம் பூஞ்சிறகு விரித்துப் பறந்து சென்று, சுவீடனின் குளிர் பனியிலே போய் குந்திக் கொண்டது.

அணி முதல்வனாக பல்கலைக் கழகத்தில் மிளிர்ந்த அதே திறமையை, அவன் அங்கு சென்றும் காட்டி, பாராட்டுகள் பெற வேண்டும் என்ற தீர்மானத்தையும் எடுத்துக் கொண்டான்.

அவனது திறமையைக் கண்டு, அங்கேயே தொடர்ந்து ஆய்வுகள் செய்யும் பணியில் ஈடுபடுமாறு கோருவார்களோ?

நினைவின் மகிழ்வில் அவனது உதடுகள் நெகிழ்ந்து புன்னகைத்தன.

சுந்தரேசனும் அதிகாலை முதலே மேசைக்கு முன்னால் அமர்ந்து தனது தலைமைப் பணியகத்திற்கு அந்த மனுவை எழுதிக் கொண்டிருந்தான்.

நேற்று அந்தக் கடிதம் வந்ததிலிருந்து வேதனையைக் கொண்டு உருவாக்கப்பட்ட மனமொன்று உள்ளே வைக்கப்பட்டு விட்டது போலத் தவித்தான். அந்தத் தவிப்பு இரவு முழுவதும் அவனை உறங்கவிடவில்லை. அதிகாலையிலேயே எழுந்து, மேசை முன்னால் அமர்ந்து விட்டான்.

அந்தச் செய்தியை எவரிடமும் அவனால் கூறமுடியவில்லை. மறுநாள் ரவி வீட்டைவிட்டுப் புறப்படவிருந்தான். பத்துநாட்களின் பின் மருகு வெளிநாடு செல்லவிருக்கிறான்.

இந்த நேரத்தில் அவனும் இடமாற்றம் பெற்று வேறிடத்திற்குச் செல்லப் போவதாக எப்படிக் கூறுவது?

படுக்கையிலிருக்கும் அப்பாவையும் உடல் தளர்ந்த அம்மாவையும் விட்டுவிட்டு எப்படிப் போக முடியும்?

தம்பி, வட்டக்கச்சிக்கு நியமனக் கடிதம் கையிலே கிடைத்ததும் மகிழ்ந்து குதூகலித்தான். பணியைத் தொடங்குவதற்காக வட்டக்கச்சி செல்லத் தீர்மானித்தான்.

சுவீடன் செல்ல புலமைப்பரிசில் கிடைத்திருப்பதாகக் கடிதம் வந்ததும் மால்மருகன் மகிழ்ச்சியின் எல்லைக்கே சென்றான். சுவீடன் செல்வதற்கு வேண்டிய ஆயத்தங்கள் செய்யத் தொடங்கினான்.

சுந்தரேசனுக்கு இடமாற்றக் கடிதம் வந்ததும் அவன் கவலையில் ஆழ்ந்து போனான்.

வீட்டை விட்டு எப்படிப் புறப்படுவது? அவன் கிண்ணியா சென்றால் அப்பாவைப் பார்ப்பது யார்? வயல், தோட்டம் எல்லாவற்றையும் அவனது மனைவியால் மேற்பார்வை செய்ய முடியுமா?

அவனுக்கு இவற்றையெல்லாம் சிந்திக்கவே மூளை குழம்பியது. இந்தச் செய்தியை அப்பாவிடம் கூறினால் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டு, படுக்கையில் கிடக்கும் அவரால் தாங்கிக் கொள்ள முடியுமா? அவரது நிலை மேலும் மோசமானால்...

அம்மாவிடம் கூறினால் அப்பாவுக்கு அருகே அவளுக்கும் ஒரு படுக்கை போட நேரலாம்.

ரவியினதும் மருகனதும் பிரிவுகள் அவர்களுடைய மனங்களுக்கு வேதனை தரவில்லையென்று கூறமுடியாது. ஆனால் அந்தப் பிரிவுகளினூடே ஒரு மகிழ்வும் அவர்களது உள்ளங்களுக்குப் பாய்ச்சப்படுவதால் அவர்கள் அதைத் தாங்கிக் கொள்கிறார்கள்.

ஒரு பணிமனையில் பணிபுரியச் சென்றால் இடமாற்றம் வரும் என்பது அனைவரும் அறிந்த விடயந்தான். நாட்டின் எப்பாகத்திற்கும் சென்று பணியாற்றச் சம்மதம் என்று ஒத்துக் கொள்கிறோம்.

ஆனால் இடமாற்றம் வரும்போது...

வீட்டின் அனைத்துப் பிரச்சனைகளும் முண்டியடித்துக் கொண்டு கண்முன் நிற்கின்றன.

இவனைப் பொறுத்தவரை இதுவரை ரவி செய்த கடமைகள் மால்மருகன் செய்துவந்த வேலைகள் எல்லாமே இவனுக்கு முன்தான் வரிசையில் நிற்கின்றன.

மனம் விந்தையானதுதான்!

மூன்றுபேருக்கும் வந்த கடிதங்களையும் அதனால் ஏற்படப் போகும் பிரிவின் தாக்கங்களையும் அவன் அலசி ஆராய்ந்து கொண்டிருந்து பயனில்லை.

இடமாற்றத்தை இரத்துச் செய்யக் கோரும் விண்ணப்பம் ஒன்றை அவன் எழுதி அனுப்புவது அவசியமாகப்பட்டது.

'ரவியின் நண்பன் செவ்வேள் யாரோ ஒருவர் மூலம் ரவிக்கு யாழ்ப்பாணத்தில் வேலைசெய்ய மாற்றஞ்செய்யலாமென்று கூறியதாக ரவி சொன்னானே. இன்றைக்கு எப்படியும் செவ்வேளைச் சந்தித்து அவரைப் பற்றி விசாரிக்க வேண்டும்.'

சுந்தரேசன் ஒரு தீர்மானத்துடன் விண்ணப்பத்தை எழுதிக் கொண்டிருக்கிறான்.



# ஆத்ம தாகம்

அணு அணுவாகச் சித்திரவதை... மயங்கி... உணர்வுகளற்றுப் போய்... அவளின் உயிர் அடங்கிக் கொண்டிருக்கிறதா?

சீ.... அந்த... அந்த... வேதனைக்கணங்கள்...! நினைவு மங்க மங்க மனதின் ஆழத்துள் அந்த நினைவுகள் உறைந்து போகின்றனவா?

பூட்ஸ் காலின் அழுத்தலில் எல்லாம் ஓயும்போது கூட அந்தக் கொடூரத்தின் உக்கிரம் அழுந்தப்பதித்த செந்தழல் இரும்புக்கோலின் தழும்பாக மனதினுள் பதிந்து கொதித்தது.

திடீரென்று ஒரு விட்டுவிடுதலையான உணர்வு.

அவள் பார்க்கிறாள்.

அது அவள்தான். ஆடை களையப்பட்டு, அணு அணுவாகச் சித்திரவதைப்பட்டு, அலங்கோலமாக அசைவற்றுக் கிடப்பது அவளேதான்.

அப்படியென்றால் அவளுக்குப் புரியாத புதிராக இருந்த 'மரணம்' என்பது இதுதானோ?

அந்த உடலை அவள் மீண்டும் பார்க்கிறாள். அவளுக்கு இப்படியொரு நிலையா?

அந்தச் சோதனைச் சாவடியினுள் கால்வைத்த போது இவ்வாறெல்லாம் நடக்குமென அவள் நினைக்கவேயில்லை. எத்தகைய கொடியவர்கள்!

“நீ கொட்டியா தானே?”

அவளுடைய மறுப்பு கவனத்திலெடுக்கப்படவே இல்லை. குற்றவாளியைப் பிடிப்பது போன்ற பாவனையில் தங்கள் இச்சையைத் தீர்க்க...

உயிரோடு உடையுமற்றுக்கிடந்த அவளது உடலைப் பார்க்கிறாள்.

அந்தக் கொடூரத்தின் ஆழப்பதிந்த தழும்பு அவளது உடலோடு போகவில்லை! உயிரோடு வந்து விட்டது!!

மனம் என்பது உடலுக்குரியதல்ல.

அவள் கனன்று கொண்டிருந்தாள்.

குற்றத்தைக் கண்டால் கொதித்துப் போகும் அவளுடைய குணம் மறையாமல் தொடர்ந்து வந்து விட்டிருந்தது அவளுக்குப் புரிந்தது.

“கடவுளே, இந்தக் கொடுமைகளை நீ பார்த்துக் கொண்டிருக்கிறாயா? இந்த வெறியர்களை அதிலும் முக்கியமாக அவனைப் பழிவாங்கியேயாக வேண்டும்”

நினைவுடனிருந்த போது அவளுள் உச்சங்கொண்ட அந்தத் தகிப்பு, இப்போது அவளையே அக்கினிச் சுவாலையாக்குகிறது.

இதை இப்படித்தான் செய்வது வழமையென்பதுபோல, ஓர் இயந்திரத்தனத்துடன் இருவர் அவளது உடலை இழுத்துச் சென்று சதுப்பு நிலத்துள் புதைக்கின்றனர்.

"இறைவா, இந்தக்கணமே அந்த உடலுள் புகுந்து, நிலத்தைப் பிழந்து, கிளம்பி வந்து, நவீன துர்க்கையாக மாற அருள்புரியமாட்டாயா?" அவளுடைய கோரிக்கை இறைவனை எட்டியதோ என்னவோ?

"நீதி வேண்டும். இறைவா, நீதி வேண்டும். அநீதி அழிய வேண்டும்"

இறுதிக் கணங்களில் அவளது முழு மனதிலும் வியாபித்து நின்ற இந்த ஏக்கம், தணியாத ஆத்மதாகம் அவளைச் சூழ்ந்து கிடந்த வெட்டவெளியெங்கும் ரீங்கரிக்கிறது.

மனதின் சக்தி மிகுந்த பலங்கொண்டதாமே?

"பழி வாங்கு, பழிவாங்கு."

என்றும் இப்போதும் இந்த வெறி சுவாலித்து சுவாலித்து மேலோங்குகின்றது.

அவளின் கதை மண்ணுள் புதையவில்லை. அவளே தன்னுயிரென்றிருந்த அப்பா அவளது மறைவை ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

நீதிமன்றத்திற்குச் சென்று அவளை மீட்டுத் தருமாறு கோரினார்.

உலகம் முழுவதும் அவளது கதையைப் பேசுகிறது.

அவளது வழக்கு விசாரணைக்காக நீதிமன்றுக்கு வருகிறது.

சதுப்பு நிலத்துள்ளிருந்து, நீதிமன்ற உத்தரவின்படி, அவளது சடலம் வெளிக்கொணரப்படுகிறது.

அவள் சொல்ல நினைத்தவற்றுள் ஒரு பகுதியை, சிதைந்து போன அவளது சடலம் மௌனமாகவே கூறிமுடிக்கிறது. அவளது இறுதி நேர உத்வேகமும் ஆண்டவனிடம் அவள் இறைஞ்சிய வேண்டுதலும் மூடி மறைத்த சடலத்தை வெளிக்கொணர்ந்து மூடிமறைக்கப்பட்ட விடயங்களையும் வெளித்தள்ளின போலும்,

உருத்திராட்சப் பூனைகள் காலடியோசை கூடக் கேட்காமல் நழுவும் திறமை கொண்டவையல்லவா?

சிறையுள்ளிருந்தவன் மேலிடத்து உதவியுடன் சிறையிலிருந்து தப்புகிறான். அந்தக் கிராதகன் தப்பியோடும் நாடகம் அவளுடைய கண்முன்னாலேயே அழகாக அரங்கேற்றப்படுகிறது. உலகத்திற்கு அது நாடகம் என்று தெரியாது போகலாம். ஆனால் அவள் அந்த உலகத்திற்கு உரியவளல்லவே. அதனால் அவள் அவனது ஒவ்வொரு அசைவையும் அவனுடனிருந்தே பார்த்துக் கொண்டிருக்கின்றாள். அவளுள் தகித்துக் கொண்டிருந்த உக்கிரத் தீக்குழம்பு, அவன் நீதியின் கைகளுள் பிடிபடாது ஆட்டம் போடுகிறானே என்ற ஏக்கத்தினால் எரிமலையின் குமுறலாக வானை எட்டுகிறது.

அவனது நிழலாகத்தொடரும் அவளும், அவன் மறைந்து கொண்ட வீட்டினுள் குடிபுகுந்தது அவனுக்குத்

தெரியாது. "இயலாது" என்று எதிலும் ஓய்ந்துவிடாத அவளுடைய குணம் இப்போது அவளுள் சிம்மாசனமிட்டு அமர்ந்து கொள்கிறது. தீயாகக் கனன்ற அவள் அவனைச் சூழ்ந்து நின்ற காற்றுடன் கலந்து நிற்கிறாள்.

எத்தனையோ குற்றவாளிகள் தப்பியோடி மறைந்து வாழ்கிறார்கள். அவனும் அவர்களுள் ஒருவனாகி விட்டான். அவனை யாரும் காட்டிக் கொடுக்கப் போவதில்லையென்பது சர்வநிச்சயம். அவனை இனிப்பிடிக்கமுடியாதென்றே எல்லோரும் நம்பினார்கள்.

அவனோ ஒரு வேதனை சூழ்ந்து கொண்ட பிரமையுடன் திணறிக் கொண்டிருக்கிறான். அவனது நிம்மதி முழுவதும் சூறை போய்விட்ட உணர்வு. இனம்புரியாத ஏதோவொரு தவிப்பு.

இயலவில்லை; அவனால் நிம்மதியாக இருக்க இயலவில்லை. மகிழ்ச்சியாக இருக்க இயலவில்லை.

சித்திரவதைகள் செய்து இரசித்து மகிழ்ந்தவன், கொலைகளைச் செய்துவிட்டு கும்மாளமிட்டுக் கொண்டிருந்தவன், இன்று இப்படியானதன் காரணமே புரியவில்லை.

அவன் தனக்குக் கீழே பணிபுரிந்தவர்களிடம் அந்த உடலை வழமைபோல அப்புறப்படுத்துமாறு கூறியபோது, "அதுவரை அவன் கொன்ற நூற்றுக்கணக்கானவர்களில் அவளும் ஒருத்தி, அவன் சுவைத்துக்கொன்ற பலருள் அவளும் ஒருத்தி; உடலைப் புதைத்தால் அந்த நிகழ்வின் நினைவு பறந்துவிடும்!" என்றுதான் நினைத்தான்.

ஆனால் இவள் மட்டும் அந்தக்கணம் முதலே நெஞ்சினுள் புகுந்த நச்சுப்புகை மூட்டமாய்...

ஏன் அந்த நினைவு மட்டும் மனதை விட்டகல மறுக்கிறது?

வேலை...?

போதை...?

எதுவுமே அதனை மறக்கவைக்க முடியாது தடுமாறுகின்றன. இத்தனை கொலைகளும் கேட்பதற்குத் துணிபவர்களற்றுக் கிடக்க, இதற்கு மட்டும் கொழும்பு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய அவளது தந்தைக்குத் துணிவு வந்திருக்கிறது. சர்வதேசமும் இது பற்றிக் கதைக்க வைத்துவிட்டாள் அவள்.

கைதடி வெளியின் சதுப்புநிலத்துள் உக்கி மண்ணாவாள் என அவன் நினைத்திருக்க, அதனைப் பிளந்து கொண்டு வெளிக்கிளப்பி அவனைக் காட்டிக் கொடுத்தாள்.

சிறையுள் அவன் இருந்த போதும் அவனைக் குற்றவாளியாக எவரும் பார்த்ததில்லை. "ஓர் இராணுவ உயரதிகாரி இப்படியெல்லாம் செய்வது இயல்பே" என்ற எண்ணமுடையவர்கள்தான் சூழ இருந்தார்கள். அவன் கூனிக்குறுக வேண்டிய அவசியமே இல்லாத - அவனை உறுத்தும் பார்வையெதுவுங்கூட இல்லாத - அந்தச் சூழலிலும் உள்ளே அந்த நச்சுப்புகைமூட்டம் மனதைக் குழையவைத்துக் கொண்டிருந்தது.

சிறையுள்ளிருக்கும் வேதனையதுவென்று நினைத்தான். அவன் சிறையிலிருந்து தப்பிச் செல்வதற்கான

தந்திரோபாயக் கதவு திறக்கப்பட்டு, அவன் நிர்ப்பயமாக வாழும் சூழலுக்கு வந்துவிட்ட பின்புங்கூட, அந்த நச்சுப் புகைமூட்டம் நெஞ்சுள் முட்டிநின்று திணற வைக்கிறதே!

அது மனதைச் சூழ்ந்து சுற்றிச் சுற்றி வந்து...

சே... நிம்மதி ஏன் மறைந்தது?

உறங்கக்கூட முடியாமல் அவன் ஏன் தவிக்கிறான்?

"சாகவேண்டும். அப்போதுதான் எனக்கு நிம்மதி" அவன் இப்படி நினைத்துக் கொள்கிறான்.

மனம் சாவைத்தேடி ஏங்குகிறதா?

இது என்ன பைத்தியக்காரத்தனம்!

அவளுடைய ஆவி அவனைச் சாகடிக்கப்பார்க்கிறதா?

"இல்லை நான் சாகக்கூடாது" அவன் தீர்மானிக்கிறான், ஆவி...! அப்படி ஒன்று இருக்குமா?

மனம் குழம்பித் தவிக்கிறது. இனம்புரியாத கலக்கம்.

"நான் இறந்தபின் எனது ஆவி அவளுடைய ஆவியைச் சந்திக்க நேர்ந்தால்..."

இது என்ன பைத்தியக்கார யோசனை? ஆவியாவது வருவதாவது, அப்படி எதுவுமே கிடையாது.

அவன் மனதைத் தேற்றிக் கொள்கிறான்.

மனதுள் ஏதோ அடைத்துக் கொள்கிறது. மூச்சுத்திணறுவது போன்ற உணர்வு.

ஏன் அப்படி? அந்த ஆவி அவனைச் சாகடிக்கப் பார்க்கிறதா?


புரியாத புதிர் இருளில், அவனது மனம் அலைகிறது.

அவள் கைகொட்டிச் சிரிக்கிறாள். அவனுடைய காதுகளில் விழும் சிரிப்பொலி உண்மையானதுதானா?

அந்த ஆவியிடமிருந்து தப்பவேண்டுமானால் அவன் நீதியிடம் சென்று சரணடைய வேண்டும். அது தரும் தீர்ப்பை ஏற்றால் அந்த ஆவியைச் சந்தித்தால் கூட பயமில்லை. இப்படி வதைபட முடியாது.

அவன் ஒரு முடிவிற்கு வருகிறான். அவன் பொலிஸில் சரணடைகிறான்.

அவனுக்காகத் தந்திரோபாயக் கதவு திறந்த நண்பன் இதைக் கேட்டுத் திகைத்துப் போய் நிற்கிறான்.



# கால மாற்றம்

தொலைக்காட்சிப் பெட்டியின் முன் அமர்ந்திருந்த அகல்யாவின் மனம் அதில் தென்பட்ட காட்சிகளில் ஈடுபட மறுத்தது. கையிலிருந்த றிமோட் கொன்றோலர் மூலம் அலை வரிசைகளைக் கைவிரல்கள் மாற்றிக் கொண்டிருந்தாலும் அது அவளது மூளையின் ஆணைப்படி நிகழவில்லை.

இரவு உணவைத் தயாரித்து முடித்து நீண்ட நேரமாகி விட்டதால், அவை தம் சுவையை இழந்து கொண்டிருந்தன. மகள் வித்தியாவினதும் அவளது வருங்காலக் கணவனதும் வரவிற்காக அகல்யாவுடன் இரவு உணவும் காத்திருந்தது.

காலவோட்டம் மனிதர்களை எவ்வளவோ மாற்றிவிட்டது. சென்ற வாரந்தான் வித்தியா தன் காதலன் திலீபனைப் பற்றி அவளிடம் கூறினாள். சௌதியிலிருக்கும் தன் கணவனுடன் கலந்து பேசி, அவனது சம்மதத்துடன் இன்று திலீபனை இரவு விருந்திற்கு அகல்யா அழைத்திருந்தாள். வித்தியாதான் திலீபனை அழைத்து வரப் போகிறாள்.

ஆனால் இருபத்து மூன்று வருடங்களுக்கு முன் அகல்யா தன் காதலைப் பற்றி அம்மாவிடம் கூறியதும்

வீட்டில் சூப்பர் சோனிக் குண்டுவீச்சு விமானமொன்று குண்டுவீசிய நிலையேற்பட்டது, நினைவிற்கு வருகிறது.

அது அந்தக் காலம்!

அகல்யா, ஆசார அனுஷ்டானங்களைக் கடைப்பிடித்து, அந்தக் கிராமத்து பிள்ளையார் கோவிலில் முக்காலமும் பூசைபுரிந்து வந்த ஜெகதீஸ்வரக் குருக்களின் மூத்த மகள்.

கிராமத்தில் குருக்களையாவுக்கு மிகுந்த மரியாதை. விபூதியும் உருத்திராட்சமுமாக அவர் சிவப்பழமாகக் காட்சி தருவார். அம்மா வைதேகியும் அவருக்கேற்றவள்தான். மஞ்சள் பூசிய முகத்தில் திருநீறும் குங்குமமுமாகக் காட்சி தரும் அம்மாவை அம்மன் மாதிரி என்று கூறுவார்கள்.

ஆனால் அகல்யாவுக்குத்தான் அப்பாவின் குடுமியும் கடுக்கனும் கட்டோடு பிடிக்கவில்லை. இடைக்கிடை சினிமா பார்க்கும் பழக்கமும் அவளுக்கிருந்தது. நவீன உலகில் எத்தனை வகைவகையாக அலங்காரம் செய்கிறார்கள். அப்படி உடை உடுத்த அப்பாவும் அம்மாவும் தயாரில்லை. அதுமட்டுமல்ல. அப்படி உடை அணிய அவளையும் அவர்கள் அனுமதிப்பதில்லை.

அவளுக்கு அடர்ந்த, நீண்ட கூந்தல். அம்மா அதை அழகாகப் பின்னலிட்டு, பூவும் சூட்டி மகிழ்வார். அகல்யாவுக்குக் கோபம் கோபமாக வரும். அலையலையாகப் புரளும் தன் கூந்தலை இடுப்பளவில் கத்தரித்து, விரித்து விட்டு தலை அலங்காரம் செய்ய அவளுக்குக் கொள்ளை ஆசை. அப்பாவுக்கு அதைக் கண்டதுமே கோபம் உச்சத்துக்கு ஏறும்.

"பொம்பிளைப்பிள்ளை தலைமயிரை விரிச்சுவிட்டுக் கொண்டு நிக்கிறது வீட்டுக்குத் தரித்திரம் எண்டு அம்மா சொல்லுறவ." என்று அம்மா தன் முகத்தைக் காட்டப் பயந்து தனது தாயாரின் முகமூடிக்குள் மறைந்து நின்று தன் விருப்பமின்மையை வெளிப்படுத்துவாள்.

அப்பா அவளுக்கென்று ஒரு மாப்பிள்ளையைத் தேடிக் கொண்டு வந்த போது அவள் பொறுமையைப் பிரித்துக் கொண்டு வெளிக்கிளம்ப நேரிட்டது.

இரண்டு மூன்று தடவைகள் குருகுலத்துக்குச் சென்று வந்த பின், அப்பா அங்கே பயிலும் மௌலீச சர்மாவைப் பற்றி அடிக்கடி புகழ ஆரம்பித்திருந்தார்.

ஒரு நாள் அந்த மௌலீச சர்மாவுக்கு ஆச்சார்ய அபிஷேகம் நடைபெறப் போவதாகச் சொல்லி, அப்பாவும் அம்மாவும் புறப்பட்டுப் போனார்கள்.

அன்று திரும்பி வந்ததும் இருவரும் சேர்ந்து வாய் மூடாது அவனுடைய புகழ் பாடினார்கள்.

"மௌலீசனைப் பார்த்தாலே ஒரு தெய்வீகக்களை இருக்கு" என்று அம்மா தொடங்கினாள்.

"சாட்சாத் முருகப் பெருமானே வந்த மாதிரி இல்லையா?" அப்பா பரவசத்துடன் கூறியது போலத் தோன்றியது.

"பார்த்தால் நல்ல குணமுள்ள பிள்ளை போலிருக்கிறார்" அம்மா தன் அபிப்பிராயத்தைக் கூறினாள்.

"பார்த்தால் என்ன பார்த்தால் அவன் கலப்படமில்லாத தங்கம். ஒரு குருக்களாயிருக்க வேண்டிய

குணாம்சமெல்லாம் இருக்கு. மந்திரம் ஓதினால் அட்சர சுத்தம். பத்ததி வாசிச்சு கேட்க வேணுமே. அவர்களுடைய கோவில் சுந்தரேசர் மீனாட்சியம்பாள் மீது அப்படியொரு பக்தி. அவ்வன் தீபாராதனை செய்தால் அப்பனும் அம்மையும் இறங்கி வந்து விடுவார்களோ என்றிருக்கும்." அம்மா எடுத்துக் கொடுக்க, தொடுத்து மாலையாக்கி அணிவித்துக் கொண்டிருந்தார் அப்பா.

"மௌலீசனுக்குக் கலியாணம் நடந்திட்டுதோ?" அம்மாவின் வினாவிற்கு "இன்னும் நடக்கேல்லை. ஆச்சார்யாபிஷேகம் செய்து குருக்களாயிட்டார். குடும்பஸ்தராகாவிட்டால் கொடியேற்றம் போன்ற கிரியைகள் செய்ய முடியாது. ஆனபடியால் தாய் தகப்பன் இனிமேல் கலியாணம் செய்ய யோசிப்பினம். எங்கடை அகல்யாவுக்கு நல்ல பொருத்தமாயிருக்குமெண்டு நானும் யோசிச்சன்" என்று அப்பா பதிலளித்தார்.

அகல்யா அதிர்ந்து போனாள். கோவில் திருவிழா ஒன்றிலே அவளும் மௌலீசனைக் கண்டிருக்கிறாள்.

அவனை அவள் திருமணம் செய்வதா?

அப்பாவுக்கு அவனைப் பிடித்திருக்கும். அப்பாவைப் போலவே குடுமியும் கடுக்கனும் கழுத்தில் உருத்திராட்சமாலையுமாக...

நினைத்துப் பார்க்கச் சிரிப்பு வந்த நிலை போய், மனம் வேப்பெண்ணெய் ஊட்டப்பட்டுத் தவித்தது.

இதை எப்படித் தவிர்ப்பது?

மூன்று, நான்கு மாதங்களாக அவளின் பின்னே அலைந்து கொண்டிருக்கும் புலேந்திரனின் நினைவு வந்தது.

மாநிறமென்றாலும் அவளுடைய எதிர்பார்ப்பிற்கு ஏற்றவன். ஆனாலும் இந்தச் சாதிவேறுபாடு இருக்கிறதே. அவன் பிராமண குலத்தவனல்ல. அவனைத் திருமணம் புரிவதால் ஏற்படக்கூடிய பிரச்சனைகளைப் பற்றிச் சிந்தித்தே அவனைத் தவிர்த்து வந்தாள். அவன் பட்டயக் கணக்காளர் பரீட்சைக்குப் படித்து வருவதாகவும் அவள் அறிந்து வைத்திருந்தாள்.

இப்பொழுது மனம் முன்னும் பின்னும் பார்த்துக் கொண்டது.

மௌலீசனை மணந்து அவள் மகிழ்ச்சியாக வாழ முடியுமா?

நிச்சயமாக அவளால் இயலாது. அவனது அருகே நிற்பதைக் கற்பனை செய்யக்கூட அவளுடைய மனம் மறுத்து எகிறியது.

அவள் எப்படிப்பட்ட ஒருவன் தன் கணவனாக வர வேண்டுமென்று கற்பனை செய்து வைத்திருக்கிறாளோ, அப்படிப்பட்ட ஒருவனை அப்பா மருமகனாக்க விரும்பமாட்டார். அத்தகைய ஒருவனைத் தேடிக் கொணர்ந்து திருமணம் செய்து வைக்கவும் மாட்டார்.

பெற்றோரின் மனத்திருப்திக்காக ஒருவனைக் கணவனாக்கி வாழ்நாளெல்லாம் அவள் கவலைப்பட்டுக் கொண்டிருப்பது பைத்தியக்காரத்தனம்.

புலேந்திரன் அவளை மிகவும் விரும்புகிறான். அவளுக்கும் அவனைப் பிடித்திருக்கிறது, அவனுடன் அவள் மகிழ்ச்சியாக வாழ்வாள்.

மனம் மெல்ல மெல்ல மாற, அவள் புலேந்திரனுடன் பேசத் தொடங்கினாள். அந்த விடயம் எப்படியோ வீட்டைத் தேடி வந்துவிட்டது.

மகள் மீது கொண்டிருந்த நம்பிக்கையால் அப்பா அதை நம்ப மறுத்தார்.

அம்மா மகளின் ஆசைகளை ஓரளவு புரிந்து வைத்திருந்தாள். அந்த ஆசைகளின் பின்னே செல்லக் கூடியவள் என்பதும் அவளுக்குத் தெரியும். எனவே அவள் தான் விரும்பிய திசைக்குத் திரும்பியிருக்கலாமென அம்மா எண்ணினாள்.

''ஏன் அகல்யா, உன்னைப் பற்றி என்னென்னவோ கதைகளெல்லாம் அப்பாவுக்குச் சொல்லியிருக்கிறார்கள். அப்பா கவலைப்படுகிறார்.'' அம்மா அவளிடம் மெல்ல விசாரித்தாள்.

அவள் குழப்பத்துடன் மௌனமாயிருந்தாள். பிரச்சனை வரும். அதை எதிர்கொள்ள வேண்டும். அதற்கு என்னென்ன செய்ய வேண்டுமென்றெல்லாம் திட்டமிட்டிருந்தாலும், பிரச்சனை வந்ததும் மனம் கலவரப்பட்டுத்தான் போகிறது.

''என்ன பேசாமலிருக்கிறாய்?'' அம்மா விடுவதாயில்லை.

''என்ன கதையம்மா?'' தன்னை இயன்றளவு நிதானப்படுத்திக் கொண்டு அகல்யா கேட்டாள்.

''யாரோ ஒரு பெடியனோடை கதைச்சுத் திரிகிறியாம்.''

சட்டென்று அகல்யாவால் பதிலெதுவும் கூற முடியவில்லை.

"என்ன யோசிக்கிறாய்? மாணிக்கத்தாற்ரை மகனோடை கதைக்கிறனியோ?" அம்மாவின் குரலில் காரம் சேரத் தொடங்கியிருந்தது.

அவள் ஆமோதித்துத் தலையை அசைத்தாள்.

"பெடியனோடை பொம்பிளைப் பிள்ளையள் கதைச்சால் ஊரென்ன சொல்லுமெண்டு தெரியுந்தானே, இனிமேல் கதைக்காதை," அம்மா பேச்சை முடிவுக்குக் கொண்டு வந்தாள்.

பேச வாய் மறுத்தாலும் அந்தப் பேச்சை அத்துடன் முடிக்க அகல்யாவின் மனம் சம்மதிக்கவில்லை. இந்தச் சந்தர்ப்பத்திலேயே விடயத்தைச் சொல்லிவிடுவது நல்லது. எப்போதோ ஒருநாள் சொல்லியேயாக வேண்டும்.

"அம்மா வந்து.."

அவள் இதுவரை சிந்தித்துச் சிந்தித்துச் சேர்த்து வைத்திருந்த வசனங்களெல்லாம் அந்தக் கணத்தில் மறந்து போய்விட அவளுடைய நா வார்த்தைகளுக்காகத் தவித்தது.

"என்னடி சொல்லு?" விஷயத்தை ஊகித்துவிட்ட அம்மா கனலாகித் திரும்பினாள்.

அகல்யாவின் பார்வை அம்மாவைச் சந்திக்காது ஓடி மறைய நிலத்தை நாடியது.

"எனக்கு மௌலீசன் மாதிரி ஆக்களைப் பிடிக்கேல்லை"

"அதுக்காக..."

"புலேந்திரனுக்கு என்னைப் பிடிச்சிருக்கு" அவள் ஒருமாதிரிச் சொல்லி முடித்துவிட்டாள்.

"இது நடக்குமாடி? கொஞ்சமாவது யோசிச்சுப் பார்த்தியா? உன்ரை தம்பியை விடு. இரண்டு தங்கச்சிமார் இருக்கினம். அப்பாவுக்கு எப்பிடி இருக்கும்?"

அம்மா எதிர்பார்த்த விடயந்தானென்றாலும் அது காதில்பட்டதும் கோபமும் அழுகையும் கொதித்துக் குமுறக் கேட்டாள்.

"நிறைய யோசிச்சனம்மா. நான் எனக்கு விருப்பமான மாதிரி வாழவேணும். வாழ்க்கை முழுவதும் எனக்கு விருப்பமில்லாத மாதிரி வாழுறது கஷ்டமம்மா." அவளும் கண்ணீரோடு ஆனால் உறுதியாகக் கூறினாள்.

"சினிமாப் படம் பார்த்துப் பார்த்துக் கெட்டுப் போனாய்."

அம்மாவுடன் வாதிட விருப்பமின்றி அவள் எங்கோ பார்வையையும் அனுப்பி நாவில் வரத்துடித்த வார்த்தைகளையும் அமுக்கிவிட்டு நின்றாள்.

விடயம் அப்பாவுக்குத் தெரிந்து பெரும் பிரச்சனை எழுந்தபோது, புலேந்திரன் அவளை அழைத்துக் கொண்டு ஊரைவிட்டே வெளியேறிவிட்டான்.

புலேந்திரன், பல்வேறு கஷ்டங்களிடையே தன் உழைப்பிலேயே குடும்பம் நடத்தி, வித்தியாவையும் ராகுலையும் பெற்று, வளர்த்து, ஆளாக்கி விட்டான்.

அகல்யாவின் இல்லறம் மகிழ்ச்சிகரமாகவே இருந்தது. ஆனால் அப்பாவும் அம்மாவும் உயிருடனிருக்கும் போதே அவர்களை அவள் இழந்துவிட்டாள்.

அப்பா பிடிவாதமாகக் கல்லாக்கிய மனத்துடன் கடைசிவரை இருந்தார். அவரை மீறி எதையும் செய்ய இயலாதவளாகிவிட்ட அம்மாவும் அகல்யாவையோ குழந்தைகளையோ பார்க்கக் கூட முயலவில்லை.

அது ஒரு காலம்!

வித்தியாவுக்கும் அகல்யாவைப் போல சில ஆசைகள் இருக்கத்தான் செய்தன. மேலைத்தேய நாடொன்றில் போய் வாழவேண்டுமென்று அவள் விரும்பினாள். அதற்கேற்றாற் போல திலீபனைத் திருமணம்புரியத் தீர்மானித்தாள்.

அவர்களிருவரும் சந்தித்துப் பழக ஆரம்பித்ததுமே அகல்யாவிடம் வந்து,

''மம்மி, திலீபன் என்டொருதரை பை அக்ஸிடென்ரா சந்திச்சுப் பழகினன். இப்ப எங்களுக்குள்ளை ஒரு அண்டர்ஸ்ரான்டிங் வந்திட்டுது.''

- என்று வித்தியா கூறியபோது, அகல்யா அதை இயல்பாகக் கேட்டுக் கொண்டாள்.

வித்தியா திலீபனைப் பற்றி அவ்வப்போது அவளிடம் நிறையக் கூறியிருந்தாள். இன்றுதான் அவனை அகல்யா சந்திக்கப் போகிறாள்.

திலீபனின் மேல்நாட்டு நாகரீகம் அம்மாவுக்குப் பிடிக்குமோ பிடிக்காதோ என்ற தயக்கம் வித்தியாவுக்கு இருந்ததை அவள் அவதானித்திருந்தாள்.

"தலைமுறை இடைவெளி எல்லாக் காலத்திலும் இருக்குந்தான்" என்று அகல்யா நினைத்துக் கொண்டாள்.


அகல்யாவுக்குப் பிடித்தது அப்பா, அம்மாவுக்குப் பிடிக்கவில்லை. வித்தியாவுக்கு நல்லதாகப் படுவதை அவள் வெறுக்கவுங்கூடும்.

அழைப்புமணி இசையெழுப்பியது. அவள் சென்று கதவைத் திறந்தாள்.

வித்தியாதான்.

வித்தியாவைத் தொடர்ந்து வந்த திலீபனைக் கண்டதும் அவள் திகைத்து விட்டாள்.

தலையிலே குடுமி! ஒற்றைக் காதிலே தோடு!! ஆனால் கண்களில் மட்டும் போதையின் கிறக்கம்.



# நேர்த்தி

"சிவராத்திரிக்கு கீரிமலை சிவன்கோவிலுக்குப் போற ஒழுங்கு செய்யினமாம். போகப் போறீங்களே அம்மா?"

செய்தித்தாளைப் பார்த்துக் கொண்டிருந்த யாழினி கேட்டாள்.

தை பிறந்தது இப்போது போல இருக்கிறது. மாசி மாதம் வந்துவிட்டது. காலம் எவ்வளவு வேகமாக ஓடிக் கொண்டிருக்கிறது!

கண்கள் நாட்காட்டியை உற்று நோக்கினாலும் மனம் ஏதேதோ எண்ணங்களைக் காவிக் கொண்டலைய உட்கார்ந்திருந்தாள் அவள்.

"என்னம்மா பேசாமலிருக்கிறியள்?"

யாழினியின் கேள்விக்கு எதைக் கூறுவது? ஆழ்ந்த பெருமூச்சொன்று தான் பதிலாகப் புறப்பட்டது.

இந்த முறையும் அவளுடைய நேர்கடன் நிறைவேறப் போவதில்லை. 1996ம் ஆண்டு செய்த நேர்த்தி.

1991 முதல் தொடர் நிழலாய் வந்த வேதனை தீரப் போகிறதென்ற எதிர்பார்ப்பில் செய்யப்பட்ட நேர்கடன்.

1995ல் யாழ்ப்பாண வரலாற்றுப் பதிவான இடப் பெயர்வின் போது, வடமராட்சியில் போயிருந்து விட்டு, மீண்டும் வலிகாமம் செல்லலாமென்று அறிந்ததும் அங்கிருந்து புறப்பட்டு வந்து கொண்டிருந்த போதுதான் அவள் அப்படி நேர்த்தி வைத்தாள்.

அன்புமகள் யாழினியின் வாழ்வில் வசந்தகாலம் தோன்றப் போகிறதென்ற எதிர்பார்ப்பில் "அப்பனே, கேதீச்சரநாதா, யாழினியின்ரை கலியாணத்தைக் கெதியாய் முடிச்சுவையப்பா, வீட்டை போயிட்டமெண்டால் நவீனனும் திரும்பி வந்துவிடுவான். கலியாணம் நடந்த பிறகு, வருகிற சிவராத்திரிக்கு எங்களுடைய குடும்பத்தவர் எல்லாருமாய் கீரிமலை நகுலேஸ்வரத்திலிருந்து புறப்பட்டு, உன்னிடம் வந்து பாலாவியில் நீராடி பாற்காவடி எடுப்போம்" என்று அவள் செய்த நேர்க்கடன் இன்றுவரை தீராத கடனாகவேயிருக்கிறது.

அவள் வேண்டுதல் செய்த அந்த நாளில் அந்தக் கணத்தில் நெஞ்சம் நிறைந்திருந்த நம்பிக்கை, அதனால் பீறிட்டோடிய மகிழ்வு!

அந்த நிமிடத்திலேயே மனம் கும்மாளமிட்டுக் கொண்டு குதித்தோடிப் போய் கருகம்பனையிலுள்ள அவளது வீட்டு முற்றத்திலே நின்று துள்ளியது. 'இத்தனை வருடங்களின் பின் அந்தவீடு எப்படியிருக்குமோ?' என்ற ஏக்கம் போட்ட அணையையும் உடைத்துக் கொண்டோடியது உணர்ச்சிப் பெருக்கு.

வீடு இருக்கலாம். இல்லாமல் போயிருக்கலாம். இருந்தாலும் சீராக இருக்காது. எப்படியிருந்தாலும் எங்களுடைய ஊருக்குப் போய்விட வேண்டும். அந்த மண்ணில் நிற்கக் கிடைப்பதே ஒருபெரும் மகிழ்ச்சி தானே! அந்தப் பெரும்பேறு கிட்டப் போகிறது.

அவள் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்த வீட்டைச் சூழ்ந்து கிடந்த ஆயிரமாயிரம் நினைவுகள் உயிர்த்தெழுந்து போட்டி போட்டுக் கொண்டு ஓடிவந்து மனம் முழுவதும் இடம்பிடித்துக் கொண்டன.

மாரிக் காலத்திலே, அந்த மண்ணையும் தன்னுடன் இரண்டற இணைத்துக் கொண்ட செம்மஞ்சள் வெள்ளம் ஓடும் ஒழுங்கையிலே,

'மழைக்காலம் வழிவகுக்கும்
மிகக்கவனம் மக்காள்'

என்ற பாடலை, தோழியர்களுடன் சேர்ந்து உச்சஸ்தாயியில் பாடிக் கொண்டு, வெள்ளத்தைக் கலக்கிக் கலக்கி, பாடசாலையிலிருந்து வீடு வந்த சிறுவயதுக்காலம் -

ஆனைவிழுந்தான் பிள்ளையார் கோவில், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில், கீரிமலை சிவன் கோவில், கொல்லங்கலட்டி பிள்ளையார் கோவில், முதலிய கோவில்களில் திருவிழாக்கள் நடைபெறும்போது அங்கு சென்று வழிபட்டபின் வளையல்கள் வாங்கி, கைநிறைய அடுக்கிக் கொண்டு வந்து தோழிகளுக்குக் காட்டி மகிழ்ந்தது-

பூவரசமிலையைச் சுருட்டி, பப்பா இலைத்தண்டிலே சொருகி, நாதஸ்வரம் வாசித்து, தகரடப்பாவில் தவிலும் அடித்து, வீட்டிலே நண்பர்கள் சேர்ந்து திருவிழா நடத்தி,

தென்னங்குரும்பைகளில் தேர்கட்டி இழுத்த இன்பமான நாட்கள் -

முற்றத்தில் வீழ்ந்திருக்கும் பலாவிலைகளை குத்தூசியினால் சேர்த்து ஆடுகளுக்குத் தீனியாகக் கொடுத்து அவற்றுடன் துள்ளி விளையாடி மகிழ்ந்தது -

தம்மைச் சுற்றிப் படர்ந்த வெற்றிலைக் கொடிகளுக்குப் பற்றுக்கோடாகவும் பாதுகாப்பாகவும் நிமிர்ந்து நிற்கும் முள்முருக்குகளின் இலைகளை அப்பா கொக்குச் சத்தகத்தால் கொய்துவிட அவற்றைப் பொறுக்கிச் சேர்த்து பசுக்களுக்கு உணவாக்கிய காலம் -

அயராத முயற்சியால் பச்சைப்பசேலெனப் பயிர் வளர்ந்து பொன் விளைந்த பூமி! அதைவிட்டு அவர்கள் கதறக்கதறப் பிரிக்கப்படுவார்களென்று யாருமே கற்பனை கூடச் செய்ததில்லை. அந்த மண்ணை மனதால் மட்டும் தொட்டுப் பார்க்க வேண்டியவர்களாக அவர்கள் வாழ நேருமென்று யாருமே நினைத்ததில்லை.

அந்த மண்ணில் போய் நிற்கப் போகின்றோம் என்ற பொங்கிவந்த ஆவலோடு வடமராட்சியிலிருந்து அவர்கள் வந்தார்கள். ஆனால் வலிகாமத்தில் கால் வைத்த சில மணி நேரங்களில் அந்த ஆவல் வடிந்து போன கொடுமை அப்படியே நிலைத்து விட்டதே.

நகுலேஸ்வரநாதா, வலிகாமத்திற்கு வந்து, சுன்னாகத்தில் வாழத் தொடங்கி, நான்காண்டுகள் கழிந்துவிட்டனவே. இன்னும் எங்கள் வீட்டு முற்றத்திற்கு மனங்கள் மட்டுமே சென்று வருகின்றன. என்று நாங்கள் அங்கே போகப் போகின்றோம்?

உன் கோவிலில் சிவராத்திரிக்குக் கண் விழித்து, எல்லாச் சாமங்களும் அபிஷேகங்களும் பூசைகளுங்கண்டு, கீரிமலைக் கேணியில் தீர்த்தமாடி வணங்கி வழிபடும் காலம் வராதா? சிவராத்திரிக்கு உன்னை வழிபடுவதற்கு அனுமதி கேட்டு நிற்க வேண்டியிருக்கிறதே. நாம் சுதந்திரமாக உனது சந்நிதிக்குச் சென்று மனமார வணங்க வேண்டும். படையினரின் அனுமதி பெற்றுத்தான் உன்னிடம் வரவேண்டுமென்ற நிலையை மாற்றி விடு ஐயா.

உன் கோவிலிலேதானே யாழினியின் திருமணத்தை நடத்துவதாக எண்ணியிருந்தோம். அந்தத் திருமணம் நடைபெறாது போகுமென்றும் நாங்கள் நினைத்தது கிடையாது.

நவீனனும் யாழினியும் சிறுவர்களாக, இருந்த பொழுதே அவர்களுக்குத் திருமணம் செய்து வைப்பதென நாம் தீர்மானித்தோம். எனது அண்ணன் தம்பிப் பிள்ளையின் மகன்தான் நவீனன். மச்சானுக்கும் மச்சாளுக்கும் திருமணம் செய்து வைக்கும் முறை எம் முன்னோர் காலம் முதல் இருந்ததனால் போலும் அண்ணன் வீட்டாருக்கும் எங்களுக்கும் இப்படியோர் எண்ணம் ஏற்பட்டது. எண்ணம் வெளிப்படையாகக் கூறப்பட்டுவந்த காரணத்தால் நவீனன், யாழினி இருவரது மனங்களிலும் அது பதிக்கப்பட்டது.

சிறுவயது முதலே அவர்களை வைத்து எவ்வளவு கேலிகளை நாம் பேசியிருப்போம். அண்ணன்கூட அடிக்கடி இப்படிக் கேலி செய்வதை நான் கேட்டிருக்கிறேன்.

இருந்துபேசி திருமணத்தை முடிவு செய்யாத தவறோ என்னவோ, அண்ணனே அனைத்தையும் மறந்து நவீனனுக்கு வேறு திருமணம் நடத்தத் தீர்மானித்தார்.

யாழினி எங்களுக்கு ஒரே மகள். அவளுக்குத்தான் வீடு, வளவு, தோட்டக்காணி எல்லாம் கொடுப்பதாக இருந்தோம்.

எனது அம்மா காலத்து நாற்சாரம் வீடென்றாலும் சீராகப் பேணப்பட்டு நன்றாக இருந்தது. யாழ்ப்பாணத்தில் அந்தக் காலத்தில் வயலும் தோட்டங்களுமாக வளமாக வாழ்ந்தவர்கள் நாற்சாரம் வீடுதான் கட்டியிருந்தார்கள். நடுவே முற்றம். சுற்றி நாற்புறமும் விறாந்தைகள். அதையடுத்து சுற்றிவர அறைகள், சமையலறை முன்புறம் தலைவாசல். இன்றைய ஹால் என்று கூறலாம்.

அழகாக வளர்ந்து படர்ந்த பச்சைப் பசேலென்ற வெற்றிலைத் தோட்டம். அதைச் சூழக் காவல் வீரர்கள் போல வாழைகள், தோடைகள், எலுமிச்சைகள், கமுகுகள் என்பன வரிசையிட்டு நிற்க பசுமையும் குளிர்மையுமாக வீட்டின் மூன்று புறங்களுமிருக்கும்.

நவீனனும் நல்லதொரு விவசாயி. குரக்கனும் பயறும், மிளகாயும், வெங்காயமுமென்று செழித்துக் கிடந்த எங்கள் மண்ணில் பொன்னெடுத்து வாழ்வானென்ற நம்பிக்கை எங்களுக்கிருந்தது.

பலாலியிலிருந்து மெல்ல மெல்லப் பரவிய போர் மேகம், எங்கள் பகுதியையும் சூழ்ந்த போது கையிலெடுத்த பொருட்களோடு வீட்டை விட்டு இடம் பெயர்ந்தோம்.

வீடுமில்லை. காணியுமில்லை. நிவாரணப் பொருட்களை நம்பி வாழ வேண்டிய நிலை. அந்த மண்ணை விட்டுப் பெயர்க்கப்பட்டதும் மூலவேரறுந்த மரங்களானோம்.

கடவுளே, நீதான் இவ்வளவு துயர இருள் சூழ்ந்த காலத்திலே, தாங்க முடியாத துன்பங்களையெல்லாம் தாங்கக்கூடிய பலத்தை என்னுடனிருந்து தந்திருக்கிறாய்.

நகுலேஸ்வரத்தான் நாங்கள் புறப்படும்போது எங்களுடனேயே புறப்பட்டு வந்து விட்டான். அதனாலேதான் தன் கோவிலின் பூசை வழிபாடுகள் பற்றி அக்கறையில்லாதிருக்கின்றான்.

ஐயனே, எங்களால் எங்கள் வீடுகளை மறக்க முடியவில்லை. உன்னால் உன் கோவிலை எப்படி மறக்க முடிந்தது? நீ பற்றற்றவன் என்பதாலா? ஆனால் எங்களால் உன் கோவிலை மறக்க முடியவில்லையே.

மீண்டும் நாங்கள் எங்கள் மண்ணில் போயிருக்க வேண்டும். நகுலேஸ்வரத்தில் உன்னை வழிபட வேண்டும். அங்கே யாழினியின் திருமணம் நடைபெற வேண்டும். அதற்கு அருள் செய் ஐயா.

நவீனனின் தாய்மாமன் இராசதுரை - தன்னுடைய மகளுக்கு நவீனனைத் திருமணம் செய்து வைக்கவென்று மிகவும் கஷ்டப்பட்டு, ஜேர்மனிக்கு அவனை அழைத்தார்.

எங்களுடைய சனம் எந்த நாட்டுக்குப் போனாலும் இந்த சாதி, சீதனம் என்ற பேய்பிசாசுகளை விரட்டிவிட முடியாமல் தங்களுடைய மனங்களிலே காவிக் கொண்டு போய் வைத்திருக்கிறார்கள்.

இதனாலேதான் இராசதுரை மாமாவும் தன்னுடைய இனத்துக்குள் சொந்தக்காரனான நவீனனை மருமகனாக்க வேண்டுமென்று முடிவுசெய்தார்.

ஆனால் அவருடைய மகள் யாழ்ப்பாணத்திலே பிறந்தாலும் சிறுவயது முதலே ஜெர்மனியில் வளர்ந்தவள். நவீனனுடைய பழக்க வழக்கம் போக்குவரத்து வித்தியாசம்- அவளுடைய போக்கும் பழக்கவழக்கங்களும் வேறு வகையானது. அதனால் அவள் இவனைத் திருமணம் செய்ய மறுத்து விட்டாள்.

கடைசியாக யாழினியை இங்கே விட்டுவிட்டுப் போய், அங்கேயும் இப்படித் திருமணம் நடக்காது போனதுடன் அவன் திருமணம் செய்யாமலே இருக்கிறானாம். அவனுக்கு அங்கேயுள்ள வாழ்க்கை முறையும் பிடிக்கவில்லையாம். இங்கே எங்களுடைய நிலத்திலே பாடுபட்டு தோட்டம் செய்யத்தான் விருப்பமாம். இந்தச் சுதந்திரமும் சந்தோஷமும் அங்கேயில்லையென்கிறானாம்.

ஆனால் அந்தச் சுதந்திரமும் சந்தோஷமும் எங்களிடமிருந்தும் தொலைந்து போய்விட்டனவே. நாம் மகிழ்வுடன் வாழ்ந்த நிலம் எமக்குத் தொலைத்துப் போய்விட்டதே.

இந்த வேதனையால் எத்தனைபேர் மெல்ல மெல்ல உக்கி உயிரை விட்டுவிட்டார்கள். யாழினியின் அப்பாவும் இந்தக் கவலையாலும் மகளின் திருமணம் நின்று போன வேதனையாலும் பக்கவாதம் வந்து, நோயோடு போராடி தோற்று மரணத்திடம் சரணடைந்தார்.

"என்னம்மா, நானும் வாறன். கோவிலுக்குப் போட்டு வருவமே?"

அவளுடைய நினைவோட்டத்தை யாழினியின் கேள்வி நிறுத்திவைத்தது.

அவள் மகளைத் திரும்பிப் பார்த்தாள்.

"நான் என்னுடைய வீட்டிலையிருந்து தான் நகுலேஸ்வரத்தானைத் தரிசிக்கப் போவன். அப்போ நவீனனும் வந்து உன்னுடைய கலியாணமும் நடந்துவிடும். கீரிமலையிலையிருந்து என்னுடைய நேர்த்திக்கடனை நிறைவேற்ற திருக்கேதீஸ்வரம் போவோம். அப்பிடிப் போகேக்கை ஒரு துவக்குக்கூட கண்ணிலை படாது." அவள் உறுதியுடன் கூறினாள்.



# இவனை மாதிரி ஒருவன் வேலை செய்தால்...

உச்ச வேகத்தில் வேலை செய்து கொண்டிருந்த மின் விசிறியின் கீழ் கோவையொன்றைப் பார்வையிட்டு அதில் ஆழ்ந்து போயிருந்தார் பகுதித்தலைவர் ராகுலன்.

தொலைபேசி ஒலி ஒவ்வொன்றிற்கும் பதிலளித்து இணைப்புகள் வழங்கி சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தாள் சுகன்யா.

நீள்சதுரமான அந்தப் பணியகத்தின் முக்கிய அதிகாரி ராகுலன் என்பதைப் பார்த்ததுமே புரிந்துகொள்ளக் கூடிய வகையில் - ஒரு பெரிய மேசை, அதன்மேல் அலுவலக உபகரணங்கள் தொலைபேசி, கோவைகள் - அவரது மேசைக்கு எதிராக ஏனையோரது மேசைகள் ஓர் ஒழுங்கில் வைக்கப்பட்டிருந்தன.

கணநாதன், கரிகாலன், ரேணுகா, பகீரதி, புண்ணியசீலன் எல்லோருமே தத்தமது வேலைகளில் மூழ்கிப் போயிருந்தனர். ஆனாலும் புண்ணியசீலன் அப்படியொன்றும் பெரிதாக வேலை செய்யவில்லை. வேலை செய்வதாக நடிக்கிறான் என்ற அபிப்பிராயம் அவனைப் பார்த்ததுமே ஏற்பட்டது.

கையில் தேனீருடன் உள்ளே நுழைந்தான் நர்மதன்.

"நர்மதன், இவ்வளவு நேரம் எங்கே போயிட்டு வாறாய்? லீவ் பைலை எடுத்துத்தர ஆளில்லை," கரிகாலன் அவன் வருமுன்பே எரிந்துவிழுந்தான்.

"நர்மதன் இதைக் கொண்டு போய் பொஸ்ஸின்ரை மேசையிலை வை" பகீரதி அழைத்தாள்.

தேனீரை புண்ணியசீலனின் மேசையில் வைத்த நர்மதன் பகீரதியின் கையிலிருந்த கோவையைக் கொண்டு சென்று ராகுலனின் மேசை மீது வைத்த பின் லீவு கோவையை எடுத்துவரச் சென்றான்.

"இந்தக் கடிதங்களையெல்லாம் போஸ்ற் ஒபிஸுக்கு போய் போட்டுவிட்டு வா நர்மதன்." ரேணுகா அவசரப்படுத்தினாள்.

இடையே ராகுலனின் அழைப்பு மணி நர்மதனை அழைத்தது.

"இவனை மாதிரி ஒருவன் வேலை செய்தால் காரியாலயத்திலே வேலைகள் எப்படி நடக்கும்? காலமை ஒன்பது மணியிலையிருந்து லீவு பைலைக் கேக்கிறன். இன்னும் தந்தபாடில்லை" கரிகாலன் ஆரம்பிக்க புண்ணியசீலன் தொடர்ந்து நர்மதனைக் குறை கூறினார்.

"நேற்று நான் கேட்ட கந்தசாமிச் செட்டியாரின்ரை பைலை இன்னும் தரேல்லை. காலமை கேட்ட பைல் எப்பிடி வரும்? ஒழுங்காய் எதையாவது வைச்செடுத்தால்தானே?"

'கணநாதன் ஐயா கூப்பிடுகிறார்' நர்மதன் வந்து புண்ணிய சீலனிடம் கூறினான்.

"கந்தசாமிச் செட்டியாரின்ரை கணக்கைப் பற்றித்தான் கேக்கப்போறார், நீர் பைலை எடுத்துத் தரேல்லை." புண்ணியசீலன் காரமாக நர்மதனைப் பார்த்துக் கூறினான்.

"நான் அண்டைக்கு எடுத்துத் தந்தனான்."

"பிறகு திருப்பி நான் தந்திட்டன்.."

"மிஸ்ரர் புண்ணியசீலன் இங்கை வாங்கோ. நர்மதனோடை என்ன வாக்குவாதம்?" கணநாதன் அழைத்தார்.

"செட்டியாரின்ரை பைலை நர்மதன் இன்னும் எடுத்துத்தரேல்லை. அதுதான்..." புண்ணியசீலன் ஆரம்பிக்க -

"நான் எடுத்துக் குடுத்தனான், அவர் திருப்பித்தரேல்லை" என்று நர்மதன் இடைமறித்துக் கூறினான்.

'இவர் பைலை எங்கையாவது வச்சிட்டு அந்தச் சாட்டையே சொல்லிக் கொண்டு வேலை செய்யாமலிருப்பார்.' மனதுக்குள் கணநாதன் அலுத்துக் கொண்டார்.

'இரண்டுபேரும் இப்பிடிச்சாட்டாமல் பைலைத்தேடி எடுத்து உடனை அவரின்ரை கணக்கைச் சரிபாருங்கோ. மிஸ்டர் புண்ணியசீலன்; இரண்டு மணிக்கிடையிலை வேலை முடியவேணும். உங்களைப்

போல ஆட்களிருந்தால் வேலை எப்படி நடக்கும்?'' தகிக்கத் தகிக்க வார்த்தைகள் கணநாதனின் நாவிலிருந்து உதிர்ந்தன.

'இவர் பெரிய திறம் வேலை செய்து கிழிக்கிறார்.' புண்ணியசீலனின் மனம் கறுவியது.

''கலியாணவீடு பதினொரு மணிக்கு. சாப்பாட்டு நேரம் போய் இறங்காமல் தாலிகட்டுற நேரமாவது போக வேணும். நேரத்துக்கு வந்து கூட்டிக் கொண்டு போவீங்களோ?'' மனைவி நிரந்தரியின் கேள்விக்கு.

''சரியாகப் பதினொன்றரைக்கு வருவன். நான் வந்த பிறகு மேக் அப் செய்து கொண்டு நிற்காமல் ரெடியாய் நில்லும்'' என்று காலையில் கூறியது நினைவில் பளீரிடுகிறது.

பதினொன்றரைக்கு கலியாண வீட்டுக்கு போனாலும் சாப்பிட்டுவிட்டு திரும்பி வீட்டிலே நிரந்தரியை விட்டு அலுவலகம் வர இரண்டு மணியாகும். புண்ணியசீலனின் மனம் கணக்குப்போட்டது.

'சாய்! இண்டைக்கெண்டு இந்தாள் கணக்கை இரண்டு மணிக்குள்ளே முடியெண்டு நிக்குது' அவன் உள்ளே குமுறினான்.

'ஆள் சூடாயிட்டார். இனிச்சாட்டும் சொல்லேலாது. எப்பிடியும் வேலை முடிச்சாகவேணும்.' புண்ணியசீலன் சுறுசுறுப்பானான்.

'நர்மதன் பைலை எடுக்கட்டும்' என்று இதுவரை படுத்துறங்கிய அவனது மூளை விரைந்து வேலை செய்தது.

'அந்தக் கோவை போயிருக்கக் கூடிய இடம் எது?' நமக்குத் தேவையென்றதும் மூளை சுறுசுறுப்பாகவும் திறமையாகவும் இயங்குமோ?

கோவையிருக்குமிடத்தை அது படுவேகமாகத் தேடிக் கண்டுபிடித்தது.

கடிதமொன்று அனுப்புவதற்காக கோவை பகீரதியிடம் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். அவளிடம் போய் கோவையை எடுத்துவந்து சரிபார்க்க வேண்டும். அவசரமாக விரைந்தான் புண்ணியசீலன். ஆறுநாட்களாக இழுபட்ட வேலை அரைமணி நேரத்தில் முடிகிறது.

"ஐயா உங்களை வரச்சொன்னார்"

நர்மதன் வந்து கூறியதுமே என்னவோ ஏதோவென மனம் தவிக்க ராகுலனின் முன்னே போய் நின்றார் கணநாதன்.

கண்கள் கோபத்தை உமிழ மௌனத்தில் கோபத்தை உணர்த்தியவாறு கடிதமொன்றை நீட்டினார் ராகுலன்.

'மூன்றாவது நினைவூட்டல்' என்னும் வாசகம் சிவந்த எழுத்துக்களில் கடிதத்தின் உச்சியில் அமர்ந்திருந்தது.

'சீ! முந்தநாள் பைலை எடுத்துவைத்துவிட்டு அனுப்ப மறந்துவிட்டேனே' கணநாதன் பச்சாதாபம் பட்டுக்கொண்டான்.

"பைலை எடுத்துத் தொடங்கினனான். செட்டியாரும் ரங்கனும் வந்து அந்தப் பிரச்சனை

தொடங்கினதாலை இதை மறந்துபோயிட்டேன்'' தயக்கத்துடன் கூறினார் கணநாதன்.

"மறதிக்காரர் வேலைக்கு வரக்கூடாது" பட்டென்று இராகுலன் கூறினான். உங்களைப் போலை ஆக்கள் வேலை செய்யிறதாலைதான் இந்தக் கந்தோர் இப்பிடிப் போகுது. தொடர்ந்து மனதிற்குள் புறுபுறுத்தான்.

கணநாதனின் மனம் சுருண்டுபோயிற்று. அவர் அந்த நினைவூட்டல் கடிதத்துடன் அவ்வறையிலிருந்து வெளியேறினார்.

நர்மதன் லீவுக்கோவையைத் தேடிக் கொண்டிருந்தான். சென்றவாரம் ஏதோ தேவைக்காகப் புண்ணியசீலனிடம் அதைக் கொடுத்ததாக நினைவு. அவர் திரும்பத் தரவில்லை.

எங்கு போயிருக்கும்?

இப்படிப்பட்ட முக்கிய ஆவணங்களை எடுப்பவரும் திரும்ப வைப்பவரும் ஒரு பதிவேட்டில் பதிந்து கையொப்பமிட்டு எடுக்க வேண்டுமென்று சுற்றுநிருபமிருக்கிறது. அதை நடைமுறைப்படுத்துவது நேரச்செலவென்பது அவர்கள் கருத்து. அவன் படும் இந்தப்பாடு மனதில் உறைப்பதில்லை.

அழைப்பு மணி நர்மதனை அழைக்கிறது. அவன் விரைந்து சென்று ராகுலனின் முன் நின்றான்.

''நர்மதன், நாளைக்குச் காலமை செட்டியார் வீட்டுக்குப் போய், அவர் தர்ற இரண்டு சாவலையும் வாங்கிக் கொண்டு எங்கடை வீட்டுக்குப் போய் ஒன்டை

விட்டிட்டு மற்றதை அடிச்சு வெட்டிக்குடுத்திட்டு வேலைக்கு வா.''

தேடிக் கொண்டிருந்த கோவைகள் நர்மதனின் நினைவில் தோன்றின.

''இவரைப் போலை ஆக்கள் கந்தோரிலை இருந்தால் பைலைத் தேடி எடுக்க எப்படி நேரம் வரும்?''

நர்மதன் மனதிற்குள் நினைத்துக் கொண்டான்.



# என்னுடைய ஆசை

எவ்வளவு கால ஆசை!

1996 ஜுனோ? ஜுலையோ? இடம் பெயர்ந்து தென்மராட்சிக்குச் சென்று திரும்பி வந்த பின், மனம் பதற, கண் பனிக்கப் பார்த்துக் கவலைப்பட்ட அந்த எங்கள் வீட்டினுள் மீளக்குடியமர்ந்து, மெல்ல மெல்ல மனதைச் சுதாகரித்த பின் மெல்லத் துளிர் விட்ட ஆசை!

"எங்களின் வீட்டு உடைவுகளைத் திருத்தி ஒருக்கால் பெயின்ற் அடிப்பமா?"

வாய் வழியே அப்பாவின் முன் தலை நீட்டிய அந்த ஆசைத் துளிர்...

"கனக்க ஆசைப்படாதையப்பன், இன்னும் என்னென்ன நடக்கப் போகின்றதோ? காசை இதுக்குள்ள கொட்டி என்ன பிரயோசனம்?"

அப்பாவின் பதில் வாமனாவதாரத்தின் மூன்றாம் அடியாக அந்த ஆசைத்துளிர் மேல் அழுத்த, அது அமுங்கிப் போகின்றது.

மீண்டும் மீண்டும் அது விடாப்பிடியாய்த் துளிர்த்த போதும் நடைபாதையில் உயிர்க்க முனைந்த புல் நுனியாய் முடங்கிப் போனது.

ஐந்தாண்டுகளின் பின் வந்த அண்ணனின் திருமணந்தான் அந்த ஆசையை முழுமையுறச் செய்தது. வீடு புதிய நிறப்பூச்சில் ஜம்மென்று நிமிர்ந்து நின்றது. அவனுக்கு மனம் முழுவதும் மகிழ்ச்சியாய்ப் பூத்துக் குலுங்கியது.

வீட்டின் அந்த அழகு கெட்டுவிடக்கூடாதேயென்று இந்த ஒரு மாதமாக, பட்ட அழுக்குகளையும், படர்ந்த தூசியையும், அவ்ன் பார்த்துப் பார்த்துத் துடைத்து, மெருகு கெடாமல் வைத்திருந்தான்.

அதற்குக் குந்தகமொன்று வருமென்று அவன் கனவுகூடக் காணவில்லை.

கடைக்குப் போய்விட்டு வந்தவனுக்கு முன்மதிலைப் பார்த்ததும் கொதித்துப் பொங்கிக் கொண்டு வந்தது.

பத்தே நிமிடங்களில் சீ...

இரண்டு வர்ணச்சுவரொட்டிகள் மதிலின் நடுவே... அவனது ஆசையை ஊடறுத்து விட குருதி கொப்பளிக்கும் வேதனை... கொண்டு வந்த பொருட்களை உள்ளே வைத்து விட்டு வந்து, ஒட்டிய ஈரப்பசையுடனேயே அவற்றை உரித் தெறியும் ஆத்திரத்துடன் உள்ளே நுழைந்தால், அப்பா குறுக்கும் நெடுக்கும் நடந்து கொண்டிருக்கின்றார்.

"பெயின்ற் அடித்து ஒரு மாதமாகேல்லை. இந்த நாசமாய்ப் போன எலெக்சன் ஆறுமாதத்துக்கு ஒருக்கால்

வருகுது. கொஞ்சம் எண்டாலும் யோசனை வேண்டாமே. இப்படி ஒட்டிப் போட்டுப் போறாங்கள்." அவர் பட பட வென்று வெடித்துக் கொண்டிருந்தார்.

"ஓமப்பா உடனே அதைக் கிழிச்செறிய வேணும்." அவசர அவசரமாக அவன் பொருட்களை மேசை மீது வைத்துக் கொண்டே கூறுகையில்,

"டேய், விசர்வேலை பார்க்காதை, அவங்கள் கண்டா என்ன நடக்கும்? தெரியுமே?" அம்மா அவனை மிஞ்சிய அவசரத்துடன் ஓடிவந்து குறுக்கிட்டாள்.

"நான் அப்பாவையே அதைக் கிழிக்கவிடவில்லை. நீ என்னடாவெண்டால்..." அம்மா தொடர்ந்தாள்.

"நானென்ன றோட்டு றோட்டாயே கிழிக்கப் போறன். எங்கடை மதிலிலை ஒட்டினதைத்தானே கிழிக்கப் போறன்?" அவன் நியாயம் பேசினான்.

"உங்களுக்குத் தெரியாதே அண்ணை? முன் வீட்டு அன்ரியின்ரை அண்ணை அவரின்ரவீட்டு மதிலிலை ஒட்டின நோட்டீசைக் கிழிச்சுக் கொண்டு இருக்கேக்கை வந்து தான் ஆளையே கொண்டு போட்டினமாம்." தங்கை மல்லிகா விபரம் கூறினாள்.

"சும்மா அளக்காதை, யாரும் அப்படிச் செய்வினமே? அவர் அவையிட்ட விளக்கமாய்ச் சொல்லேல்லைப் போல." அவன் நம்ப மறுத்தான்.

"வேணுமெண்டால் போன செவ்வாய்க்கிழமை 'வலம்புரி' பேப்பரைக் கொண்டு வந்து காட்டட்டுமா?" மல்லிகா 'வலம்புரி'யை எடுத்துவந்து நிரூபிக்கவென உள்ளே சென்றாள்.

"அம்மா பயப்படுகிறா, இரவு ஒருத்தரும் பார்க்காத நேரம் கிழிக்கச் சொல்கிறா" அப்பா எரிச்சலுடன் கூறினார்.

அவன் மெல்லச் சிரித்தான்.

சுவரில் ஒட்டினால் வீட்டுக்காரரர் பேசுவார்கள் என்று பயந்து இரவிரவாக சுவரொட்டிகளை ஒட்டிய காலம் போய், ஒட்டிய சுவரொட்டிகளைக் கிழிக்க வீட்டுக்காரரர் இருட்டைத் தேட வேண்டிய காலமாகி நாடே இருட்டைத் தேடி.... சீ.... அவனது ஆசை ஈடேறி பளிச்சென்று அழகாகக் காட்சியளித்த அந்த மதில் மனத்தில் தோன்றுகின்றது.

"சீ அப்படியிருக்காது. அந்தத் தாத்தா விபரமாகக் கூறியிருந்தால் அவர்கள் எதுவுமே செய்திருக்கமாட்டார்கள். செய்வதைத் தேர்தல் காலத்தில் செய்தால் அவர்களுக்குத்தானே நஷ்டம்? அதுகூடத் தெரியாதா அவர்களுக்கு?" அவனுடைய அறிவு அதை நம்ப மறுத்தது.

தங்கை நீட்டிய 'வலம்புரி' வேறுகதை கூறி நம்பச் செய்தது.

"நான் அவையைப் போல இருந்தால் அப்படிச் செய்திருக்க மாட்டேன்" அவன் தன்னை அந்த இடத்தில் வைத்துக் கற்பனை செய்து விவாதித்தான்.

"உனக்கு மதில் முக்கியம். அவைக்கு நோட்டீஸ் முக்கியம்." அம்மா கூறினாள்.

"அவையிண்ட நோட்டீஸைக் கிழிக்கவெண்டே சில பேர் திரியக்கூடும். அவை அப்படி நினைச்சிருப்பினம்." அப்பா தன் கருத்தைக் கூறினார்.

"வீட்டிற்கு முன்னால் பிடித்திருக்கிறார்கள். அக்கம் பக்க வீட்டுக்காரரைக் கேட்டால் உண்மை தெரியுந்தானே" அவனது விவாதம் தொடர்ந்தது.

"அவர்கள் சொல்வது உண்மையாயிருக்காது. மனிதர்கள் சொல்வதெல்லாம் பொய்யாகத்தானிருக்க வேண்டுமென்று அவர்கள் நினைத்திருக்கலாமில்லையா?" மல்லிகா சிரித்துக் கொண்டே கேட்டாள்.

"இப்ப இந்தத் தேவையில்லா விவாதமெல்லாம் எதுக்கு? முன்வீட்டு அன்ரி சொன்னவ. அவை அவரைக் கொண்டுவந்து விடேக்கை. நோட்டீஸைக் கொடுத்து நோட்டீஸை நிக்கிறவைக்குக்குடுப் பிச்சவையாம். இதிலையிருந்து உனக்கு எல்லாம் விளங்க வேண்டும். நாங்கள் உங்களை வளர்க்கப்படுகிறபாடு. நீங்களென்னெண்டால்..." அம்மாவின் கோபம் கூடுகிறது.

"அந்தத் தாத்தாவைக் கிழவனெண்டுதான் மன்னிச்சு விட்டவையாம். தலைக்கு 'டை' அடிக்காததிலை தப்பினவர். நீயோ, அப்பாவோ அகப்பட்டியளோ அவ்வளவு தான்." மல்லிகா வேடிக்கையாகப் பயமுறுத்தினாள்.

"எலக்ஷன் முடிய மதிலுக்குப் பெயின்ற் அடிக்க அப்பா சம்மதிக்கார். எவ்வளவு வருசமாய் நான் ஆசைப்பட்டுச் செய்தது. காஞ்சிட்டா கிழிக்கிறது கஷ்டம். கொஞ்ச இடம்தானெண்டாலும் என்ரை ஆசை போல வீடிருக்க வேணும். டப்பெண்டு கிழிச்சிட்டுவாறன்."

அவன் சிட்டாய்ப் பறந்தோடி மதிலைத் துப்புரவாக்கிக் கொண்டிருந்தான்.

வீதியின் முனையில் திரும்பி விரைந்து வந்த வாகனத்தைக் கண்டதும் அப்பா, அம்மா, மல்லிகா மூவரின் இதயங்களும் இயக்கத்தை நிறுத்தத் தயாராகின. "தம்பி..." அம்மா அலறிக் கொண்டோடினாள்.

வாகனம் படாரென்று நின்று கதவு திறந்தது. இறங்கியவர்...? இவரா? ஐயோ...!

"புதிதாய்ப் பெயின்ற் அடிச்ச மதிலிலை நோட்டீஸ் ஒட்டீட்டினம் போலை. மன்னிக்கவேணும். இந்த நோட்டீஸ் ஒட்டுறதுக்கெல்லாம் முக்கியமான இடங்களிலை ஒரு தனியிடம் ஒதுக்க ஒழுங்கு செய்யுறதும் என்னுடைய ஒரு திட்டம் பாருங்கோ. எனக்கு உங்களின்ரை பிரச்சினை விளங்குது. நான் பிரதேசசபைத் தலைவராய் வந்த பிறகு இந்தப் பகுதியை அழகாய், துப்புரவாய் வைச்சிருக்க எவ்வளவு செய்திருக்கிறன். வித்தியாசம் உங்களுக்கே தெரியும். வீடு, கிராமம், பிரதேசம் எல்லாம் அழகாயிருக்க வேணுமெண்டது தான் என்னுடைய ஆசை..." இளம் முறுவலுடன் அவனது தோளிலே ஆதரவாகக் கைபதித்து அவர் கூறிக் கொண்டிருந்தார்.

'சங்குநாதம்'
ஜூன் 2002



# பாலுக்குப் பாலகி...

அவிய வைத்த பனங்கிழங்கை இறக்கி வைத்தாள் சுலோசனா. அடுத்த பனங்காணியில் மேயக்கட்டியிருந்த பசுவின் குரல் இருள் சூழ்ந்து மாலை மறைவதை அவளுக்குக் கூறியது.

'அதையும் கன்றையும் வீட்டிற்குக் கொண்டு வந்து பால் கறக்க வேணடும். நாகேந்திரம் அண்ணை வீட்டுக்கு நேரத்[illegible]டு பால்கொடுக்க வேண்டும். சரசக்காவும் கன்[illegible]ணி மாமியும் பிந்தி முந்திப் பால் கொடுத்தாலும் அ[illegible] [illegible]டாரகள், நாகேந்திரம் அண்ணை பிந்தினால் [illegible] சொலலுவார்.'

அந்த நினைவு கால்களுக்கும் கைகளுக்கும் சுறுசுறுப்பூட்டுகின்றது.

“பிருந்தா, வா பிள்ளை. மாடு, கண்டு கொண்டு வரவேணும். நான் மாட்டைக் கொண்டு வர நீ கண்டைக் கொண்டு வா” மகளை உதவிக்கு அழைத்தாள் சுலோசனா.

“ஒவ்வொரு நாளும் கண்டு கொண்டு வர என்னைக் கூப்பிடுங்கோ. பால் மட்டும் தரமாட்டியள், எந்த நாளும் வெறுந்தேத்தண்ணிதான்.”

இருந்த இடத்தை விட்டசைய மலே பிருந்தா பதில் கூறினாள், சுலோசனாவின் மனம் பதைத்தது.

"என்ன செய்யிறது குஞ்சு. பால் மூண்டு வீட்டுக்காரருக்கு குடுக்கவே போதாது."

"கொஞ்சம் மிஞ்சினாலும் தம்பிக்குக் குடுக்கவேணும்," கோபம் கொதிக்க, அம்மாவின் விளக்கத்தைத் தொடரவிடாது இடைமறித்துக் கத்தினாள் பிருந்தா.

அவளது நியாயமான கோபத்தைக் கண்டு தன் இயலாமைக்காகக் கண்கலங்கினாள் அந்தத்தாய்.

"பாலைக் குடுத்து வாங்கிற காசிலை தானே அரிசி, மா எல்லாம் வாங்கிச் சமைக்க வேணும், பிள்ளை வளர்ந்த பிள்ளைதானே, குஞ்சுக்கு எல்லாம் விளங்குந்தானே."

தாய் தம் வறுமையைப் புரியவைக்க முயன்றாள்.

அந்தப் பிஞ்சு உள்ளத்தில் என்ன சிந்தனையோட்டம் ஏற்பட்டதோ? அவள் எழுந்நு தாயுடன் செல்லத் தயாராகினாள்.

"என்ரை செல்லக் குஞ்சு"

பிருந்தாவைக் கட்டியணைத்து முத்தமிட்டாள் சுலோசனா.

இருவரும் பனங்காணியை நோக்கி நடந்தார்கள்.

பசுவையும் கன்றையும் வீட்டிற்குக் கொண்டுவரும் போது, கன்றுடன் துள்ளலும் ஓட்டமுமாக பிருந்தா வந்து கொண்டிருந்தாள்.

"கவனங்குஞ்சு. கண்டு ஓடிச்சுதெண்டால் விழுந்துபோவாய்."

மற்றொரு பயமறியாத இளங்கன்றாகத் துள்ளிய மகளுக்கு சுலோசனா அடிக்கடி கவனமாக இருக்கும்படி அறிவுறுத்திக் கொண்டு வந்தாள்.

கன்றுடன் ஓடிய பிருந்தாவின் கால்களுக்கு நடுவே மரவேரொன்று குறுக்கிட்டு அந்தச் சின்னப் பாதங்களைத் தட்டிப் பார்த்தது. பிருந்தா விழுந்து கிடந்து வீரிட்டுக் கதறினாள்.

"சொன்னனான். கேட்டாத்தானே."

பதற்றமும் கோபமுமாக ஓடிச்சென்று மகளைத் தூக்கி அப்பியிருந்த மண்ணைத் துடைத்துவிட்டுப் பார்த்தால் கைகளிலும் கால்களிலும் உரசல் காயங்கள் கண்களிற்பட்டன.

வீட்டை அண்மித்துவிட்டபடியால் பசு தனது இடத்திற்குச் சென்று நின்றது.

மகளின் காயங்களைக் கழுவி மருந்திட்டு விட்டு பசுவின் கொட்டிலுக்குச் சென்று பார்த்தால் கன்று பால் குடித்துக் கொண்டு நின்றிருந்தது. அவசர அவசரமாக அதை இழுத்துக் கட்டிவிட்டு, செம்பை எடுத்து வந்து பாலைக் கறந்தாள். என்ன அவசரப்பட்டென்ன? பால் குறைந்தது.

'இண்டைக்கு ஒரு வீட்டுக்குத்தான் பால் குடுக்கலாம்' பெருமூச்சாக நினைவு வெளிவந்தது.

போத்தலைக் கழுவிப் பாலை ஊற்றி வைத்துக் கொண்டிருக்கையில் -

"அம்மா, தாங்க முடியாமல் நோகுதம்மா"

வலது கையை இடது கையால் பிடித்துக் கொண்டு பிருந்தா அழுதாள். பாலை வைத்து விட்டு வந்து பார்த்தால் கை வீங்கிக் கொண்டு வருவது தெரிந்தது.

'இருண்டுவிட்ட இந்த நேரத்தில் என்ன செய்வது? தோட்டத்திற்குப்போன சபேசனும் வந்து சேரவில்லையே!'

சுலோசனாவின் கணவன் சபேசன் எங்கோ வேலை செய்வதற்குப் போய்விட்டு வந்து, தன் தோட்டத்தில் வேலை செய்யவென்று போனவன். இனித் தவறணைப் பக்கமும் போய்த்தான் வருவான்.

"அவரெங்கே ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போறது?"

ஒரு தீர்மானத்திற்கு வந்த மனம் மகளுக்கு என்ன செய்யலாம் என்ற தவிப்பில் அவலப்பட்டது.

"சுலோ, சுலோ."

வாசலிலே கண்மணி மாமியின் குரல் கேட்டது.

"வாறன் மாமி."

பாற்போத்தலையும் தூக்கிக் கொண்டு வாசலுக்கு வந்தாள் சுலோசனா.

"மாடு கொண்டுவரேக்கை பிருந்தா விழுந்துபோனாள் மாமி. அந்தப் பிலாதியிலை நிக்க, பாலைக் கண்டு குடிச்சிட்டுது. ஒரு போத்தல் தான் கறந்தனான். நாகேந்திரம் அண்ணை தான் புறுபுறுப்பர். என்ன செய்ய? அவருக்கும் சரசக்காவுக்கும் பாலில்லையெண்டு சொல்லி விடுங்கோ"

சொல்லும்போதும் கவலை தலைநீட்டுகிறது.

"நாகேந்திரந்தான் பிள்ளைக்கெண்டு பால்வாங்குகிறவன். அவனுக்கு இதைக் குடுக்கிறன். சரசுவிட்டைச் சொல்லிவிடுகிறன்."

மாமி தானாகவே முன்வந்து நாகேந்திரம் அண்ணைக்கு விட்டுக் கொடுத்ததும் உள்ளுக்கிருந்த மெல்லியவலி நின்றது போன்ற உணர்வு. மாமிக்கு நல்லமனம். நாகேந்திரம் அண்ணையின் பிள்ளைக்காக விட்டுக் கொடுக்கிறாள்.

நாகேந்திரம் அண்ணை பிள்ளைக்கென்று பால் வாங்குகிறார். மாமி அவளுக்காகப் பாலைக் கொடுக்கிறாள். அந்தப் பிள்ளை புவனா பிருந்தாவோடை தான் படிக்கிறாள்.

கண்கலங்கிய பிருந்தாவின் கோபம் பரவிய முகம்... மனதிற்குள் மின்னல் புகுந்து வெளியேறுகிறது.

"அதுசரி. பிருந்தாவுக்கென்ன பெரிய காயமோ? அழுது கேட்குது"

மாமிக்கு பிருந்தாவிலும் கரிசனந்தான்.

"காலிலும் கையிலும் உரசல் காயம். வலது கையிலை வீங்கியிருக்குது. அதிலைதான் நோகுதெண்டு அழுகிறாள்."

"எங்கை பிள்ளையைப் பாப்பம்."

உள்ளே வந்து, அவளை ஆதரவாக அணைத்து,

"பிள்ளைக்கு எங்கை நோகுது?" என்று அன்பாக மாமி விசாரிக்க, பிருந்தாவின் விம்மலும் அழுகையும் அதிகரித்தன.

பிருந்தா கையை நீட்டி மாமிக்கு நோவுள்ள இடத்தை காட்டுகிறாள். மாமி மெதுவாகத் தடவ, "ஐயோ, அம்மா" என்று பிருந்தா கதறினாள்.

"இது அடியுண்ட நோவில்லை. எலும்பிலை வெடிப்போ முறிவோதான்." மாமி தன் அனுபவத்தைக் கொண்டு கூற, சுலோசனாவின் கலக்கம் அதிகமாகியது.

இப்ப எங்கை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப் போறாய். நோவெண்ணெய் கொண்டந்து தாறன். போட்டிட்டு பனடோலும் குடு. கையை அசைக்காமல் வைச்சிரடி பிள்ளை. காலமைக்கு ஆஸ்பத்திரிக்குப் போய் காட்டு."

மாமி வெளியே வரவும் சுலோசனாவின் மகன் சங்கரனுடன் அவளின் அம்மா உள்ளே வந்தாள்.

நடந்தவற்றைத் தாயிடமும் சுலோசனா விவரித்தாள்.

"என்ரை செல்லம் விழுந்து போனாளோ? கவனமாய் வரக்கூடாதேடா?" என அம்மம்மாவும் பிருந்தாவை மடியிலிருத்தி, அணைத்து ஆறுதல் கூறினாள்.

"பனம்பாத்தி கிண்டினனீங்களெல்லே. பனங்கிழங்கை என்ன செய்யப் போகிறாய்?"

"அதை அவிச்சுப்போட்டனம்மா. இவளை விட்டிட்டு இப்ப ஒண்டும் செய்யேலாது. இரவுச் சாப்பாடு செய்யப் போகவே விடாள்போலை கிடக்கு."

பனங்கிழங்கின் நினைவும் வந்து மேலும் கவலை சேர்க்கிறது.

"நான் பிள்ளையோடை இருக்கிறன். புட்டைக்கிட்டை அவியன். பிறகு நான் போய் கொப்பாவுக்குச் சாப்பாட்டைக் குடுத்திட்டுவந்து ஏதுஞ் செய்யக் கூடியதைச் செய்யிறன்."

பாவம் அம்மா. அவளுக்கு இன்னும் ஓயாத கைகள். பிருந்தாவும் உதவிசெய்ய இரவு குந்து வாங்கி காலையில் காயவிடலாமென எண்ணி கிழங்கை சுலோசனா அவித்தாள். இப்பொழுது அம்மாவுக்கு வேலையாகிப் போயிற்று.

பிருந்தா இரவு சரியாக உறங்கமுடியாது எழுந்தெழுந்து அழுது கொண்டேயிருந்தாள். மாமி தந்த நொவெண்ணெயும் பனடோலும் அவளது நோவைக் குறைத்ததாகத் தெரியவில்லை.

காலையில் அம்மாவின் உதவியுடன் வேலைகளை முடித்து, மதிய உணவையும் சேர்த்து தயாரித்து வைத்துவிட்டு வைத்தியசாலைக்குப் போக ஆயத்தமானாள். சங்கரனையும் அம்மாவிடம் ஒப்படைத்துவிட்டு சபேசனின் சைக்கிளில் சுலோசனாவும், பிருந்தாவும் புறப்பட்டனர்.

வெளிநோயாளர் பகுதியில் காத்திருந்து வைத்தியசாலை நடைமுறைகளின் படி பிருந்தாவைக் காட்டிய போது வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெறவேண்டுமென்று கூறிவிட்டார்கள்.

சபேசன் வீட்டிற்குப் போய் தேவையான பொருட்களை எடுத்துவந்தான்.

பிருந்தாவின் நோ வைத்தியசாலையில் அளித்த சிகிச்சையால் சற்றுக் குறைந்திருக்க வேண்டும். அவள் கட்டிலில் படுத்து உறங்கிக் கொண்டிருந்தாள். நேரம் மாலையை அண்மித்துக் கொண்டிருந்தது.

'வீட்டில் அவர் எப்படி எல்லா வேலைகளையும் கவனிக்கப்போகிறாரோ? ஏதோ அரை குறையாகச் சமையல் செய்வார். ஆடு, மாடு, கோழி என்று எல்லாம் தனியாகப் பார்க்கிறது கஷ்டந்தான். பால் கறந்தாலும் போத்தலுகள் கழுவி பால் ஊற்றி மூன்று வீடுகளுக்கும் கொடுக்க வேண்டும். கோழிகள் முட்டையிட்டதும் எடுத்து வைக்க வேண்டும். கோழிக்குஞ்சுகளைத் திறந்துவிட்டு கவனமாய் அடைக்க வேண்டும். புழுக்கொடியல் காயவிட்டெடுக்கிற வேலையும் சேர்ந்து விட்டது.

சங்கரனைப் பார்க்கிறது பெரிய வேலை. எல்லா வேலைகளோடையும் இவருக்கு அது சரியான கஷ்டம். அம்மாவுக்குத் தன்னுடைய வீட்டுவேலை சமையல் வேலைகளோடு அவனை முழுமையாகக் கவனித்துக் கொள்வது இயலாது.'

"பாலும் முட்டையும் எடுக்கிறவை வாங்கோ." நர்ஸம்மாவின் குரல் வீட்டைச் சுற்றியலைந்த அவளுடைய நினைவுகளை வைத்தியசாலைக்குக் கொண்டுவந்தது.

"கல்பனா, அகல்யா, மீனாட்சி, கண்ணம்மா... அந்த அம்மா பட்டியலிட்ட பெயர் வரிசையில் பிருந்தாவின் பெயரில்லை. அழைக்கப்பட்டவர்கள் கோப்பைகளுடன் போய் நின்றனர்.

இந்த ஆரவாரத்தில் பிருந்தா கண்விழித்து, நடப்பனவற்றைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

"அம்மா எங்களுக்குப் பாலும் முட்டையும் தராயினமே?"

மகளின் ஏக்கம் தாயைக் கரைத்தது.

"எப்பிடி வாங்கிறதெண்டு விசாரித்து நாங்களும் வாங்குவம்."

மகளைத் தேற்றினாள் அம்மா. மனதிற்குள்ளும் அதை நிறைவேற்றுவதென்று தீர்மானித்துக் கொண்டாள்.

"பாவம் பிருந்தாவுக்கு பால் குடிக்க நல்ல விருப்பம். பணவசதியில்லாததாலை என்னால் அவளுக்கு பால் குடுக்க முடியேல்லை."

சுலோசனா தன் தரித்திரத்தை நொந்து கொண்டாள். இது அவளுக்கு அடிக்கடி வீட்டிலே ஏற்பட்ட ஏக்கம். அது இங்கேயும் வந்து தொற்றிக் கொண்டது.

'இது அரசாங்க ஆஸ்பத்திரி. எங்களைப் போலை கஷ்டப்பட்டவைக்குத்தான் குடுப்பினம், பிருந்தாவுக்கும் வாங்கிக் குடுக்கலாம்.'

"கொஞ்சம் பால் மிஞ்சியிருக்கு ஆருக்கும் வேணுமோ?" பாலைப் பகிர்ந்து கொடுத்துக் கொண்டிருந்த அம்மா உரத்த குரலிலே கேட்டாள்.

அதைக் கேட்டதுமே கோப்பையை எடுத்துச் செல்ல சுலோசனாவின் அங்கங்கள் ஒத்துழைக்கவில்லை.

"ஒவ்வொரு நாளும் மிஞ்சுந்தானே, முதலே இங்கை இருக்கிறவை யாரும் வாங்கக்கூடும், எல்லாருக்கும் முன்னாலை போய் கிடைக்காட்டில்..." மனம் தயங்கியது.

"பால் வாங்காத சின்னப்பிள்ளையளுக்குக் குடும்." நர்ஸம்மா கூறிக்கொண்டே தனது இருக்கைக்குத் திரும்பினாள்.

சுலோசனா அவசரமாகக் கோப்பையை எடுத்துக் கொண்டு போனாள்.

பிருந்தாவின் கண்களில் ஆவலின் கீற்று மின்னியது. பால் பரிமாறிய அம்மா பின்புறம் போவதைக் கண்டு சுலோசனாவும் பின்னே விரைந்தாள்.

"பாலிருந்தால் பிள்ளைக்குத் தாங்கோ,"

"கூப்பிடேக்கை எங்கை போனனீங்கள்? பால் வேணுமெண்டா கூப்பிட்ட உடனை வந்திருக்கவேணும். நீங்கள் வருமட்டும் வைச்சுப் பார்த்துக் கொண்டிருந்தால் நாங்கள் அடுத்த வேலை செய்யிறேல்லையே? இப்பதான் பாலை ஊத்திப் போட்டுக் கழுவினனான்."

அவள் அணிந்திருந்த சீருடை அவளுக்குப் பொருத்தமில்லாதது போல சுலோசனாவுக்குத் தோன்றியது.

'ஞானம்'
ஒக்டோபர் 2005

# சங்கமம்

சங்கீர்த்தனன் நேற்று எங்கள் உலகிற்கு வந்துவிட்டாரென்று நந்தனன் சொல்லியது முதல் வேலும் மயிலும் அவரைத் தேடியலைந்து கொண்டேயிருந்தார்.

சந்தித்து எவ்வளவு காலம்!

"சந்திரசேகரத்துடன் கதைத்துக் கொண்டு நிற்பது சங்கீர்த்தனன்தான்"

வேலும்மயிலும் கூறிக் கொண்டு அவர்களுக்கு அருகே சென்றார்.

"கீர்த்தனன், கண்டு கனகாலம். அங்கை எல்லாரும் எப்பிடி இருக்கினம்?"

"அட, வேலும்மயிலுமே! ஏதோ எல்லோரும் பரவாயில்லாமலிருந்தோம். பெரும்பாலானவை பென்ஷனிலை போட்டினம். சிலபேர் எக்ஸ்ரென்ஷன், கொன்றாக்ற் எண்டு வேலை செய்யினம். சொன்னாப்போலை மறந்து போனன். வாற இருபத்தைஞ்சாந் திகதி எல்லோரும் சந்திக்கிற மாதிரி இளங்கலைஞர் மன்றத்திலே ஒரு ஒன்றுகூடல் ஒழுங்கு

செய்தனாங்கள். சாய்... அதுக்கு நிக்க முடியாமல் இங்காலை வந்திட்டன்.'' கவலையுடன் சொன்னார் சங்கீர்த்தனன்.

''என்ன ஒன்றுகூடல்?'' விவரமறியும் ஆவலுடன் சந்திரசேகரன் கேட்டார்.

''அந்தக் காலத்திலை கம்பஸிலை கெற்றுகெதர் வைச்ச மாதிரி ஒண்டு வைப்பமெண்டு நானும் மூர்த்தியும் இரவீந்திரனும் யோசிச்சம்.''

''நல்ல யோசனையடாப்பா'' வேலும்மயிலும் மனப்பூர்வமாகப் பாராட்டினார்.

''இப்ப கோவில் திருவிழாக்கள் மாறி மாறி வரப்போகுது. கனடா, யூகே, ஒஸ்ரேலியா எண்டு வெளியாலை இருக்கிறவையெல்லாம் வருவினம். இங்கை கொழும்பு, வன்னியெண்டு வெளி மாவட்டக்காரரும் வருவினம். கொன்வகேஷனுக்குச் சந்திச்ச பிறகு அந்த மாதிரி ஒன்டாய்ச் சந்திச்சிருக்கிறமோ? சொல்லு. அதுதான் இப்பிடி ஒரு ஒழுங்கு செய்வமெண்டு நினைச்சம்'' சங்கீர்த்தனன் காரணத்தை விளக்கினார்.

''என்ன மாதிரி புறோகிராம் எண்டும் முடிவெடுத்திட்டீங்களோ?'' சந்திரசேகரம் மேலும் விவரமறிய முற்பட்டார்.

கிட்டத்தட்ட ஒழுங்கு செய்திட்டம். லஞ்ச், ரீ எல்லாம் அறேஞ்பண்ணி புல்டே புறோகிறாம். எங்களிலை இந்தக் கலைத்துறை ஆக்களிருக்கினமெல்லோ? அவையின்ரை புறோகிராம்ஸ். ஒவ்வொரு நாட்டிலை இருக்கிறவை, ஒவ்வொரு துறையிலை இருந்தவை,

இருக்கிறவை என்று விரும்பினவையெல்லாம் தங்களின்ரை அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளலாம். விரும்பினவை தங்களின்ரை குடும்பத்தவரையும் கூட்டி வரலாம்" சங்கீர்த்தனன் விவரித்தார்.

"உண்மையாய் நல்லாயிருக்குமப்பா. இந்த ஐடியா ஆருக்கப்பா வந்தது?" வேலும்மயிலும் மகிழ்ச்சியாய்க் கேட்டார். 'லோக நாயகியும் வரக்கூடும். இனியாவது சந்தித்தால்...' அவருக்கோர் ஆவல்.

"எனக்குத்தான் இப்பிடியொரு யோசனை வந்தது. கடைசியாய் நான் அதுக்குப் போகக் கூடாதெண்டு கடவுள் தீர்ப்பளிச்சுப் போட்டார்." சங்கீர்த்தனன் சோகமாகக் கூறினார்.

"போகேலாதெண்டு ஆர் சொன்னது? நாங்கள் போவம்.. எங்களோடை எங்கடை பச் கந்தசாமி, காண்டீபன், மணிமாறன் இப்பிடி இங்கை இருக்கிறவை எல்லாரையும் கூட்டிக் கொண்டு போவம்." வேலும்மயிலும் உற்சாகமாகக் கூறினார்.

"போகலாமோ?" சங்கீர்த்தனனின் மகிழ்ச்சி எகிறியது.

"எங்கடை பச் ஆக்களை மட்டுமே கூப்பிடுகிறியள்? ஒவ்வொரு திக்கிலையும் இருக்கிறவையின்ரை விலாசங்கள் எப்பிடி எடுத்தியள்!" மீண்டும் சந்திரசேகரத்தின் விசாரணை.

"நாங்கள் எங்களின்ரை இமீடியற் சீனியேர்ஸ், யூனியேர்ஸ் என்டு மூண்டு பச்சைக் கூப்பிடுகிறம். இப்பதானே பத்திரிகைகளிருக்கு. எல்லாத்திலையும்

அறிவித்தல் போட்டிருக்கிறம். அறிஞ்சவை எல்லாருக்கும் முடிஞ்சவரை அறிவிச்சிருக்கிறம். அவைக்குத் தெரிஞ்சவைக்கும் அறிவிக்கச் சொல்லியிருக்கிறம். ஒரு முயற்சிதானே.'' என்றார் சங்கீர்த்தனன்.

''மூண்டு பச்சோ! செலவுகள் என்ன மாதிரி?'' வேலும் மயிலும் முக்கியமான விடயத்தைப் பற்றிச் சிந்தித்து விசாரித்தார்.

''எல்லாரிட்டையும் பங்களிப்புக் கேட்டிருக்கிறம். நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கிற நேரம் இடையிலை லிஸ்ற் ஒண்டை விட்டு உடனை காசு கொலெக்ற் பண்ணுறது எண்டதுதான் பிளான். சிலபேர் பங்களிப்புச் செய்திட்டினம்.''

இவ்வளவு ஓடியாடிச் செய்த உமக்கு என்னப்பா நடந்து இங்கை வந்திட்டீர்?'' சந்திரசேகரம் கேட்டார்.

''கொஞ்சநாள் உடம்பு ஒரு மாதிரித்தான் இருந்தது. மெடிக்கல் என்னெண்டு தெரியேல்லை. இரவு சாப்பிட்டிட்டுப் படுத்தனான். வயிறெல்லாம் என்னவோ செய்துது. பிறகு நெஞ்சுக்குள்ளை சரியாய் ஏலாமல் கிடந்துது. நான் மற்றவையைக் கூப்பிட்டு ஏன் தொந்தரவு கொடுப்பானெண்டு படுத்திருந்தன். அதுகள் அந்தரப்பட்டு இரவு நேரம் ஓடித்திரியுங்கள். நீட்டி நிமிர்ந்து அசையாமல் படுத்திருந்தா கொஞ்சம் அடங்கிச் சுகமாகுமெண்டு படுத்திருந்தன். உயிர் போறமாதிரி வலி எண்ணுவினம். அப்பிடி நெஞ்சுக்குள்ளை ஒரு வலி. உண்மையிலேயே உயிர் உடம்பை விட்டுட்டு வெளிக்கிட்டிட்டுது.'' தனக்கு நடந்ததைச் சங்கீர்த்தனன் விவரித்தார்.

"இப்பிடித்தான் எல்லாருக்கும் ஒவ்வொண்டு வரும். சரி நாங்கள் விசயத்துக்கு வருவம். இந்த மூண்டு பச்சிலையும் இங்கையும் கொஞ்சப் பேர் இருக்கினம். இங்கை பேப்பர் கிடையாது. ஆக்களுக்கு விலாசமும் கிடையாது. ஆக்களைத் தேடிப்பிடிச்சுத்தான் சொல்ல வேணும்." வேலும் மயிலும் காரியத்தில் குறியானார்.

"நாங்கள் கண்டு சொல்லுறவை அவை சந்திக்கிற ஆக்களுக்குச் சொல்லிக்கூட்டிக்கொண்டு வரலாம்," சங்கீர்த்தனன் ஆலோசனை வழங்கினார்.

"நாங்கள் எங்கை சந்திப்பம்?" சந்திரசேகரம் கேட்டார்.

"வேலுப்பிள்ளையர் வீட்டு வேப்ப மரத்தடியிலை சந்திப்பம்" "வேலும் மயிலும் கூறியதும் சந்திரசேகரம் சிரித்துக் கொண்டு "உமக்கு அந்த வேப்பமரத்தடியிலை கூட்டம் போடுறதிலை இப்பவும் விருப்பந்தான்." என்றார்.

"அதில்லை. நீங்கள் வரப்பிந்தினாலும் அங்கையிருக்கிற எங்கடை நண்பர்கள் கதைக்கிறதைக் கேட்டுக் கொண்டிருக்கலாம். அங்கையிருக்கிறவையைப் பற்றி நிறையத் தகவல்கள் தெரியவரும்."

தான் இடம் தேர்ந்த காரணத்தை வேலும் மயிலும் விளக்கினார்.

"இருபத்தைந்தாம் திகதி இலங்கை நேரம் காலமை ஏழரைக்கு முன்னுக்கு எல்லாரும் அங்கை வந்திடவேணும். பிந்தவேண்டாமெண்டு எல்லாருக்கும் சொல்லுங்கோ" சங்கீர்த்தனன் கூறினார்.

இருபத்தைந்தாம் திகதி, இளங்கலைஞர் மன்றத்தை நோக்கி வேலும் மயிலும் தலைமையில் இருபத்தெட்டுப்பேர் புறப்பட்டுச் சென்றனர். லோகநாயகியைச் சந்திக்கலாமென்ற நம்பிக்கையும் வேலும் மயிலுடன் பயணித்தது.

முகப்பிற்கு வாழைகள் கட்டி இளங்கலைஞர் மன்றம் அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. முன்னே கோலமிட்டு, நிறைகுடம் குத்துவிளக்குகள் வைத்து - அருகே நிரஞ்சனா நின்று கைகூப்பி வரவேற்றுக் கொண்டிருந்தார். இரண்டு பெண்பிள்ளைகள் சந்தனம் கொடுத்துக் கொண்டிருந்தனர்.

''நிரஞ்சனாவின் பிள்ளைகளோ?'' நந்தனன் கேட்டார்.

''இவை டொக்ரர் சிவச்செல்வன்ரை பேரப்பிள்ளைகள்.'' வேலும் மயிலுக்கு அருகே நின்ற தர்மலிங்கம் தனது பக்கத்துவீட்டுப் பிள்ளைகளை அடையாளம்கண்டு பதில் கூறினார்.

''நானில்லாட்டியும் மூர்த்தியும் ரவீந்திரனும் திறமாய் ஒழுங்கு செய்திருக்கிறாங்கள். அதிலை மதிவதனியும் கஜமுகனும் இருந்து பெயர் பதிந்து, நிகழ்ச்சி நிரல் கொடுத்து, உள்ளுக்கு அனுப்புகினம். இப்பிடிப் பதிஞ்சு கிட்டத்தட்ட எவ்வளவு பேரெண்டு கணக்கெடுத்தால் தான் சாப்பாடு, ஷோற்ஈற்ஸ், ரீ எல்லாம் கொடுக்கச் சுகம்'' சங்கீர்த்தனன் தானும் சேர்ந்து செய்த ஒழுங்குகள் நடைமுறைப்படுத்தப்படும் நேர்த்தியை அவதானித்தபடி தன்னுடன் வந்தவர்களுக்கு அவற்றைப் பற்றிக் கூறிக் கொண்டு வந்தார். வேலும் மயிலும் லோகநாயகியைத் தேடிக் கொண்டு சென்றார்.

அவர்கள் உள்ளே நுழைந்து மேலே நின்று கொள்கின்றனர். "உடம்போடை இருக்கிறதை விட இது எல்லாரையும் பார்க்க நல்ல வசதி" சங்கீர்த்தனன் சுற்றிப் பார்த்தவண்ணம் கூற "ஆனால் ஒரு பிரச்சனையிருக்கு. அவை கதைக்கிறது, ஏன் நினைக்கிறது கூட எங்களுக்கு விளங்கும் நாங்கள் சொல்லுறது அவைக்குக் கேட்காது. அவைக்கு ஏதாவது சொல்ல வேணுமெண்டு நினைச்சமெண்டால் சங்கடமாயிருக்கும்." என்று இந்த வசதியிலுள்ள குறையையும் வேலும்மயிலும் விளங்கப் படுத்தினார்.

"அங்கை பாரும் கிழக்கு, மத்திய பகுதி எல்லாரும் வந்திருக்கினம் நிஸாம், முகமதலி, ஹமீத், சித்திரசேனன், சாந்தசீலன், அருள் நங்கை, கண்ணம்மா, கிருபாநிதி, கனகரத்தினம் அடே இவங்கள் பெனொன்டோ, பெரேரா இவங்களிலும் ஒரு எட்டுப்பத்துப்பேர் இருப்பினம் போலை கிடக்கு." சந்திரசேகரம் பிரமித்தார்.

"நாட்டிலை என்ன நடந்தாலும் நாங்கள் அந்தக் காலம் ஹோலிலை ஒண்டாய்த் திரிஞ்சனாங்கள். மறக்கேலுமே? ஒருதருக்கு ஒரு பிரச்சனையெண்டா எப்பிடியிருந்தம்." வேலும் மயிலினது நினைவுகள் பல்கலைக்கழகக் காலத்திலே போய்த் தொங்கிக் கொண்டன. லோகநாயகியின் நினைவுகள், ஒவ்வொரு நிகழ்விலும் அவள் வந்திருக்கிறாளா என்று தேடிய நாட்கள். மீண்டும் இன்று அதேபோல்...

"அதுமட்டுமில்லை. கொழும்பிலை போய் தலைமைக் காரியாலயத்திலை அலுவல் பார்க்க எவ்வளவு உதவியாக இருந்தவை தெரியுமே. அண்டைக்கு எங்களோண்டை நட்பாயிருந்தவை எல்லாரையும் எங்களாலை தொடர்புகொள்ள முடியேல்லை. இப்பவும் காரியாலயத்

தொடர்புள்ளவையோ வேறுவகையிலை இப்ப கொழும்பிலை இருக்கிற எங்கடையாக்களுக்குக் கிட்ட இருக்கிறவை போலை தொடர்புள்ளவை எல்லாரையும் கூப்பிட்டனாங்கள்.'' சங்கீர்த்தனன் தாங்கள் செய்த ஒழுங்குகளை நினைவு கூர்ந்தார்.

''வந்திருக்கிறவை முழுப் பேரும் எல்லாத் துறைகளிலையும் ரொப் போஸ்றகாறர். எல்லாரையும் பார்க்க ஒரு சந்தோஷமென்ன?'' நந்தனனின் சொற்கள் மகிழ்வில் மூழ்கி எழுந்து வந்தன.

''ஒரு கோப்பையிலை சாப்பிட்டு, ஒரு பலகாரப் பாஸலை அடிபட்டுச் சாப்பிட்டு... அந்தக்காலம் எப்பிடியும் வராதப்பா...'' குமாரநேசன் ஏங்கினார்.

''அது உண்மை. என்ன இருந்தாலும் அந்தக்கால கெற்றுகெதறாய் அல்லது கோயிங் டவுனாய் இது இருக்காது, அவையவையின்ரை தலைக்கனம், பதவிக்கனம் எண்டெவ்வளவு இப்ப இடையிலை இருக்கும்!'' தர்மலிங்கம் வேறுவிதமாக நோக்கினார்.

''எல்லாரும் அப்பிடியிருக்காயினம். அந்தக் காலத்திலை கூட கிளாஸடிக்குற போட்டி, பொறாமை எல்லாம் இருந்ததுதானே?'' குமாரநேசன் அதை மறுத்தார்.

இருபத்தெட்டுப் பேரும் அந்தக் காட்சிகளைப் பார்த்து தமக்குள் உரையாடிக் கொண்டு நின்றனர். லோகநாயகியைக் காணவில்லை.

''இங்கை பாருங்கோ நிகழ்ச்சி தொடங்கப் போகுது. மங்கல விளக்கேற்றப் போகினம்.'' சந்திரசேகரம் எல்லோரின் கவனத்தையும் நிகழ்ச்சிக்குக் கொண்டு வந்தார்.

"ஆரை விடப்போகினம்? எல்லாரும் பெரியாக்கள்."

"உதிலை ஒருத்தருக்கும் மனக்கசப்பு வரக்கூடாதெண்டு நாங்கள் அப்பவே திட்டம் போட்டனாங்கள். மற்றவையைப் போலை பதவி பணம் எண்டு தேடாமல் எங்களின்ரை விடுதலைக்காக வெண்டு, காடுமேடெல்லாந் திரிஞ்சு போராடின எங்களின்ரை நண்பர்களிலும் சிலர் வீரச்சாவடையாமல் இருக்கினம். அவையை விடுவமெண்டு தீர்மானிச்சனாங்கள்" என்று பதில் கூறினார் சங்கீர்த்தனன்.

"நீங்கள் மூண்டுபேரும் ஒவ்வொண்டாய் யோசிச்சு நல்லாய்த்தான் திட்டம் போட்டிருக்கிறியள்." பாராட்டினார் நந்தனன்.

"அமைதியாய் இருங்கோ. எங்களுக்காகவுஞ் சேர்த்து அகவணக்கஞ் செய்கினம்" வேலும் மயிலும் கூறினார்.

அமைதியானார்கள்.

"வரவேற்புரை ரவீந்திரனும் தலைமை உரை மூர்த்தியும் நீளாமல் அளவாய்ப் பேசவேணும். நன்றியுரை நாமெண்டது..." சங்கீர்த்தனனை இடைமறித்து "பொறு பொறு உங்களைப் பற்றியும் ரவீந்திரன் பேசுறார்." என்றார் தர்மலிங்கம்.

"நானில்லாதது கவலையெண்டு சொல்லுறார். நான் இங்காலை வந்ததாலைதான் உங்களுக்கும் சொல்லி, உங்களோடையிருந்து பாக்கிறன். இல்லாட்டில் உங்களெல்லாரையும் நினைச்சுக் கவலைப்பட்டிருப்பன்," சங்கீர்த்தனின் குரல் தளதளத்தது.

"அங்கை பாருங்கோ. மூர்த்தியும் தலைமையுரையிலை அதைத்தான் சொல்லுறார். நாங்களெல்லாரும் மரணமடைந்ததாலை நிகழ்ச்சியிலை கலந்து கொள்ளாதது கவலையாம்" தர்மலிங்கம் மூர்த்தியின் தலைமையுரையைச் சுட்டிக் காட்டினார்.

விரும்பியவர்கள் எல்லோரும் தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள இடமளிக்கப்பட்டது. அந்தக்காலத்தில் விரிவுரை மண்டபத்தில் செய்த அட்டகாசங்கள் ஹோலில் செய்த குளப்படிகள், புதிய மாணவர்களுக்குக் கொடுத்த றாக்கிங், வெளியிட அறைகளில் தங்கியிருந்த போது செய்த திருக்கூத்துகள், நுவரேலியா, சிவனொளிபாதம், முனீஸ்வரம், கோணேஸ்வரம் போன்ற இடங்களுக்குச் சுற்றுலாச் சென்றபோது நிகழ்ந்தவைகள் என அனைவரும் பல்கலைக்கழக காலத்தில் மூழ்கிக் கிடக்கக் கூடியதாக பேச்சுகள் அமைந்தன. பேசியவர் குறிப்பிட்ட சம்பவம் பற்றிய தமது அனுபவத்தை அருகிலுள்ளவருக்கு அங்கிருந்தவர்கள் கூறியும் மகிழ்ந்தனர்.

தேனீர் இடைவேளைக்குப் பின் பேசுபவர்கள் தமது அலுவலக அனுபவங்கள், வாழ்க்கை அனுபவங்கள் பற்றியும் பேச வேண்டுமென்ற கோரிக்கையோடு மூர்த்தி தேனீர் இடைவேளையை அறிவித்தார்.

தேனீரை அருந்திக்கொண்டு ஒருவரோடொருவர் பேசி மகிழக்கூடியதாக வெளிப்புறம் நாற்காலிகளை ஒழுங்கு செய்திருந்தனர்.

"நாங்களும் போய்ப் பார்த்துக் கொண்டு வருவம்." என்று வேலும் மயிலும் புறப்பட அனைவரும் பின்தொடர்ந்தனர்.

பெண்கள் ஒன்றாக ஒருபுறத்திலமர்ந்திருந்தனர். அதிகமாக ஆசிரியர்கள், அதிபர்கள், விரிவுரையாளர்களாகவே இருந்தனர். வந்தவர்களின் தொகையும் குறைவாக இருந்தது.

'லோக நாயகி எங்கே?' வேலும் மயிலும் தேட ஆரம்பித்த போது "கனபேர் வரேல்லை. என்ன கமலா?" என்று நர்மதா அதே விடயம் பற்றிப் பேச்சுத் தொடங்க அவர் அதை அவதானித்தார். "வேலை பார்க்காதவை, இடையிலை விட்டவை, எல்லாருக்கும் வர விருப்பமில்லாமலிருக்கும். லோஜியை வரச்சொல்லிக் கேட்க மாட்டனெண்டிட்டா. எல்லாரும் வேலையைப் பற்றிக் கேப்பினமாம்.' - மித்ரா தனக்குத் தெரிந்த காரணத்தைக் கூறினாள்.

"பிரேமாவைப் போக வேண்டாமெண்டு மனிசன் சொல்லிப்போட்டு தாம்." செல்வராணி கூற,

"ஓமோம். கன ஆம்பிளையளுக்கு இப்பிடி விஷயங்களுக்குப் போறது பிடிக்கிறேல்லை. நேரை சொல்லாட்டிலும் போய்வந்த பிறகு 'அதைச் செய்யேல்லை. இதைச் செய்ய நேரமில்லையோ?' எண்டு எதையாவது காட்டி எரிஞ்சு விழுவினம்" என்றாள் கமலா.

"சாருலதாவுக்கெல்லாம் பழைய கதையள் அவருக்குத் தெரிஞ்சதாலை வரேலாமல் போச்சு."

"அவர் மறிச்சவராமோ?"

"விருப்பமில்லை மாதிரியாம். ஆனால் லதாவுக்கும் வந்து சுரேந்திரனைச் சந்திச்சால் ஒருமாதிரி இருக்குந்தானே?" என்று நர்மதா கூற,

"எங்களின்ரை பச்சிலை எழுபத்தைந்து வீத காதல்தான் கைகூடினது. மற்றவையிலை சிலபேர் இங்கை வந்திருக்கினந்தானே" என்றாள் கனகமலர்.

"எண்டாலும் ரஞ்சனியின்ரை குடுபம்தான் குடும்பம். முந்தின ஆளும் இவரும் நல்ல பிரண்ட்ஸ்" என்று புதுக்கதை ஆரம்பித்தாள் மித்ரா.

"உண்மையாயோ? அப்பிடி ஒருதரும் இருக்காயினம்" நம்ப மறுத்தாள் செல்வராணி.

"நீயே இங்கை மூண்டு பேரையும் சந்திப்பாய். அதுவும் ஒண்டாய்ச் சந்திப்பாய். அதுதான் சரியான மனப்பான்மை. கலியாணங்கட்ட முடியாமல் போனது அவையின்ரை பிழையில்லை. தாய் தகப்பன் மறிச்சுப் போட்டினம். ஒரே பச். விஷயம் தெரிஞ்சுதான் சுந்தரமூர்த்தி செய்தவர். முடிஞ்சது ஒருகதை அல்லது ஒரு கனவெண்டு விட்டிட்டார்."

"இப்பிடியான மனப்பான்மையுள்ள ஆக்களை எங்களுக்குள்ளை காணமுடியாது. இதை எப்பிடிப் பாராட்டுகிறதெண்டு தெரியேல்லை." வியந்தாள் செல்வராணி.

அருள்நங்கை, மஞ்சுளா, மைத்திரேயி, பூரணி, கல்யாணி முதலியோர் தின்பண்டம் தேனீர் ஆகியவை பரிமாறப்படுவதனை மேற்பார்வை செய்வதும் உபசரிப்பதுமாக நின்றனர். இவர்கள் அந்தக் காலத்திலும் இப்படி எல்லாவற்றையும் முன்னின்று செய்தவர்கள் தான்.

மதிவதனி பெண்களிருந்த இடத்தை நோக்கி வந்து கொண்டிருந்தாள். அவளுடன் வருவது குசுமா. இவர்களும்

லோகநாயகியும் சி.ஏ.எஸ். தற்போதைய எஸ்.எல்.ஏ.எஸ். பரீட்சையில் சித்தியடைந்து நிர்வாக சேவையில் பணியாற்றி வருகிறார்கள். கொழும்பில் செயலாளர்களாகப் பணியில் பணியாற்றுகிறார்கள் போலும். அதுதான் ஒன்றாக வருகிறார்கள், லோகநாயகியைக் காணவில்லையே.

மஞ்சுளாவும் பூரணியும் படிப்படியாக நிர்வாக தரத்திற்கு உயர்ந்திருந்தனர்.

விஸ்வநாதனும் சபேசனும் ஒரு மூலையில் அமர்ந்திருந்தனர். விஸ்வநாதன் ஆசிரியராகப் பணியை ஆரம்பித்து, பகுதித்தலைவராகப் பணியாற்றிக் கொண்டிருக்கும் போது ஒய்வு பெற்றார். சுபேசன் லிகிதராகப் பணியில் சேர்ந்து, பிரதமலிகிதராக ஓய்வுபெற்றார். அவர்கள் மற்றவர்களோடு ஒட்டமுடியாதவர்களாய் உட்கார்ந்திருந்தனர்.

ஆசிரியர்களின் கூட்டமொன்று ஓரிடத்தில் அமர்ந்திருந்தது. அவர்களும் மற்றவர்களுடன் போய்க் கலந்துரையாட விரும்பாதவர்களாய் உட்கார்ந்திருந்தனர்.

"பார் ஜி.ஏ.யைச் சுற்றி ஒரு கூட்டம் நிக்குது" சபேசன் எரிச்சலுடன் கூறினார்.

"வால் பிடிக்கவேணுமே" விஸ்வநாதன் சிரிப்பை வரவழைத்துக் கொண்டு ஏளனத்தைக் கக்கினார்.

"அது தெரியாததாலை தானே நாங்கள் இப்பிடியே இருந்திட்டம். பார் நரசிங்கத்தை. கம்பஸிலை இருந்த இடம் தரியாது. றிவேட் எடுத்து அடுத்த முறைதான் பாஸ் பண்ணினவன். இண்டைக்கு டிறெக்ரர்."

'இந்த சங்கமம் இப்படியொரு பொருமலையும் சங்கடங்களையுங்கூட ஏற்படுத்துமா?' சங்கீர்த்தனன் கவலைப்பட்டார்.

ஆனால் பலர் நீண்டகாலம் சந்திக்காதவர்களையெல்லாம் சந்தித்த சந்தோஷத்துடன் அவர்களைப் பற்றியெல்லாம் கேட்டறிந்து, பழையவற்றை நினைவு கூர்ந்து, உரையாடி, தேனீர் இடைவேளையை நீடித்துக் கொண்டிருந்தனர். ஒழுங்கமைப்பாளர்கள் மீண்டும் நிகழ்ச்சியை ஆரம்பிக்கத் திண்டாட வைத்தனர்.

மீண்டும் மீண்டும் நேரம் போவதை ஒலிபெருக்கி மூலம் நினைவூட்டி, ஒருவழியாக நிகழ்ச்சிகள் ஆரம்பித்த போது, மூர்த்தியின் கோரிக்கைக்கு இணங்க அடுத்து வந்தவர்கள் பேச ஆரம்பித்தனர். மிகச்சிறிய விஷயமாகக் கருதியது வேண்டுமென்றே பெரிதாக்கப்பட்டு நிர்வாகத்திற்கு முட்டுக்கட்டை போட்டது, போர்ச்சூழலில் ஏற்பட்ட நிர்வாகச் சிக்கல்கள், இடம் பெயர்வு அனுபவங்கள், வேலை தேடிய அனுபவங்கள் என்று பலவகைப்பட்டவை அரங்கேறின. வெளிநாட்டனுபவங்களும் இணைந்தன.

விஜயேந்திரன் தன் காதல் கலியாணமாக்கப்பட்ட பாட்டைக் கூற, இராமநாதன் தன் மகனின் காதலைக் கண்டறிந்த கதையைக் கூறினார்.

இத்தகைய நகைச்சுவைகள் சிரிக்க வைத்த வேளையில், போரின் போதும் ஆழிப் பேரலையின் போதும் நேர்ந்த இழப்புகளும் உறவுகளின் இழப்புகளும் மனங்களை உருக்கி கண்களில் ஓடவும் வைத்தன.

போராட்ட அனுபவங்களும் வீர மரணமடைந்தோரின் கதைகளும் சிலிர்த்து, சினந்து, சிந்தித்து, கண்ணீர் சிந்த வைத்தன.

சிந்தித்தபடி அமர்ந்திருந்த எழுத்தாளான மலரவனிடம் ''என்ன நாவலொன்று உருவாகின்றதோ?'' என்று சுசீந்திரன் கேட்டுக் கொண்டு சென்றார்.

பல சுவைகளும் கலந்தமைந்த அந்த நிகழ்ச்சி மதிய உணவையும் மறக்கவைத்துத் தொடர்ந்தது.

''லோகநாயகி தாமதித்து வரக்கூடுமோ?'' வேலும் மயிலும் ஓர் இனிய சந்தேகத்துடன் இடைக்கிடையே வாயிலை நோக்கினார்.

சுமார் இரண்டுமணியளவிலே தான் மதிய உணவிற்குத் தயாரானார்கள். மதிய உணவு நேரத்திலும் விரும்பியபடி கூடியிருந்து உணவுண்டு மகிழக் கூடியதாக ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன. வேலும் மயிலும் குழுவினர் அவர்களிடையே சுற்றிவந்தனர்.

''செவ்வேளும் வந்திருக்கிறார் சந்திரமுகியும் வந்திருக்கிறா. செவ்வேளின்ரை தகப்பன் தடுத்ததாலை இரண்டு பேரும் தனித்தனியையே வாழ்க்கையைக் கடத்திட்டினம்'' தேவகுமார் கண்ணிற்பட்ட இருவரையும் பார்த்துவிட்டுக் கூறினார்.

''வேலும் மயிலும் லோகநாயகியும் கூட அப்பிடித்தான். அந்தாள் போயும் சேர்ந்திட்டுது.'' சிவபாதத்தின் பேச்சு வேலும் மயிலைப் பிடித்து நிறுத்தியது.

''நல்ல சோடியப்பா, லோகநாயகியின்ரை தகப்பன்

தாய் ஏன் மாட்டனெண்டவையோ தெரியேல்லை'' தேவகுமார் கூற மீண்டும் பழைய காலத்திற்குப் போகமுயன்ற நினைவுகளுடன் வேலும் மயிலும் போராடினார்.

அவர் முறைப்படி ஒருவர் மூலம் ஆரம்பித்த திருமணப் பேச்சுக்கள் ஏன் முறிந்தன என்பது அவருக்கே தெரியாது. லோகநாயகியின் பிரச்சனைகளை அறிந்து கூற அவருக்கு யாருமிருக்கவில்லை.

விஜயேந்திரனின் பேச்சு நினைவுக்கு வந்தது. அவரைப் போல் முயலாமல் விட்டுவிட்டோமோ என்றொரு சந்தேகம் அகாலத்தில் விழித்துப் பார்த்தது.

இப்போது சந்தித்தால்... அது காலங்கடந்த விடயம். ம்... கேட்கவும் முடியாதே.

''நான் கம்பஸிலும் சீனியர், வேலையிலும் சீனியர். எனக்கு வெடிவைச்சிட்டுத்தான் உவன் புறமோஷன் எடுத்தவன். நான் அவன்ரை கண்ணிலும் முழிக்கமாட்டன்.''

''என்னப்பா சூசை கறுவுறான்?'' என்று சந்திரசேகரன் வேலும் மயிலின் கவனத்தை அந்த உரையாடலுக்கு இழுத்து வந்தார்.

''நீ கதைச்சென்ன? அதுக்குமொரு திறமை வேணும், எங்கடை புறமோஷனுகள் றான்ஸ்வர்கள் கூட இப்பிடித்தான் நடக்குது. இரண்டு மூண்டு பாட்டியள், டின்னருகள், பெரியவையின்ரை வீடுகளுக்கு விஸிற். இதுகளோடை எல்லாம் பிச்சுக் கொண்டு வரும்.''

''டின்னர் மட்டுந்தான் குடுக்கிறவையோ?''

மகிழ்ச்சி அருவியில் சாக்கடைகளும் கலந்து கொண்டிருந்தன.

"அங்கை பார். சுந்தரராஜனும் சோமசேகரனும் தோளிலை கைபோட்டுக் கொண்டு கதைக்கினம். என்ன அதிசயமப்பா" நந்தனன் கட்டிக்காட்ட தர்மலிங்கம் அவருடன் சேர்ந்து அவர்களருகே பறந்தார்.

வயலினுடன் வந்து கொண்டிருந்தது லோகநாயகி போன்று தோன்ற அங்கே விரைந்தார் வேலும் மயிலும். அது சாந்தினியாயிருக்கவே சுந்தரராஜன் பக்கம் அவரும் பறந்தார்.

"இவர் அந்தக்காலத்திலை என்ரை பெஸ்ற் பிரண்ட். பிறகு நான் திருகோணமலைக்கு இடமாற்றம் கிடைச்சுப் போனதாலை தொடர்பு விட்டுப் போச்சு" என்று தன் மனைவிக்கும் மகளுக்கும் கூறிக் கொண்டிருந்தார் சுந்தரராஜன்.

"இப்பவும் நண்பர்கள்தான்" என்று சிரித்துக் கொண்டு கூறினார் சோமசேகரம்.

'திருகோணமலைக்குப் போனதாலைதானே வால்பிடிச்சு நானிருக்க வேண்டிய கதிரைக்கு வந்து இவ்வளவு மவுசு காட்டுறாய்.' சோமசேகரத்தின் மனக் குரலைக் கேட்டதும் பறந்து சென்றவர்களுக்கு சப்பென்றாகிவிட்டது.

"இப்ப மால்மகன் உழைக்கிற உழைப்பு ஒருத்தரும் உழைக்கேல்லை. அந்தப் பொஸிஷனிலை இருக்கிறது மட்டும் கெட்டித்தனமில்லை. உழைக்கவுந் தெரிய

வேணும்." சுந்தரேசனின் உள்ளத்தில் எரிந்த எரிவின் புகை சொற்களிலும் புகைந்தது.

"உன்ரை பேர் வந்த லிஸ்ரிலை என்ரைபேரும் வந்தது. முதலிலை இந்த வேலை கிடைச்சதாலை அதுக்கு வராமல் விட்டிட்டன். விசர் வேலை பாத்திட்டனெண்டு இப்ப நினைக்கிறன்." கழிவிரக்கப்பட்டான் சேரமான்.

"நேற்று வீட்டைப் போய்ப் பார்க்கணுமெண்டு நினைச்சன். தொண்ணூறுக்குப் பிறகு பார்க்கேல்லை. பிறகு அந்த மூட்டிலை இங்கை வந்து என்ஜோய் பண்ணேலாது. நாளைக்குப் போய்ப் பார்க்க பிளான்." அன்வர் உள்ளே துடித்துக் கொண்டிருந்த வேதனையை வெளிக்காட்டாமல் சொல்லிக் கொண்டிருந்தார்.

"கனடா வாழ்க்கை எப்பிடிப் போகுது? அனுபவங்களை எழுப்பிச் சொல்லியிருக்கலாமே?"

"ஒரு நாட்டைப் பற்றி ஓராள் பேசினாப் போதும்."

கனகரத்தினத்தின் பதிலும் சரிதான்.

நேரம் நான்குமணியை அண்மித்தபோதுதான் கலை நிகழ்ச்சிகளை இரசிப்பதற்காக அவர்களை ஒன்று கூட்ட முடிந்தது. கலை நிகழ்ச்சிகளை சுருக்கிக் கொள்ள வேண்டிய இக்கட்டான நிலையுமேற்பட்டது.

பல்கலைக்கழகக் காலத்து இசைமேதைகள், கலைஞர்கள் பலரும் பலபட்டங்களுடனும் அனுபவ ஞானத்துடனும் வளர்ச்சி பெற்ற கலைஞர்களாக மேடையிலே காட்சி தந்தனர். சிலர் தமது கலைஞானத்தையே மூட்டைகட்டி வைத்துவிட்டதாகவுங் கூறினர்.

வெவ்வேறு துறைசார்ந்த பெரும் அதிகாரிகளும் பேரறிஞர்களும் கலைஞர்களாக ஒன்றுகூடி, நிகழ்ச்சிகளைத் தந்தபோது காணக்கிடைக்க முடியாத மனோரஞ்சகமான விருந்தாக அமைந்தது.

நிகழ்ச்சி முடிந்தும் விட்டுப்போக மனமின்றி பலரும் கூடி நின்று உரையாடிக் கொண்டிருந்தனர். அனைவரது மனங்களிலும் விவரிக்க முடியாத உணர்ச்சிகள்!

''நிகழ்ச்சி ஒழுங்கு செய்யேக்கை இருந்த இரண்டுபேர் அதுக்கிடையிலை விட்டுப் பிரிஞ்சிட்டினம்'' மூர்த்தி கவலையுடன் கூறினார்.

''ஒன்று சங்கீர்த்தனன். மற்றது...?''

''லோக நாயகி''

வேலும் மயிலும் லோகநாயகியைத் தேட மீண்டும் தனது உலகை நோக்கிச் செல்லலானார்.



# போகன் விலா

அந்த போகன்விலாச் செடி கொத்துக் கொத்தாகப் பூத்து ரம்மியமாக நின்றது. சிறிது நேரம் மனம் அதிலேயே லயித்துக் கிடந்தது.

வீட்டு முற்றத்தில் எல்லோருடைய கவனத்தையும் ஈர்த்துக் கொண்டு அது நின்றதைப் பார்க்கும் போது அது அங்கு நடப்பட்ட நாளின் நினைவு மனதினுள் தலைநீட்டிப் பார்க்கிறது. அதை நடக்கூடாதென எழுந்த எதிர்ப்பைச் சமாளித்து அதை நடுவதற்குப் பட்டபாடு!

போகன் விலாச் செடியை நீங்கள் பார்த்திருக்கிறீர்கள்தானே. பெரிய பெரிய முட்களை நீட்டிக் கொண்டு காட்டுச் செடிபோல இருக்கும். ஆனால், கொத்துக் கொத்தாக அதில் மலரும் மலர்கள் மிக அழகானவை. வெவ்வேறு வர்ணமலர்கள் மலரும் போகன் விலாச் செடி வகைகளிலிருக்கின்றன. குண்டுகுண்டு மணிகளை அடுக்கி வைத்தது போன்று கொத்தாக மலரும் அந்தப் பூங்கொத்துகளைப் பார்க்கும் போது முட்களின் இருப்பு மறந்து போகும்.

ஒருநாள் நானும் எனது நண்பன் மதியும் சைக்கிளில் போய்க் கொண்டிருந்த போது ஒரு வீட்டின் மதிலின் மேலே

அசைந்து, சிரித்த போகன் விலா மலர்க் கொத்துகள் எங்கள் சைக்கிள்களை நிற்க வைத்தன.

அந்த வீட்டுக்காரரிடம் சென்று அனுமதி பெற்று அச்செடியிலிருந்து சில துண்டுகளை வெட்டிக் கொண்டு வந்தோம்.

மதியின் வீட்டுமுற்றத்தில் அதை நட ஆரம்பித்த போதுதான் மதியின் அம்மா வந்து அதை எடுத்துப் பார்த்தார்.

"ஐயையோ, இந்த முள்ளுக்குத்தினால் கூடாது. இதை ஏன் கொண்டு வந்து நடுகிறாய்? எவ்வளவு பூக்கண்டுகள் இந்த உலகத்திலை இருக்கு. போயும் போயும் இதைக் கொண்டு வந்து நடுகிறியளே? கொண்டு போய் எறியுங்கோ. இல்லாவிட்டால் உந்த முள்ளோடை கஷ்டப்படுவியள்."

அந்த நடுவதை எப்படியாது தடுத்துவிட வேண்டுமென்ற முனைப்போடு மதியின் அம்மா அழுத்தமாகக் கூறி அதை நடுவதைத் தடுத்தார்.

"என்னம்மா எத்தனை பூச்செடிகளில் முள்ளிருக்கு, ரோஜாவிலேயே முள்ளிருக்குத்தானே." எதிர்பாராத அந்தத் தடையை விலக்கிவிட முயன்று வாதிட்டான் மதி.

"அதுவும் முள்ளுத்தான், அதைவிட இது மோசமான முள். இதை நடாதேங்கோ, நட்டு, தண்ணீர் ஊத்தி வளர்த்துப் போட்டு, அதனாலை பிரச்சினைப் படாதேங்கோ, பெரிசாய் பரந்து வளர்ந்துதோ இந்த முள்ளை வெட்டித்தள்ளுறது சரியான கஷ்டம்." அம்மா அதை நடக்கூடாதென்பதில் உறுதியாக நின்று வாதாடினார்.

அவருக்கு எத்தனையோ சாக்குப் போக்குக் கூறி நாங்களும் அதைப் பிடிவாதமாக நட்டு வளர்த்தோம்.

அது துளிர்விட்டு அரும்பு கட்டியபோது எங்களது மனங்களுக்குள்ளும் மலர் சிரித்தது உண்மைதான்.

மதியின் அம்மாவின் கண்காணிப்பில் அவனுடைய வீட்டுச் செடி ஒரே அளவாக வெட்டப்பட்டு அழகுக் கோலம் காட்டியது. அது மட்டுமல்ல அச்செடியில் வெட்டப்பட்ட துண்டுகளை எரித்து முட்களை இல்லாமலும் செய்துவிடுவார்.

எங்களது வீட்டிலே அத்தனை கெடுபிடி கிடையாது. ஓரளவு சுதந்திரமாகவே அது வளர்ந்ததென்றாலும் மாரிகாலத்தில் கத்திரிப்பது வழக்கம்.

வழக்கம் என்ன வழக்கம்! இரண்டு வருடங்கள் அப்படி நடந்திருக்கலாம். அதன் பின் நாங்கள் வீட்டைவிட்டுத் துரத்தப்பட்டோம். போரின் அகோரம் எங்களை எங்கள் கிராமத்தை விட்டுத் துரத்தியது. பலரை மீளக் குடியமர வைத்த 1996 ஆம் ஆண்டோ, பலரை யாழ். குடா நாட்டிற்கு மீண்டும் வரச் செய்த சமாதான ஒப்பந்தமோ கூட எங்களை எங்கள் வீடுகளைப் பார்க்கக் கூட அனுமதிக்கவில்லை.

ஒரு தசாப்தத்திற்கு மேலாக எட்டியும் பார்க்க முடியாது போன வீடு எப்படியிருக்கும்?

பலாலியைச் சூழ்ந்த அதிஉயர் பாதுகாப்பு வலயத்தில் அகப்பட்ட பகுதிகளில் எவரும் குடியமர அனுமதிக்கப்படவில்லை.

மதியின் வீட்டு முற்றத்தில் இவ்வளவு அழகாகக் காட்சிதரும் இந்தச் செடி எங்கள் வீட்டு முற்றத்திலும் இருக்குமா? இதுவரை காலமும் அது இருந்திருந்தால் இப்பொழுது எப்படியிருக்கும்? அது பட்டுப்போய் இருந்த இடமும் தெரியாமல் போய்விட்டதோ என்னவோ?

மனம் சுழன்று சுழன்று, தன்னாலியன்ற வரை எங்கள் வீட்டின் இன்றைய நிலையைக் கற்பனை செய்ய முயன்று கொண்டிருந்தது.

கடந்த ஒரு வாரமாக இப்படி வீட்டைப் பற்றிய கற்பனைகளுக்குள் நான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.

சரியாகப் பத்து நாட்களுக்கு முன், எங்களது வீட்டிற்கருகிலுள்ள பிள்ளையார் கோவில் பரிபாலன சபையினர் தமது பகீரதப் பிரயத்தனத்தால் அந்தக் கோவிலுக்குச் சென்று வழிபட்டுவர இராணுவ அதிகாரிகளிடம் அனுமதி பெற்றுவந்தனர். நாளை அந்தக் கோவிலுக்குச் செல்ல விரும்பும் பக்தர்களையும் அழைத்துக் கொண்டு அங்கு சென்று வழிபட்டு வருவதற்கு ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

ஏற்கனவே நிர்வாக சபையிலுள்ள சிலர் இதற்கான ஆயத்தங்களைச் செய்ய ஆரம்பித்திருந்தனர். படையினரின் அனுமதியுடன் இரண்டு நாட்களாக அங்கு சென்று கோவிலையும் அதன் சுற்றாடலையும் செல்லும் பாதையையும் துப்புரவாக்கி, எல்லோரும் சென்று வழிபட்டு வரக்கூடிய அளவிற்கு ஏற்பாடுகள் செய்திருந்தனர்.

என்னைப் பொறுத்தவரை கோவிலுக்குப் போவதோடு வீட்டையும் பார்த்துக் கொண்டு வரலாம்... மனது பறந்தது.

பொழுது புலர்ந்த பொழுது எனது மனம்...?

மகிழாமல் இருக்கவும் முடியாமல், மகிழவும் முடியாமல்... எவ்வளவோ காலமாகக் கற்பனை செய்த வேதனையை இதோ அனுபவிக்கப் போகிறோமென்ற எதிர்பார்ப்புடன்... முரண்பட்ட உணர்வுகள் அடைத்துக் கொள்ள தவித்து...

எதிர்நோக்கிய அந்த நேரம் எப்படியோ வந்து சேர்ந்தது. எல்லோருமாக ஒரு பஸ்ஸில் ஏறிப் புறப்பட்டோம்.

உறவினர்களும் நண்பர்களும் சேர்ந்து பஸ்ஸிலே சுற்றுலா வென்றும் யாத்திரையென்றும் சென்ற அனுபவங்கள் எனக்கிருந்தன.

ஆனால், இது வேறுபட்ட அனுபவம், பரம்பரை பரம்பரையாக இருந்த ஊருக்கு, அங்கே ஒரு காலத்தில் உறவினரும் அயலவர்களுமாக வாழ்ந்தவர்கள் எல்லோருமாகச் சேர்ந்து, பதின்மூன்று ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக யாருமே வசித்திராத அதனைப் பார்ப்பதற்காகச் செல்வது ஒரு புதுமையான அனுபவந்தான்.

பஸ்ஸினுள்ளிருந்த ஒவ்வொருவரும் வெவ்வேறு நினைவுகளோடும், உணர்வுகளோடும் பயணித்துக் கொண்டிருந்தனர்.

"எங்கடை வீட்டிலை போய்ச் சாக வேணும், கந்தன்காடு சுடலையிலை நான் வேகவேணுமெண்ட ஆசை நிறைவேறாமலே அம்மா போய்ச் சேர்ந்திட்டா." கூறிக் கொண்டே கலங்கிய கண்களைத் துடைத்தாள் இராஜேஸ்வரி சித்தி.

"எனக்குக் கூட அந்த ஆசையிருக்கு அது கூட நிறைவேறுமோ தெரியேல்லை." பெரியம்மா ஒரு பெருமூச்சுடன் கூறினார்.

"எங்கடை வீட்டுக்குக் கூரை தானில்லையாம்." பதின்மூன்று ஆண்டுகளின் பின் கூரையில்லாத வீடு எப்படியிருக்குமென்று சிந்தித்துப் பார்க்காமலே அருளரசன் திருப்தியுடன் கூறிக் கொண்டிருப்பதைக் கேட்க வேதனையாகவிருந்தது.

பஸ் வேகத்தைக் குறைத்து, சிறிது தூரம் மெதுவாக ஓடி, பின் நின்றது, எதிரே இராணுவக் காவலரண்.

பஸ்ஸிலிருந்த அனைவரும் இறக்கப்பட்டனர். நாம் கொண்டு வந்த பொருட்கள் அக்கு வேறு ஆணிவேறாகப் பரிசோதிக்கப்பட்டன. நாம் உடற்பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டோம். எங்கள் அடையாள அட்டைகளை இராணுவத்தினர் பெற்றுக் கொண்டனர். பஸ்ஸும் பரிசோதிக்கப்பட்டது. எம்மை பஸ்ஸினுள் ஏற்றி, இரு இராணுவ வீரர்களும் ஏறிக் கொண்டனர்.

எங்கள் பஸ் அதிகூடிய பாதுகாப்பு வலயத்தினுள் பிரவேசித்தது.

வயல்களும் தோட்டங்களுமாக வளங்கொழித்த பிரதேசம் பற்றைக் காடாகக் காட்சி தந்து மனமெரிய வைத்தது.

பற்றைகள் பரந்து கிடக்க, இடிந்து உடைந்த வீடுகள் தலைநீட்டிப் பார்க்க, இடத்தை அடையாளம் காண முடியாத நிலை.

நாம் போவது எந்தப் பாதை? இது நாம் உபயோகித்த பழைய வீதியல்ல. வீதி புதிதாக அமைக்கப்பட்டிருந்தது. அது மட்டுமல்ல, நமது வியர்வையால் உயர்ந்த பல கட்டடங்கள் அதற்காகப் பொடியாகிப் போய்விட்டதையும் ஊகிக்க முடிந்தது.

"இதனால் திரும்புங்கோ அண்ணை." அந்தக் கோவிலுக்கு எம்மை அழைத்துவரப் பாடுபட்டவர்களுள் ஒருவரான கணேசதாசன் வழிகாட்டினார்.

பஸ் திரும்பியது. கணேசதாசனும் சகாக்களும் பற்றை வெட்டி உருவாக்கிய பாதை.

அதே கோவில் கோபுரம் தெரிகிறதே. அப்படியென்றால் எனது வீட்டைக் கடந்து வந்து விட்டோமா?

கோவிலின் முன் பஸ் நிறுத்தப்படுகிறது.

இறைவா! உன்கோவிலே இப்படியாகி விட்டதென்றால் எங்கள் வீடுகள்...?

வசந்த மண்டபம் இடிந்து கிடக்கிறது. தேர் உக்கி உருக்குலைந்து பல பாகங்களை இழந்து நிற்கிறது.

வீட்டைப் பார்க்க வேண்டுமென மனம் காலைப் பிடித்திழுக்கிறது.

"கேசவன் ஒருக்கா வீட்டுப் பக்கம் போட்டு வருவமே?" எனது நண்பன் கேசவனை அழைக்கிறேன்.

"கண்ணிவெடிகளிருக்கும் கவனமப்பு" கண்ணம்மா மாமி எச்சரிக்கிறார்.

"அதுதான் எங்கடை வீட்டுப் பக்கம் போக யோசனையாய்க் கிடக்கு. "கேசவன் ஆதங்கப்படுகிறான்.

ஊருக்குள் வந்தும் வீடுகளைப் போய்ப் பார்க்க முடியாமல் கண்ணிவெடிகள் தடுத்தன.

"பாதையிலை நிண்டு பாப்பம் வா" எனக்கு அந்த வசதியிருந்ததால் கேசவனை அழைத்தேன்.

வந்த பாதையிலே திரும்பி நடக்கிறோம்.


இது ரவிச்சந்திரனுடைய வீடு. கோப்புசமே இல்லை. ஷெல் விழுந்திருக்கும் போலை. சுவர் உடைந்து கிடக்கு. அடுத்தது ரமணன் வீடு.

இதென்ன சுவர்களை இடித்து கல்லுகளையும் எடுத்தாச்சு.

அடுத்து... என்னுடைய வீடு... கடவுளே, முன்பக்க ஹ"ட் சிமெந்து பிளேற் அப்படியே சரிந்து விழுந்து கிடக்கிறதா? எதுவுமே சரியாகத் தெரியவில்லை.

அந்த போகன்விலா மதர்த்து வளர்ந்து சரிந்து பரந்து முன் பக்கத்தை மூடிக்கிடக்கிறது.

'சுடர்ஒளி'
டிசம்பர் 2003



# கவனிக்காமல்...

வீதியில் வாகனங்கள் இங்குமங்குமாக ஓடிக்கொண்டிருந்தன. ஆனால் பஸ்ஸையோ மினிபஸ்ஸையோ பத்து நிமிடங்களுக்கு மேலாகக் காணவில்லை.

பஸ் தரிப்பிடத்தில் நின்ற சந்திரமலர் கைமணிக்கூட்டையும் வீதியையும் மாறிமாறிப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் பத்தரை மணிக்குமுன் பண்டத்தரிப்புக்குப் போக வேண்டும்.

''வீட்டிலையிருந்து அவசர அவசரமாக வந்து இதிலை காத்துக் கொண்டிருக்க வேண்டியிருக்கு'' மனதிற்குள்ளே புறுபுறுத்துக் கொண்டாள் அவள்.

சைக்கிளிலும் மோட்டார் சைக்கிளிலும் போகும் பெண்களைப் பார்க்கும் போது தன் இயலாமையை எண்ணி வேதனைப்பட்டாள்.

''இப்பிடிப் பழகியிருந்தால் பஸ்ஸெண்டு தவங்கிடக்காமல் நேரத்தையும் வீணாக்காமல் போயிருக்கலாம்...''

வெயிலில் நடந்து வந்ததோ என்னவோ மூக்கை அரித்தது.

'தடிமல் வரப்போகுது போலை' சந்திரமலர் மூக்கை உறிஞ்சிக் கொண்டாள்.

பஸ்ஸைக் காணவில்லை. தும்மல் அடுத்தடுத்து வந்தது. கைக்குட்டையைத் தேடினாள். கைப்பையினுள் அது இல்லை. அவசரத்தில் எடுத்து வைக்கவில்லை.

"அப்பாடா!"

மினிபஸ்ஸொன்று தூரத்தில் தெரிந்தது. சந்திரமலர் கொண்டுவந்த பையைக் கையிலே தூக்கிக் கொண்டு வண்டியில் ஏறத் தயாரானாள்.

மினிபஸ் அருகே வந்து நின்றது. உள்ளே அடைந்து கொண்டிருந்தவர்களில் சிலரை வெளியேற்றியும் அது திணறியது.

'யாழ்ப்பாணமா...?' நடத்துனர் அவளை நோக்கித் தொடுத்த கேள்விக்கு அவள் பதிலளிக்கவில்லை.

அதனுள் ஏறி இடிபட அவளது முதுமை இடந்தராது. ஆனால் யாழ்ப்பாணம் போய் அடுத்த பஸ்ஸெடுத்து பண்டத்தரிப்புக்குப் போயாக வேண்டும்.

'என்ன செய்வது?' அவள் சிந்தித்தாள்.

'வாங்கோ அம்மா! இரு பாலைச் சந்தியிலை சீற் தரலாம்." தேர்தல் காலத்தில் மேடையிலே பேசும் வேட்பாளர் போன்று மினி பஸ் நடத்துனன் வாக்குறுதிகளை

அள்ளி வழங்கினான். மினி பஸ்ஸில் ஒரு காலமும் பயணம் செய்யாதவர்கள் தான் இதை நம்புவார்கள்.

இருபாலைச் சந்தியில் ஒரு கூட்டம் பிரயாணிகளைக் கண்டதும்,

"அம்மா. எங்கை போறிங்கள்? யாழ்ப்பாணமோ? பின்னுக்குப் போங்கோ. இதிலை நிண்டால் மற்றவை போறேல்லையே?" என்று கேட்பார் என்பதைத் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

"நான் வரேல்லை" அவள் ஒரு முடிவுக்கு வந்து கூறினாள்.

"பஸ் பிறேக்டௌன். நல்லாய் நில்லுங்கோ. றைற் எடுங்கோ" அவன் கோபத்துடன் கத்தினான்.

மூக்கு நன்றாக வேதனை தந்தது. 'நல்ல தடிமல் வரப்போகுது. வெயிலுக்கை போகவேணும். குடையும் கொண்டுவரேல்லை." அவள் மனதினுள் கூறிக் கொண்டாள்.

பஸ்ஸொன்று வந்து கொண்டிருந்தது.

"இதிலை சனமெண்டாலும் கொஞ்சம் வசதியாய் நிக்கலாம். இதைவிடாமல் ஏறிப்போவம். நேரம் போகுது." சந்திரமலர் மீண்டும் தயார் நிலையில் நின்றாள்.

பஸ்ஸினுள் ஏறியதும் ஒரு நிம்மதி. அதனுள் பயணிகள் அதிகமில்லை. அவள் ஜன்னல் கரையோரமாக இருந்த இருக்கையொன்றில் வசதியாக அமர்ந்து கொண்டாள்.

'பஸ் பிறேக்டௌன் எண்டு என்னமாதிரிப் பொய் சொல்லி சனத்தை அடைஞ்சு கொண்டு போறான்! இதுக்கை சனமேயில்லை' நினைத்துக் கொண்டே வெளியே பார்க்க மூக்கரிப்புக் கூடுவது போன்றதோர் உணர்வு.

"அச்" முகத்தை மூடிக் கொண்டு தும்மினாலும் முன்னிருக்கைக்காரர் சற்றே திரும்பிப் பார்த்து முகத்தைச் சுழித்தார். கைக்குட்டையைக் கொண்டு வராத மறதிக்காக மீண்டும் தன்னையே நொந்து கொண்டாள். இருபாலைச் சந்தியில் பஸ் நின்று சிலரை ஏற்றியது.

'ஞாயமான தூரமிருக்கு. கைக்குட்டையுமில்லாமல் சரியாய் கஷ்டப்படப் போறன்' கவலைப்பட்டுக் கொண்டு மூக்கை உறிஞ்சிக் கொண்டாள். மனம் வேறு எதிலும் ஈடுபட முடியாமல் மூக்கரிப்பு தடுத்துக் கொண்டிருந்தது.

சளியைக் கட்டுப்படுத்த முடியாமல் மிகவும் கஷ்டப்பட்டு கற்று முற்றும் பார்த்து... 'நல்லவேளை எவரும் கவனிக்கவில்லை' கையால் துடைத்து பஸ் இருக்கையில் கையைத் தேய்க்கிறாள். கவனமாகக் காலை விலக்கி அமர்ந்து கொள்கிறாள்.

ஒரு மாதிரி ஒரு தற்காலிகத் தீர்வு. ஆனாலும் மூக்கின் வேதனை தீர்ந்தபாடில்லை.

பஸ் நிலையத்தையடைந்து பஸ் நிற்கிறது. ஒரு மாதிரி அந்த இடத்தில் சேலை படாமல் அவதானமாக எழுந்து வந்து பஸ்ஸிலிருந்து இறங்குகிறாள்.

அடுத்து பண்டத்தரிப்புக்கு பஸ் எடுத்தாக வேண்டும். இளவாலை பஸ்ஸொன்று புறப்படத் தயார் நிலையில் நின்று கொண்டிருந்தது.

'அப்பாடா! இதில் போனால் நேரத்திற்குப் போய் விடலாம்.' மனதிற்குள் ஒரு நிம்மதி. அவள் விரைந்து சென்று அதனுள் ஏறினாள்.

ஒரு இருக்கை வெறுமனே இருப்பது கண்ணிலே பட்டென்று பட்டது. அவள் ஏறியதுமே பஸ்ஸும் புறப்பட்டு விட்டது. அவள் அவசர அவசரமாகச் சென்று அந்த இருக்கையில் அமர்ந்து கொண்டாள்.

மூக்கு வேதனை தந்தது. 'பஸ் நிலையத்துக்கு அருகிலே ஒரு கடையிலே கைக்குட்டையொன்றை வாங்கியிருக்கலாம். பஸ்ஸைக் கண்டவுடனே இதைப் பற்றி மறந்து போய் பஸ்ஸிலே ஏறிவிட்டேன். சரி பண்டத்தரிப்பிலே ஒன்றை வாங்குவோம்' அவள் முடிவு செய்தாள்.

''இந்த சார்ஸ் நோய் உலகத்தையே உலுக்கி எடுக்குது. சரியான பயங்கரமான நோயாம். மருந்துமில்லை. இலங்கைக்கு வந்துதோ தொலைஞ்சம்'' முன்னிருக்கையிலிருந்த பயணியொருவர் பக்கத்திலிருந்தவருக்குக் கூறிக் கொண்டிருந்தார்.

''மிகவும் துப்பரவான நாடுகளையே இந்தப் பாடுபடுத்துற இந்த நோய் எங்கடை நாட்டுக்கு வந்தால் சொல்லத் தேவையில்லை'' பக்கத்திலிருந்தவரும் அதை ஆமோதித்தார்.

''சிங்கப்புரிலை பொது இடத்திலை குப்பை போட்டாலே தண்டனையாம். அவ்வளவு சுத்தமாய் நாட்டை வைச்சிருக்கினமாம். அந்த நாடே இப்ப அல்லோலகல்லோலப்படுது.''

"ரிக்கற் எடுக்காதவை எடுங்கோ..."

அவர்களது பேச்சை அவதானிக்கமுடியாது பஸ் நடத்துனரின் குரல் சந்திர மலரின் கவனத்தைத் திருப்புகிறது.


"பண்டத்தரிப்பு ஒன்று" அவள் தனக்குரிய பயணச்சீட்டைப் பெறுவதற்கு முற்படுகிறாள்.

பயணச்சீட்டை எழுதி அவளிடம் நடத்துனர் நீட்ட அவள் கைப்பையிலிருந்து காசை எடுத்து எழுந்து எட்டிக் கொடுத்துவிட்டு பயணச்சீட்டை வாங்கிக் கொண்டு திரும்பி அமர்ந்தபோது சேலையிலிருந்து ஏதோ ஈரமாகக் காலிற்பட்ட உணர்வு.

கீழே குனிந்தாள்.

இருக்கையின் கீழே யாரோ சத்தியெடுத்திருந்தார்கள். அதன் மேல் அவள் காலை வைத்திருந்ததால் சேலைக் கரையில்...

அவளுக்குக் குமட்டிக் கொண்டு வந்தது. ஆத்திரத்துடன் திரும்பினாள். ஆனால் தான் செய்தது ஞாபகத்திற்கு வர...



# அது உடைந்து விடக்கூடாது

இருள் கண்மூட, ஒளி கண்திறக்கும் இனிய காலைதானென்றாலும் இருளினது ஆட்சியின் பிடி தளராததால் இயற்கையை இயல்பாக இரசிக்க முடியாத நிலையில் அந்த வானின் கண்ணாடியின் வழியே பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

யாழ்ப்பாணத்தை நோக்கிப் பயணித்த அந்த வாகனம், வவுனியாவை எட்டிப்பிடிப்பதற்காக விரைந்து கொண்டிருக்கிறது.

பச்சைப் பசேலென்ற காடு, இருள் குவிந்து கிடப்பது போல இருமருங்கும் தெரிகிறது, வீதி வெளிச்சம் இடையிடையே தலைகாட்டும் போது மட்டும் பசுமையாகச் சிரித்துத் தலையாட்டியது.

கண்டி வீதி - ஏ9 பாதை - வாகனத்தின் ஒளியில் எதிரே நீண்டு தெரிந்தது.

'சமாதானத்தின் பாதை.'

கொழும்பு போகும்போது, ஒரு பலகையில் பொறிக்கப்பட்டிருந்த வாசகம், மனதுள் பளிச்சிட்டது.

பாதை சீராக இருந்ததால் வாகனம் உச்ச வேகத்தில் பறந்து கொண்டிருந்தது.

மடியிலிருந்த பொதியை என் கைகள் கவனமாக இறுகப் பற்றிக் கொண்டன.

அது உடைந்துவிடக்கூடாது.

'இந்த வேகத்தில் செல்லும் வாகனம் திடீரென வேகத்தைத் தடைப்படுத்தினால், பொதி எதிலாவது மோதி, உள்ளே இருக்கும் சிலை உடைந்துவிடலாமோ!' என்ற அச்சம் மனதினுள் எழுந்து கைகளை இயங்க வைத்திருக்க வேண்டும்.

ஒரு நீண்டகால ஆசை நிறைவேறும் நேரத்தில் அது நொறுங்கிவிட்டால்...

மனதிற்கு அது புரிந்ததால் பொதியைக் கைகள் இறுக்கி அணைத்துக் கொள்கின்றன.

அது நான் சிறுமியாக இருந்த காலம், ஐம்பதுகளில் ஓர் ஆண்டு.

எனது நண்பியின் வீட்டு முகப்பில் அன்னை மேரியின் சிலையொன்றை அமைத்தார்கள். வீட்டினுள் புகும்போதும், வெளியேறும்போதும் அந்த அன்புருவம் மனத்திற்குச் சாந்தி தருவது போல நான் உணர்வேன்.

அப்படி ஒரு சிலையை எனது வீட்டு முகப்பிலும் வைக்க வேண்டுமென்று எனக்குக் கொள்ளை ஆசை.

அப்பாவிடம் எனது ஆசையை மெல்ல வெளியிட்டேன். மகளின் ஆசையை நிறைவேற்ற அவருக்கும் ஆசை இருந்திருக்கலாம். ஆனால் அதற்குப் பணவசதி வேண்டுமே.

காலம் ஓடியது. மனதுள் ஆசை மட்டும் அப்படியே கிடந்தது.

நான் படித்துப் பட்டம் பெற்று ஒரு வங்கி உத்தியோகத்தரானேன்.

கை நிறையச் சம்பளம் கிடைத்தது. மனதினுள் கிடந்த ஆசை இடைவிடாது தன்னை நினைவூட்டிக் கொண்டிருந்தது.

ஆனால் நாட்டு நிலைவரம் அதனை ஸ்தாபிப்பதைத் தடுத்தது.

ஷெல் வீச்சும் குண்டுவீச்சுக்களுமாகக் கிடந்த யுத்த பூமியில், 'வீடு எப்போது துகளாகுமோ?' என்ற நிலை. வீட்டை விட்டே இடம் பெயர்ந்து அலையும் நிலை. எல்லாமே அந்த எண்ணத்தை அமுக்கி மேலெழ விடாது வைத்திருந்தன.

இந்த சமாதானத்தை எதிர்நோக்கும் சூழலில் இப்போது கொழும்பிற்கு வந்திருக்கும் இவ்வேளையில் கடையிலே அந்த அன்னை மேரியின் சிலையைக் கண்டதும் மனம் ''அந்தச் சிலையை வாங்கு'' என்று அடம் பிடித்து கால்களை அங்கேயே நிறுத்தி வைத்துவிட்டது.

முன்பென்றால் விமானத்திலோ கப்பலிலோ பொருட்களை யாழ்ப்பாணம் கொண்டு செல்ல எத்தனையோ தடைகள் - கெடுபிடிகள்.

இப்போது சமாதான உடன் படிக்கையின் பயனாகத் திறக்கப்பட்ட பாதையூடாக அச்சிலையைக் கொண்டு செல்லலாமென்ற துணிவில் அதனை வாங்கிவிட்டேன்.

அதே உடன்படிக்கை எம்நாட்டில் சமாதானத்தைக் கொண்டு வருமென்று நாமனைவரும் நம்புகிறோம்.

இந்தச் சிலை எங்கள் வீட்டில் நிறுவப்பட்டு எந்தப் பாதிப்புமின்றி நீண்டகாலமிருக்குமென்று நானும் நம்புகிறேன்.

ஆனால் அதனைக் கவனமாகக் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டிய பொறுப்பு பாரியதாக அமைந்துவிட்டது.

எனது கையில் தூக்கக்கூடிய சிலைதான்.

ஆனால் நீண்டதூரம் கொண்டு செல்ல வேண்டுமே!

இந்தச் சிலை உடைந்துவிடக் கூடாது.

நிச்சயமாக உடைந்துவிடக் கூடாது.

அப்படி உடைந்துவிட்டால்...?

அதைத் தாங்க முடியாது.

அதனால் அதைப் பாதுகாப்பாகக் கொண்டு செல்வதற்காக, சுற்றிவர றெஜிபோம் வைத்து, நல்ல கனதியான பெட்டியுள் பொதிசெய்தபின் அது ஒரு பெரிய பொதியாகிவிட்டது.

ஒருவகையாகச் சிலரின் உதவியுடன் இதனை இம்முறை எப்படியாவது கொண்டு சென்று வீட்டில் நிறுவிவிடலாமென்ற நம்பிக்கை என்னுள் வேரூன்றிக் கிடக்கிறது.

இம்முறை சமாதானம் எப்படியும் வந்துவிடும். சிலை என் வீட்டில் நீடித்திருக்கும்.

அந்தக்காலத்தில் எவ்வளவு சுலபமாக இந்தச் சமாதானத்தை ஏற்படுத்தியிருக்கலாம். இப்போது அதை ஏற்படுத்த எவ்வளவு முயற்சிகளும் உதவிகளும் தேவைப்படுகிறது! நோர்வேயின் உதவியுடன் அது எப்படியும் கிடைத்துவிடும்.

ஆனாலும் அது சாத்தியமாகாது என்று எவ்வளவு பேர் கருதுகிறார்கள்? ஏன் சமாதானம் ஏற்படுத்துவேனென்ற ஜனாதிபதியே...?

அப்பப்பா! இந்தச் சிலையை வாகனத்தில் ஏற்றப்பட்டபாடு!

வாகனத்தின் உள்ளேயிருந்த பலரும் இதை வாகனத்தின் உள்ளே ஏற்ற முடியாதென்று கூறிவிட்டனர். வேறு இடத்தில் வைத்தாலும் உடைந்துவிடும்.

இரண்டு பேரின் ஆசனங்களுக்குரிய பணத்தைத் தந்தால் யாழ்ப்பாணத்திற்கு அதனைக் கொண்டு போய்ச் சேர்ப்பேனென உறுதியளித்த வாகனச் சொந்தக்காரரே அதனை ஏற்றமுற்பட்டதும் அதைக் கொண்டு சேர்ப்பது கஷ்டமென்றுவிட்டார்.

நண்பர்கள் சிலர் உதவமுன்வந்ததால் எப்படியும் அதனைக் கொண்டு போயே சேர்ப்பதென்று ஏற்றி எங்கள் மடியிலே வைத்துக் கொண்டோம்.

வவுனியா நகரம் விடிகாலைப் பொழுதில் உயிர்த்துக் கொண்டிருக்கிறது.

வான் நிறுத்தப்படுகிறது. உள்ளே இருந்தவர்கள் இறங்கிச் சென்று, அருகிலுள்ள சிற்றுண்டிச் சாலைகளில்

தேநீரருந்தி, சிரமபரிகாரம் செய்து மீள்கின்றனர். நானும் நண்பர்களும் சிலையை மெதுவாக இருக்கையில் வைத்துவிட்டு இறங்கிச் சென்று தேநீரருந்தி மீள்கின்றோம்.

பயணம் தொடர்கிறது.

சிறிது தூரம் சென்றதும் நீண்ட வரிசையில் நின்ற வாகன வரிசையின் இறுதியில் எமது வாகனமும் இணைந்து கொள்கிறது.

வாகனச் சாரதி சென்று ஏதோ பதிகிறார்.

சுமார் எட்டுமணிக்கு வாகனங்கள் பயணத்தைத் தொடர அனுமதிக்கப்படுகின்றன.

சிறிதுநேரம் சென்றதும் மீண்டும் தடை.

வாகனச் சாரதி வாகனத்திற்கான பதிவு, காப்புறுதி முதலான பத்திரங்களின் நிழற்படப் பிரதிகளுடன் சென்று அவற்றைக் கையளித்து அனுமதிப்பத்திரம் பெறுகிறார்.

நிழற்படப்பிரதிகள் தேவைப்படுமெனத் தெரியாதவர்கள் அவற்றைப் பெறவும் முடியாத இடத்தில் தவித்துக் கொண்டு நிற்கிறார்கள்.

பயணிகளின் பொருட்கள் பரிசோதிக்கப்படுகின்றன. என் மடியிலிருந்த பொதியும் பரிசோதனைக்குத் தப்பவில்லை.

"என்ன சிலை? எதற்காகக் கொண்டு செல்கிறேன்?" இத்தியாதி வினாக்கள் சிங்களத்திலும் ஆங்கிலத்திலுமாகக் கேட்கப்பட்டு அனுமதி தரப்படுகிறது.

வாகனங்களின் கீழ்ப்பகுதி முதல் முழுப்பகுதிகளும் பரிசோதிக்கப்பட்டு அனுப்பப்படும்போது நாம் எங்கு எத்தகைய நிலையிலிருக்கிறோமென மனம் அலசத் தொடங்குகிறது.

சிறிது தூர இடைவெளியில் பல தடைமுகாங்கள்.

விசாரணைகள், பதிவுகள்.

ஏன் பரிசோதிக்கிறார்கள்? ஏன் பதிகிறார்கள்? எதுவுமே புரியவில்லை.

யார் பரிசோதிக்கிறார்கள்?

அவர்கள் வாய்திறந்து பேசும்வரை அதுவும் புரியவில்லை.

இரண்டு பக்கங்களிலும் எரிந்து கருகிக் கிடக்கும் பூமியும் இடிந்து கிடக்கும் கட்டடங்களும் போல் எம்மனங்களும்...

அந்த அன்னையின் சிலையை அணைத்துக் கொள்கிறேன்.

அது உடைந்துவிடக்கூடாது.

மீண்டும் பொதி பிரித்துப்பார்க்கப் பட்டு அதே விசாரணைகள். ஆனால் தமிழில்...

"விலை என்ன?" "பற்றுச்சீட்டு இருக்கிறதா?" வரை தொடர்ந்த வினாக்கள். 'இந்த சிலைக்கு வரி செலுத்த வேண்டும்' என்ற பவ்வியமான வேண்டுகோளில் வந்து நிற்கிறது.

"எங்கள் வீட்டிலே வைக்கத்தான் கொண்டுபோகிறோம். அதற்கு வரியா?"

என் மனம் ஒப்பவில்லை. சிலிர்த்துக் கொள்கிறது.

மனதிலிருந்தது சிறிது சூடாகவே நாவிற்கு வந்து வெளியே குதித்தது.

சில கணங்கள் வாதாடிய என்னை, அதன் பொறுப்பாளரிடம் செல்லுமாறு அவ்வலுவலர் கூறிவிட்டார்.

மனம் அலையெறிந்து கொண்டிருந்தது. நிதானமாகச் சிந்திக்க முடியவில்லை.

எதிர்பாராத ஒன்றில் இடறிய வேதனை.

"தமிழர் உரிமைக்காகப் போராடும் போராளிகளைப் பராமரிக்க வரி சேர்க்கப்படுவது நியாயமானதுதான்" என விளக்கம் தந்தார் பக்கத்திலே நின்ற வயோதிபப் பயணியொருவர்.

உதவிக்கு இரு நண்பர்களை அழைத்துக் கொண்டு பொறுப்பாளரிடம் போய்ச் சேர்ந்தேன்.

என் கடைக்குட்டி மகள் போன்ற ஒருத்தி. ஒட்ட வெட்டிய முடி. சீருடையில் அச்சிறுமி மிக அமைதியாகவும் ஆளுமையுடனும் உட்கார்ந்திருந்தாள்.

"வீட்டுப் பாவனைப்பொருட்கள் எவையெவைக்கு வரிவிலக்கு உண்டென்று நிரலிட்டிருக்கிறோம். அவற்றைத் தவிர்ந்த அனைத்திற்கும் நீங்கள் வரி செலுத்தித் தானாக வேண்டும்" என்று ஆணித்தரமாக அறிவித்தாள்.

"கடவுள் சிலைக்கும் வரியா?" மீண்டும் கேட்டேன்.

"நிரலிலில்லாத பொருட்கள் அனைத்திற்கும்"

"கோவிலுக்குக் கொண்டு சென்றாலுமா?"

"அப்படியென்றாலுந்தான்"

நீண்ட கால இடைவெளியின் பின் யாழ் நாகவிகாரைக்கு வந்து நிஷ்டையிலிருந்த புத்தபகவான் என் நினைவினுள் எட்டி மென்முறுவல் செய்தார்.

அமைதியாக, பணிவாக, உணர்ச்சிகளுக்கு வயப்படாமல் அழுத்தமாகப் பதிலளித்துக் கொண்டிருந்த அந்தச் சிறுமியைப் பார்த்த போது எல்லாவற்றையும் மீறிக் கொண்டு "இந்தப் பெண் நூறுவருட ஆயுளுடன் சிறந்த நிர்வாகியாகப் பரிணமிக்க வேண்டும்" என்று என் அறிவு வாழ்த்தியது.

உரிய இடத்தில் பணத்தைச் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொண்டு மீண்டேன்.

வான் புறப்பட்டது.

ஆடி, அசைந்து, குண்டுங்குழியுமான அப்பாதையில் செம்மண்ணை வாரிப் படரவிட்டுக் கொண்டு அது செல்கிறது.

'சமாதானத்தின் பாதை'

பலகையில் எழுதப்பட்ட அந்த வாசகம் நினைவிற்கு வருகிறது.

இருமருங்கும் எரிந்துபோய் பசுமையைத் தொலைத்துவிட்டுப் பரந்து கிடக்கும் பூமி.

ஷெல்லுக்கும் பதுங்கு குழிகளுக்குமாக தலைகளையும் உடல்களையும் பறிகொடுத்துவிட்டு, முண்டங்களாக ஆங்காங்கு அடிமரங்கள் மட்டும் காணப்படும் தென்னங்காணிகள்.


இவையெல்லாம் மறைந்து பசுமையும் புதுமையுமாக, இந்தப் பூமி காட்சி தர, சமாதானம் இங்கு ஏற்பட்டேயாக வேண்டும்.

மாதாவின் முன் என் மனம் மண்டியிடுகிறது.

சாந்தமும் அமைதியும் தவழும் அந்தத் திருவுரு இப்பாதை வழியே பத்திரமாக எடுத்துச் செல்லப்பட்டு, என் வீட்டில் என்றும் நிலைத்திருக்க வேண்டும்.

என் மனம் மன்றாடுகிறது.

'ஞானம்'
செப்டம்பர் 2002



# அன்ரி பார்ப்பா

நெற்றியில் முத்தாகிக் கோடிட்ட வியர்வையை ஒற்றி எடுக்க வேண்டுமென இயல்பாக எழும் உணர்வைக் கூட மனதின் குழப்பம் தடுத்துவிட, நிர்மலா அப்படியே அமர்ந்திருந்தாள்.

மேலே இதமாகச் சுழன்ற மின்விசிறியாலும் அந்த வியர்வை ஊற்றை நிறுத்தவோ, உலரவைக்கவோ முடியவில்லை.

'வவுனியாவிலை போய் வேலை செய்ய முடியுமோ எண்டு கேட்டவை' என்று நேர்முகத் தேர்வுக்கு முதலிலே சென்று வந்த உருத்திரா கூறியதுமே நிர்மலா குழம்பி விட்டாள்.

மார்வோ நிறுவனத்திற்கு வவுனியாவிலும் ஒரு கிளையிருப்பது பற்றி அவளுக்கு இது வரை தெரியாது. இந்த நிறுவனத்திலே வேலை கிடைத்தால் யாழ்ப்பாணத்திலேயே வேலை செய்யலாமென்ற அவளது எதிர்பார்ப்பில் மண்விழுந்தது.

"நீ என்ன சொன்னாய்?"

"முடியாதெண்டு சொன்னால் வேலை கிடைக்காதே."

உருத்திராவின் பதில் அவளிடம் அந்தக் கேள்வி கேட்கப்பட்டால் அவளும் வவுனியாவில் பணிபுரிய ஒப்புக் கொண்டாக வேண்டுமென முடிவு செய்ய வைத்தது.

அவளது மடியில் கிடந்து மலர்ந்து சிரிக்கும் மிருணாளினியின் முகம் மனதிலே தோன்ற சுரீரென்றொரு வலி தோன்றிய உணர்வு!

வேலை கிடைத்தால் அவளை என்ன செய்வது?

நிர்மலா வேலைக்குப் போய் வரும் வரை அம்மா தனியாக அந்தப் பிஞ்சை எப்படிக் கவனிப்பாள்? மிருணாளினிக்கு பால்மா பிடிக்காதே, தாய்ப்பாலுக்காக அடம்பிடிப்பாளே எனக் குழம்பிய நிர்மலாவுக்கு இது என்ன புதுப்பிரச்சினை?

வேலை தேடி இவ்வளவு காலமும் இருந்த தவம் மனதிலே தோன்றிப் பயமுறுத்தியது.

கிடைக்கவிருக்கும் வேலையை வீசியெறிவது போல் நடந்து கொள்வது எவ்வளவு பைத்தியக்காரத்தனம்.

திருமணத்திற்கு முன் இந்த நேர்முகப் பரீட்சை வந்திருந்தால் எவ்வளவு குதூகலத்துடன் அதை எதிர்கொண்டிருப்பாள். ஆனால் அவளது பல்கலைக்கழகப் பரீட்சை முடிந்து, முடிவுகள் வெளியாகுமுன்பே அம்மா பிடித்த பிடியாகத் திருமணம் செய்து வைத்து விட்டாள். மூன்று வருடங்களின் பின்புதான் மிருணாளினி பிறந்தாள். அதற்கிடையிலே கூட வேலை கிடைக்கவில்லையே.

கோகிலம் அன்ரி தவித்துக் கொண்டிருந்த மனதில் ஆபத்பாந்தவன் போலத் தோன்றினாள்.

"என்ன பிள்ளை நிர்மலா இவ்வளவு காலமும் வேலை ஒண்டும் கிடைக்கேல்லையே?" சென்ற முறை வவுனியாவிலிருந்து கோகிலம் அன்ரி நிர்மலா வீட்டிற்கு வந்திருந்த போது அக்கறையாக விசாரித்தாள்.

"இப்ப வேலைக்குப் போறதெண்டு நினைக்கவே கவலையாயிருக்கு அன்ரி. இவள் மிருணாளினியை விட்டிட்டு என்னெண்டு போறது?"

"இதென்ன பிள்ளை சொல்லுறாய்? லவுனியாவிலை வேலையெண்டாச் சொல்லு, நான் அந்த மாதிரி என்ரை குஞ்சைப் பார்ப்பன். நீ வேலைக்குப் போய்வாறதிலை ஒரு பிரச்சினையும் வராது. உவள் பேபியின்ரை பிள்ளையை நான்தானே பார்த்தனான். முரளியின்ரை பெண்சாதி வேலைக்குப் போக பிள்ளையை ஆர் பாத்ததெண்டு நினைக்கிறாய்?"

அன்ரி அன்று கூறியபோது அது பெரிய விஷயமாக அவளுக்குத் தோன்றவில்லை.

இப்போது குண்டுவீச்சு விமானம் திடீரென வானில் வட்டமிடும் போது, அருகே பதுங்குகுழியொன்றைக் கண்ட ஆறுதல் அவளுள் மெல்லப் பரவி ஆசுவாசப்படுத்துகிறது.

கேட்டால் முதலிலே குழந்தையிருக்கென்று கூறுவோம். ஒரேயடியாக மாட்டேனென்று கூறக்கூடாது. தற்சமயமாக வவுனியாவிலே வேலை கிடைத்தால் அன்ரி குழந்தையைப் பார்ப்பாதானே. அவள் ஒரு முடிவிற்கு வருகிறாள்.

"அம்மா வவுனியாவிலை வேலை கிடைச்சா கோகிலம் அன்ரி வீட்டை போயிருக்கவே?"

நிர்மலாவின் கேள்வியால் திகைத்துத் திரும்புகிறாள் அம்மா.

''இங்கைதானே வேலை செய்ய வேண்டி வருமெண்டு சொன்னனி?'' திகைப்பு குரலிலும் தொனிக்கிறது.

''இன்ரவியூவிலை வவுனியாவிலையும் அவைக்குக் கிளையிருக்கெண்டு அங்கை வேலை செய்ய முடியுமோ எண்டு கேட்டவை. அப்பதான் இரண்டு மூன்று பேரை அங்கையும் விடப்போகினமெண்டு தெரியவந்தது.''

''இரண்டு மூன்று பேரைத்தானே. எட்டுப் பத்துப் பேருக்குக்கிட்ட எடுக்கப் போகினமெல்லே? உன்னை அங்கை அனுப்பாயினம்.'' அம்மா உறுதியாகக் கூறுகிறாள்.

''ஏன் என்னையும் அனுப்பலாந்தானே?''

''நீ உனக்குச் சின்னக்குழந்தையிருக்கெண்டு சொல்லேல்லையோ?'' அம்மா பட்டென்று திருப்பிக் கேட்டாள்.

''சொன்னனான்''

''பிறகு அவைக்கு உன்னிலை ஏதும் கோவமே? குழந்தைப் பிள்ளைக்காரியை ஏன் வேறை இடத்துக்கு அனுப்பப் போகினம்?'' அம்மா என்ன சொன்னாலும் அவளுக்கு ஒரு சந்தேகம்.

''பிரச்சினைகள் என்னைத் தேடிவாறது வழக்கமம்மா. எதுக்கும் கோகிலம் அன்ரியைக் கேட்கலாம்.''

"கற்பூரம் கொளுத்த முதல் ஏன் சன்னதம் கொள்ளுறாய்? உனக்குக் குழந்தைப்பிள்ளை இருக்கெண்டு தெரிஞ்ச பிறகு உன்னை வவுனியாவுக்குப் போட அவங்களென்ன மடையங்களே? வவுனியாவுக்குப் போட்டால் பிறகு யோசிப்பம்." அவளை வவுனியாவில் வேலை செய்ய அனுப்பமாட்டார்களென அம்மா நிச்சயமாக நம்பினாள்.

"கோகிலம் அன்ரியை இப்பவே கேட்டு வைச்சால் என்னம்மா?"

நிர்மலா தன் நினைப்பைச் செயற்படுத்துவதில் முனைப்பாயிருந்தாள்.

"நீ கேட்டு அவ மாட்டனெண்டு சொன்னால், உனக்கு வேலை இங்கை கிடைச்சாலும் அவவிலை வெறுப்பு வந்திடும். ஏன் தேவையில்லாத மனக்கசப்பு?"

அம்மா எப்பொழுதுமே அவளுக்கு எதிர்மாறான திசையிலே தான் சிந்திப்பதாக நிர்மாலாவுக்குத் தோன்றியது. அவள் கேட்காமலேயே தன் குழந்தையைப் பார்ப்பேனென்று அன்ரி கூறியபடியால் அவள் மறுப்பாளென்று நிர்மலாவுக்குத் தோன்றவில்லை.

அம்மா அவளுக்கு வவுனியாவில் வேலை வராதென்று நம்புகிறாள். ஆனால் நேர்முகத் தேர்வு வைத்தவர்களுடைய கேள்விகளின் போக்கு அவளது மனதிலே சந்தேகத்தை விதைத்திருந்தது. அவள் வவுனியாவுக்குப் போகமுடியுமா என்பதில் அவர்கள் அதிக அக்கறை காட்டியது போல் அவளுக்குத் தோன்றியது.

"எனக்கென்னவோ இன்ரவியூ பண்ணினவை கேள்விகேட்ட தோரணையிலேயே ஒரு சந்தேகம் அம்மா. பொம்பிளையள் பிள்ளை குட்டியளோடை ஏன் வேலைக்கு வரவேணும்? வந்தால் அவையளுக்கு ஏன் சலுகை கொடுக்க வேணுமெண்டுதானே அதிகமான ஆம்பிளையள் நினைக்கினம்."

நிர்மலா தன் மனதில் பட்டதைக் கூறினாள்.

"ஆண்டவன் மூளை அமைப்பிலேயோ திறமையிலேயோ பெண்ணுக்கும் ஆணுக்கும் வேறுபாட்டை ஏற்படுத்தேல்லையே! ஆன படியால் பெண் தன்னுடைய திறமையை உபயோகிக்கவும் வெளிக்காட்டவும் சந்தர்ப்பம் கொடுக்கப்படத்தானே வேணும்?"

"பெண் தானே குழந்தைகளைப் பெற்று வளர்க்க வேண்டியிருக்கு?"

"அதுசரி நிர்மலா! ஒரு தகப்பனில்லாமல் குழந்தை பிறக்கிறதில்லை. அந்தக் குழந்தையின்ரை பிறப்புக்கும் வளர்ப்புக்கும் தகப்பனுக்கும் பங்கிருக்கு. பெண், குழந்தைகளைப் பெற்று பாலூட்டி வளர்க்கிறாளெண்ட காரணத்துக்காக அவளுடைய திறமைகளை மூட்டைகட்டி வைக்கவேணுமெண்டு சொல்லலாமா? அதுமட்டுமில்லை. இன்டைக்குப் பணத்தேவைக்காகவும் வேலைக்குப் போக வேண்டியிருக்கு."

நிர்மலா ஏளனமாகச் சிரித்தாள்.

"என்ன சிரிக்கிறாய் நிர்மலா? உனக்குத் தெரியுமே? பெரும்பாலான வீடுகளிலை ஆணைவிடப் பெண் திறமைசாலியாக இருக்கிறாள். வீட்டு வேலையெண்டால்

உன்னுடைய பொறுப்பெண்டு ஆண் விடுகிறதாலை பெண்ணையும் முன்னேறவிடாமல், தானும் முன்னேறத் திறமையில்லாமல் இருக்கிறான். பெண்ணை முன்னேறவிடாமல் செய்கிறது மனித உரிமை மீறல்.''

அம்மாவின் பேச்சை ஊடறுத்தாள் நிர்மலா.

''நீங்கள் சொல்லுறது எல்லாம் சரியம்மா. இது இவ்வளவும் காலாதிகாலமாகச் சொல்லப்பட்டு வருகிற விஷயம். ஆனால், அதைப் புரிந்து உணர்ந்து கொள்ள வேண்டியவை இன்றுவரை உணரேல்லையே.'' நிர்மலா வெறுப்போடு கூறினாள்.

''இன்ரவியூ போட்டிலை ஒரு பொம்பிளையளும் இல்லையே?''

நிர்மலாவின் பார்வையிலும் சிரிப்பிலும் ஏளனம் புகுந்து கொண்டது. அவளைப் பார்த்துக் கொண்டிருந்த அம்மா கேட்டாள்.

''அந்த நிறுவனத்திலை வேலை செய்யிறவையிலை மூண்டில இரண்டு பங்கு பொம்பிளையளாயிருப்பினம் போலையிருக்கு. பொம்பிளை இன்ரவியூ போட்டிலை இருக்கக்கூடாதே?''

நிர்மலா ஆழ்ந்த சிந்தனையும் வேதனையும் முகத்தை முற்றுகையிட மௌனமாக அமர்ந்திருந்தாள்.

''எல்லா இடங்களிலும் போலை அங்கையும் கஞ்சிக்குப் பயறுபோட்டமாதிரி, ஒன்றிரண்டு பொம்பிளையள்தான் மேலதிகாரிகளாயிருக்கினமெண்டு கேள்வி. வீட்டுப்பிரச்சினையளோடை போராடிக்

கொண்டும் கந்தோரிலை முன்னுக்கு வருவமெண்டால், அதுக்கும் வேட்டு வைப்பாங்கள். ஒருமாதிரி மேலை வந்தாலும் இழுத்து விழுத்திறதெண்டில்லை, வெளியிலையே போட்டிடுவாங்கள்.'' அம்மா தொடர்ந்து கூறிக் கொண்டேயிருந்தாள். அம்மாவிற்குள் கனிந்து கிடந்த நெருப்பு சுவாலை விட்டெரிந்து தணியமறுத்தது.

''நிர்மலா, உனக்குத்தான் கடிதம் வந்திருக்கு.''

மடியிலே குழந்தையை வைத்துப் பாலூட்டிக் கொண்டிருந்த நிர்மலா அம்மாவின் கையிலிருந்த கடிதத்தை வாங்கினாள்.

கடித உறையைப் பார்த்ததுமே இரு தயத்திற்குள்ளிருந்த இரத்தம் முழுவதும் உறைந்துவிட்ட உணர்ச்சி! வாய்நிறைய உமிழ்ந்தெடுத்துக் கொண்டிருந்த பால் நின்று விட மிருணாளினி வீரிட்டுக்கத்தினாள். அவளை ஆற்ற முடியாது நிர்மலா தவிக்க அம்மா வந்து தூக்கினாள்.

நிர்மலா அவசரமாகக் கடித உறையைப் பிரித்தாள். அவசரத்திற்கு உறை பிரியத் தாமதித்தது போன்றிருந்தது.

''அம்மா, என்னை வவுனியாவுக்குத்தான் போட்டிருக்கினம்.''

எத்தனையோ விளையாட்டுகள் காட்டியும் வீரிட்டு அழுது கொண்டிருந்த மிருணாளினியுடன் அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்த அம்மா திரும்பினாள்.

''என்ன?'' அம்மாவின் வாய் கேட்கும்போதே மனம் 'ஏன், ஏன், ஏன்?' என்று ஆயிரம் தடவைகள் கேட்டுக் கொண்டது.

இப்படிச் செய்ய என்ன காரணம்?

"இப்ப என்ன செய்ய அம்மா?"

நிர்மலாவையும் ஆசுவாசப்படுத்த வேண்டியிருந்ததை அம்மா உணர்ந்தாள்.

"நிறுவனத்திலை இயக்குனராயிருக்கிற யாரோடையாவது கதைச்சுப் பார்க்கச் சொல்லி தாமோதரம் மாமாவைக் கேட்டுப் பார்ப்பம். குழந்தைப் பிள்ளையோடை போறது கஷ்டம்மெண்டு சொல்லிப்பாப்பம்."

இப்படிக் கதைப்பதற்கு அம்மாவுக்கு எது நம்பிக்கையூட்டுகிறதென நிர்மலாவுக்குப் புரியவில்லை.

"எப்பிடியும் வவுனியாவுக்குத்தான் வேலைக்குப் போக வேணுமாம். 'போட்டிலை' முடிவு செய்ததை மாற்ற முடியாதாம். அதோடை இது முதல் நியமனமெண்டபடியால் இவ கட்டாயம் போக வேணும்."

தாமோதரன் மாமா கூறியது, அடிபட்ட பாம்பு போலக் கிடந்த அம்மாவின் நம்பிக்கையின் மீது மேலும் ஓர் அடியாக விழுந்தது.

"குழந்தைப் பிள்ளைக்காரியெண்டு சொன்னீங்களே?" அம்மா சந்தேகத்துடன் கேட்டாள்.

"குழந்தை பிறந்தபிறகு வேலை தேடினால் கஷ்டம்தான். நான் எல்லாம் சொல்லி கதைச்சனான்."

"என்ன அண்ணை சொல்லுறியள்? இங்கை கம்பஸாலை' வெளிக்கிடபிள்ளையளுக்கு இருபத்தேழு,

இருபத்தெட்டு வயதாகுது. வேலை கிடைக்க நாலைஞ்சு வருசம் தவங்கிடக்க வேணும், மாப்பிள்ளை தேடுறது அதைவிடக் கஷ்டம். நல்ல மாப்பிள்ளை கிடைச்சால் நாங்கள் கட்டிவைக்காமல் விடேலுமே? அப்ப பிள்ளையும் பிறந்த பிறகு தானே வேலை கிடைக்கும். இது ஆருடைய பிழை?''

அம்மா விடாது வாதிட்டாள்.

''நிச்சயமாய் எங்கடை பிழை. இவ்வளவு கதைக்கிற நீ இதையும் யோசிச்சுப்பார்''

''உண்மைதான் அண்ணை. ஆனால் எங்கடை பிழையாலை பாதிக்கப்பட்ட இந்தப் பிள்ளையளை இப்படிக் கஷ்டப்படுத்தக் கூடாதுதானே.''

''காசு தேவை. வேலை கிடைக்காது. என்ன கஷ்டப்பட்டும் வேலை செய்ய நிறையப்பேரிருக்கினம். பசி வந்திட பத்தும் பறக்கிற மாதிரி இந்த நிலையில் மனித உரிமை பெண்ணுரிமை எல்லாம் மறந்து போயிடுது.'' மாமா யதார்த்தத்தை விளக்கினார்.

''இதுகளைக் கதைச்சென்ன அண்ணை? இப்ப நிர்மலாவுக்கு வேலைகிடைக்க என்ன செய்யலாம்?'' அம்மாவின் நம்பிக்கை துடித்துப் புரண்டது.

''இப்பிடி ஒவ்வொருதரும் நினைக்கிறதாலை தான் பிரச்சினைகள் சரியாய்த் தீர்க்கப்படுகிறேல்லை.''

''மாமா, நான் வவுனியாவுக்குப் போய் கொஞ்சநாள் வேலை செய்தால் திரும்பிவர முடியுமே?''

அவரது பேச்சை நிர்மலா ஊடறுத்தாள்.

"வரலாமெண்டு அவை சொல்லுகினம். எவ்வளவு சாத்தியமோ தெரியாது. உன்னுடைய கணவன் இங்கை வேலை செய்கிறான். சின்னக் குழந்தை இருக்கு, எல்லாத்தையும் சொல்லி மேலிடத்துக்கு எழுதிக் கேட்கலாம். தொழிலாளர் சங்கத்துக்குள்ளாலையும் முயற்சியெடுக்கலாம்."

"எனக்கு என்னுடைய அதிர்ஷ்டத்திலை நம்பிக்கையில்லை மாமா." நிர்மலா அழுகை கலந்துவிட்ட கரகரத்த குரலிலே கூறினாள்.

"ஏனொரு குழந்தைப்பிள்ளைக்காரியை அங்கை போட்டினம்?"

அம்மாவின் மனம் அந்தக் கேள்விக்கு விடைதேடி அலைகையில் இன்னொரு வினா அதன் தொடராகப் புறப்பட்டது?

"தொழிற்சங்க நிர்வாகத்திலை பொம்பிளைகளும் இருக்கினமே?"

"எனக்குத் தெரிந்தளவிலை இல்லை." மாமாவின் பதில் அம்மாவின் நம்பிக்கைக்குத் தீ மூட்டிச் சாம்பாராக்குகிறது.

மார்வோ நிறுவனம் பெரியது. ஒரு பெரிய பரந்த பிரதேசத்திலே பெரும்பாலும் அதன் ஊழியர்களே வாழ்கின்றார்கள். பெருந்தொகையான பெண் ஊழியர்கள் அந்த நிறுவனத்திலிருக்கிறார்கள்.

'இவர்களுக்கு எத்தனை பிரச்சினைகளிருக்கின்றன! அவர்களே சிந்தித்துச் செயற்பட்டிருந்தால் குழந்தைகள்

காப்பகம், உணவு விடுதி, சிறுவர் முன்பள்ளி, சிறுவர் பூங்கா எனத் தொழில் புரியும் பெண்களுக்கும் மற்றையோருக்கும் உதவும் பலவற்றை நிறுவி தாமும் பயன்பெற்று பலருக்கும் வேலை வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கலாம்.'

அம்மாவின் சிந்தனையை இடைநிறுத்துகிறது நிர்மலாவின் குரல்.

''அம்மா கோகிலம் அன்ரியைக் கேட்டுப் பார்ப்பமெண்டால் நீங்கள் விடமாட்டனெண்டிட்டீங்கள். நான் குமரன் கொம்யூனிக்கேஷனுக்குப் போய் அவவோடை கதைச்சுப் போட்டு வாறன். மிருணாளினி எழும்பினால் பாருங்கோ.''

எல்லோர் மேலும் ஏற்பட்டிருந்த கோபம் நிர்மலாவின் குரலிலே திணிக்கப்பட்டிருந்தது.

''அன்ரி எனக்கு மார்வோவிலை வேலை கிடைச்சிருக்கு.''

''அப்பிடியே? நல்ல சந்தோஷம் பிள்ளை. மிருணாளினி எப்பிடி இருக்கிறாள்?''

கோகிலம் அன்ரியின் குரல் தொலைபேசியில் மகிழ்ச்சியுடன் ஒலித்தது.

''நல்லாயிருக்கிறாள். என்னை வவுனியாவுக்குப் போட்டிருக்கினம் அன்ரி. நான் அவளையும் கொண்டு உங்கை வந்தால் அவளைப் பார்க்க ஆரையும் ஏற்பாடு செய்ய முடியுமே?'' நிர்மலா தயங்கித் தயங்கிக் கேட்டாள்.

''எப்ப பிள்ளை உனக்கு வேலை தொடங்குது?''

நிர்மலாவுக்கு அன்ரியின் அந்தக்கேள்வியே அந்தகாரத்தில் கிடந்தவனுக்கு ஒளிக்கீற்று தெரிந்த மகிழ்ச்சியைக் கொடுத்தது.

''ஜனவரி முதலாம் திகதி அன்ரி. டிசம்பர் இருபத்தெட்டு, இருபத்தொன்பதிலை வர யோசிக்கிறம்.''


''மாலினிக்கெல்லே ஒரு இடம் சரிவரும் போலை கிடக்கு.''

''அப்பிடியே? சந்தோஷம் அன்ரி. மாப்பிள்ளை என்ன செய்யிறார்?''

''பேசுறம் முடிவு தெரிஞ்ச பிறகு எல்லாம் சொல்லிறன். தையிலை கலியாணம் வைக்கிறதெண்டால் டிசம்பர் பத்து பதினைஞ்சிலையே வீடு திருத்த, பெயின்ற் அடிக்கத் தொடங்குவம். பிறகு கலியாணவீடு அது இதெண்டு மாசிமட்டும் இழுபடும். சின்னக் குழந்தையைக் கொண்டு வந்து நீ கஷ்டப்பட வேணும். இங்கை வீடு எடுக்கிறதும் கஷ்டம்.''

அன்ரி பேசிக் கொண்டிருந்தாள். நிர்மலாவின் மனதில் எதுவுமே பதிய மறுத்தது.

'சுடர் ஒளி'
மார்ச் 2005



# எம் அபிவிருத்திக்காய்...

மாலை மணி ஆறைத் தாண்டிவிட்டாலும் கதிரவனின் செம்பொற் கதிர்கள் பூமகளைத் தழுவிக் கொண்டிருந்ததால் இருள் படரத் தயங்கிக் கொண்டிருந்தது.

இருளின் பரவலை எதிர்பார்த்துக் காத்திருந்த அவர்களுக்கு சங்கொலியென அந்த ரீங்காரம் கேட்டதால் "என்னவோ? ஏதோ?" என்ற பரிதவிப்பு உள்ளெழுந்தது.

அந்த ஒலியின் குறிப்புணர்ந்து, மெல்ல மெல்ல வெளியே வந்து ரீங்கரித்தவனை அவர்கள் சுற்றிச் சூழ வாரம்பித்தனர்.

"என்ன சேதி?" ஆவலை. அடக்கமாட்டாத ஒருவன் வந்ததும் வராததுமாகக் கேட்க,

"மிக முக்கியமான செய்தி. தேர்தல் வரப்போகிறது" செய்தி கூறவந்தவன் குரலிலே முக்கியத்துவத்தை ஊன்றி நிற்கவைத்து அதனைக் கூறினான்.

விவரங் கேட்டவனுக்கும் சூழவிருந்தோருக்கும் உப்புச் சப்பற்ற செய்தியைக் கேட்ட உணர்வு.

"இந்த நாட்டிலே தேர்தல் நடக்காத வருடம் இருந்தால்தான் அது முக்கியமான செய்தி. தேர்தல் நடக்கப் போவது ஒரு செய்தியா?" சிரித்துக் கொண்டே ஒருவன் கேட்டான்.

"நமது சமூகத்தைப் பொறுத்தவரை இது முக்கியமான தேர்தல்."

செய்தி கூறவந்தவன் தான் கூறவந்த செய்தி முக்கியமானது என்பதில் உறுதியாக இருந்தான்.

"ஏன் தேர்தல் எங்கள் சமூகத்தவரிடையே நடைபெறப் போகிறதா?"

"ஐயையோ! எங்களிடையே தேர்தலா? வேண்டாமப்பா. இந்த மனிதர்கள் தேர்தல் வைத்து, பணத்தையும் செலவு செய்து, செய்யும் அட்டூழியங்களையும் பண்ணும் அட்டகாசங்களையும் பார்த்துப் பார்த்து தேர்தல் என்பதே பயங்கரச் சொல்லாகத் தோன்றுகிறது. அதொன்றும் எங்களுக்கு வேண்டாம்" அழுத்தமாகக் கூறினான் ஒருவன்.

"தேர்தல் எங்களிடையே நடக்கவில்லை. இது மனிதர்கள் நடத்தும் தேர்தல்தான். ஆனால் எங்களைப் பொறுத்தவரை முக்கியமான தேர்தல்."

செய்தி கூறவந்தவன் மீண்டும் புதிர் போட்டான். "எப்படி?" மனங்களுள் எழுந்த வினாக் குறி ரீங்கரிக்க அனைவரும் அவனைச் சுற்றி வந்தனர்.

"எங்கள் சமூகத்தின் வளர்ச்சி, பெருக்கம் அல்லது அழிவு எல்லாமே இதில் தங்கியிருப்பதால் நாம் இந்தத்

தேர்தலில் முக்கிய பங்கு வகிக்க வேண்டுமென்பது அரசின் செய்தி.''

"இந்தத் தேர்தல் அறிக்கையில் நமது சமூகம் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளதா?''

"தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்டிருந்தாலும் அது பற்றி அக்கறைப்பட நாமென்ன மனிதர்களைப் போலப் பைத்தியக்காரர்களா என்ன?''

செய்தியைப் பற்றி விசாரிக்க முற்பட்டவனை இடைநிறுத்திக் கேலி செய்தான் மற்றொருவன்.

"இப்பொழுது பெரும்பாலான மனிதர்களும் இந்த அறிக்கைகளை நம்புவதில்லை.''

"என்ன மனிதர்களுக்குச் சார்பாகப் பேச்சுப் போகிறது, மனித இரத்தம் உடல் நிறைய ஓடுகிறதோ?''

அறிக்கை பற்றிக் கூறவந்தவனை மற்றொருவன் எள்ளி நகையாடினான்.

"இது உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல். இதில் தெரிவு செய்யப்படுபவர் தமக்குரிய சிறிய பிரதேசத்தினை அக்கறையுடன் கவனிப்பாரானால் அப்பகுதியை முன்னேற்றுவது சுலபம். தமது பகுதியில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டியவற்றைக் கண்டறிந்து அக்கறை செலுத்தி முயற்சி செய்தால் சிறுசிறு கிராமங்களே பெரும் அபிவிருத்தியைக் காணக்கூடியதாக இருக்கும். அப்படி அக்கறை செலுத்தாத காரணத்தினாலேதான் நமது சமுதாயம் இன்று வளர்ச்சியடைய முடிந்தது.''

செய்தி கூறவந்தவன் பிரசாங்கம் செய்யும் தோரணையில் தன் பேச்சைத் தொடர்ந்தான்.

"இங்கு கூடியுள்ளவர்கள் இப்பிரதேசத்தின் வெவ்வேறு பகுதிகளிலிருந்து வந்துள்ளீர்கள். நீங்கள் எந்தெந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களென்று கூறுங்கள் பார்க்கலாம்."

தன்னைச் சூழ்ந்துள்ளவர்களிடம் பதிலை எதிர்பார்த்து அவன் அவர்களிடையே ஒருமுறை சுற்றி வந்தான்.

"நாங்கள் இந்த நகரத்தின் மையப்பகுதியிலுள்ள கோவிலருகேயுள்ளவர்கள்."

"கோவிலருகே ஒரு குளம் இருக்கிறது; வாய்க்கால்களும் கோவிலின் இரு புறங்களுமுள்ளன." செய்தி கூற வந்தவன் பதில் கூறியவனிடமிருந்து மேலும் விபரமறிய விரும்புபவன் போலப் பேச்சைத் தொடர்ந்தான், பதில் கூறியவன் அதைப் புரிந்துகொண்டு இடைமறித்து விபரங்கூற முற்பட்டான்."

"ஆமாம். நான் கோவிலின் வடக்குப் புறமுள்ள வாய்க்காலில் வாழ்பவன். அதோ இருப்பவர்கள் மேற்குப்புறமுள்ள வாய்க்காலைச் சேர்ந்தவர்கள். இவர்கள் குளத்தில் வாழ்பவர்கள். அதோ அங்கே நிற்பவர்கள் குளத்தையடுத்துப் படர்ந்துள்ள பற்றையில் குடியிருப்பவர்கள்."

"தெரியும். தெரியும், அந்தக் கோவிலுக்குப் பல இடங்களிலுமிருந்து யாத்திரிகர்கள் வருகிறார்கள். அவர்கள் போடும் குப்பை கூழங்களெல்லாம் வாய்க்கால்களுள் சேர்கின்றன. கழிவுநீர் ஓட முடியாததால் நாம் பெருக்கமடைய வாய்ப்பாக அமைகிறது. குளமிருக்கும்

சீர்கேட்டைக் கூறத் தேவையில்லை. இவ்வளவு யாத்திரீகர்கள் வரும் இடத்தைத் திட்டமிட்டு, உங்கள் பிரதேசப் பிரதிநிதி முன்னேற்றியிருந்தால் அந்த வருவாயிலேயே இந்தப் பிரதேசம் ஓகோ என்றாகியிருக்கும். உங்களைக் காண்பதே கடினமாய்ப் போயிருக்கும்."

"உண்மைதான். அவர் தங்கமான மனிதர். சிவனேயென்று தன் பதவியுண்டு, அதற்கான பெருமையுண்டு. தன் உழைப்புண்டு என்றிருப்பதால் நாங்கள் நாளும் பொழுதும் பெற்றுப் பெருகி மகிழ்வாயிருக்கிறோம். அவரை மாற்றிவிடக்கூடாது."

செய்தி கூறவந்தவனின் உபதேசத்தில் விழிப்புணர்வு பெற்றவனாக அவன் மனம் நெகிழ்ந்து கூறினான்.

"நாங்கள் நகர சந்தைப் பகுதியைச் சார்ந்தவர்கள். எங்கள் பகுதியைத் திட்டமிட்டு சீர்ப்படுத்துவது சுலபம். நிர்வாகச் சீர்கேட்டால்தான் நாங்கள் அங்கு பரவி பாடியாட முடிகிறது. எங்கள் பகுதிப் பிரதிநிதியை மாற்றினால் நாங்கள் அதோ கதிதான்."

திடீர் ஞானோதயம் பெற்றவனாக மற்றொருவன் கவலையுடன் கூறினான்.

"நாங்கள் பொது மலசலகூடப் பகுதியில் வாழ்பவர்கள். இந்தப் பகுதியைப் பற்றி எத்தனையோ பேர் சுட்டிக்காட்டியும் எவரும் கவனத்திலெடுப்பதில்லை, எங்கள் பிரதிநிதி மாறவே கூடாது. அதற்கு என்ன செய்யலாம்?"

ஒருவன் பலத்த சிந்தனையுடன் ஆலோசனை கேட்டான்.

"நாங்கள்..." என வேறொருவன் பேசத் தொடங்க,

"உங்கள் இருப்பிடம் பற்றிய விபரம் போதும். இங்கே ஒருவர் கேட்டதுபோல் உங்கள் இருப்புக்கு என்ன செய்ய வேண்டும் என்பதுதான் இப்போது எம் முன்னுள்ள பிரச்சனை. அதற்கான ஆலோசனைகளைப் பெறவும் திட்டந் தீட்டவுமே உங்களை இங்கே அழைத்தேன்" என்றான் செய்தி கூறவந்தவன்.

"நமது வளர்ச்சிக்கு உறுதுணையானோரையே வெற்றிபெறச் செய்ய வேண்டும். அவர்களின் எதிரிகளை அழித்தொழிக்க வேண்டும்."

"அது நம்மால் இயலுமா?" ஒருவன் திகைப்புடன் கேட்டான்.

"இது என்ன கேள்வி. நாம் நினைத்தால் மனிதர்களை அழிப்பது மிகச்சுலபம்." அட்டகாசச் சிரிப்புடன் இப்படி ஒருவன் கூறினான்.

"நம்மை அழிக்க வேண்டுமென்று பேச்சிலும் எழுத்திலும் மட்டும் கூறும் மனிதர்கள் அதனைச் செயற்படுத்துவதில்லை. ஆனால் நாங்கள் அவர்களை அழிப்பதைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறோமே." தம் திறமையை மற்றொருவனும் பறைசாற்றினான்.

"இதுவரை பொதுவாக மனிதர்களை அழித்தோம். இப்போது எதிரிகளை இனங்கண்டு அழிக்க வேண்டும். அதற்கு ஆலோசனை கூறுங்கள்."

"நமக்கு இதுவரை துணைநின்ற பிரதிநிதிகளை எதிர்த்துப் போட்டியிடுபவரைத் தேடிப்பிடித்து அழிக்கலாம்."

"சரி, அதனைச் செயற்படுத்த ஒரு தொகுதியினர் முன் வாருங்கள்."

பெருங்கோஷத்துடன் எல்லோரும் முண்டியடிக்கவே "பொறுங்கள். எல்லோரும் வரவேண்டாம். ஒரு தொகுதியினர் மட்டும் வாருங்கள்" எனக் கோரிக்கை விடுத்து, ஒரு பகுதியினரை அதற்காக ஒதுக்கியபின், "அடுத்த ஆலோசனை என்ன?" என்று அவன் கேட்டான்.

"எதிரிகளுடைய ஆதரவாளர்களையும் அழிக்க வேண்டும்." என அடுத்த ஆலோசனை வழங்கப்பட்டது.

"அவர்களுக்கு அருகிலேயே பெரும்பாலும் ஆதரவாளர்களும் இருப்பார்கள். எனவே முதலில் தெரிவுசெய்யப் பட்டோரே இந்தப் பணியையும் நிறைவேற்றுங்கள்" என உத்தரவிட்டான் அவன்.

"எதிரிகளுக்கு வாக்களிக்கவிருப்பவர்களையும் அழிக்க வேண்டும். இதற்குக் கூடிய தொகையினரை நியமிக்கப் போகிறேன். நாம் மற்றப் பணிகளுக்குத் தெரிவு செய்தோர் தவிர்ந்த அனைவரும் இந்தப் பணியில் ஈடுபட வேண்டும்."

"அப்படியே செய்கிறோம்" என பெரும் ஆரவாரம் எழுந்தது.

"எதிரிக்குத்தான் வாக்களிக்கப் போகிறார்களென்று எப்படி அறிந்து கொள்வீர்கள்?" என கஷ்டமான வினாவொன்றை அவர்களை நோக்கி அவன் கேட்டான்.

"அவர்கள் உரையாடும் போது அவதானித்து அறியலாம்" என ஓர் ஆலோசனை வந்தது.

"மனிதன் ஒன்று சொல்லிவிட்டு வேறொன்று செய்வான், கவனம்" என்றோர் எச்சரிக்கையும் தொடர்ந்து எழுந்தது.

"எதிரிகளின் பிரச்சாரக் கூட்டத்திற்குப் போவோரைத் தாக்கலாம்." அடுத்த ஆலோசனை இது.

"போபவர்கள் எல்லோரும் அவர்களுக்குத் தான் வாக்களிப்பார்களென்றில்லை" என்றொரு கருத்தும் கூறப்பட்டது.

"களையெடுக்கும்போது ஓரிரு நெல்லும் போகும், அதைப் பார்க்க முடியாது. நீங்கள் உங்களுள் பிரிவுகளை ஏற்படுத்தி ஒரு பிரிவினர் டெங்கு, மற்றப் பிரிவினர் மலேரியா என வெவ்வேறு கிருமிகளைக் காவிச் செல்லுங்கள்" என அவன் உத்தரவிட்டான்.

"மற்றுமொரு உபாயத்தைக் கையாளலாம். எம்மைப்போல் பயன்பெறும் ஈ போன்றோரின் உதவியையும் பெறலாம்."

"மிகவும் நல்ல யோசனை, இத்தகைய உதவி கோரிப் பேச்சு நடத்த ஒரு தொகுதியினரை நியமிப்போம். ஒரு வாரத்தின் பின் மீண்டும் கூடி நிலையை ஆராய்வோம். இத்துடன் கூட்டம் முடிகிறது" என அவன் கூறவும் தம் நோக்கில் வெற்றி பெறவேண்டுமென்ற திட சங்கற்பத்துடன் எல்லா நுளம்புகளும் புறப்பட்டுச் சென்றன.

'சுடர் ஒளி'
மார்ச் 2006

# போரினால் ஒரு போராட்டம்

பிற்பகலின் முற்பகுதியென்பதால் வானிலிருந்து அனல் பொழிந்து கொண்டிருந்தது. முற்றத்து மலர்ச் செடிகளினிடையே நான் கால் நீட்டிப் படுத்திருந்தேன்.

சாம்பல் வர்ண வானொன்று வந்து கேற்றருகே நின்றது. நான் எனது இருப்பை வெளிப்படுத்த குரைத்தபடி எழுந்து ஓடுகின்றேன்.

வானிலிருந்து இறங்கி கேற்றடியில் நிற்பது சந்திரன் ஐயா! அடுத்து இறங்குவது அம்மா, அம்மம்மா, கண்ணன் அண்ணா, சறோ அக்கா, ரதி அக்கா!

என் வாய் சட்டென மூடிக்கொள்ள, மனம் பந்தாய் எகிறிக் குதிக்கிறது.

சறோ அக்கா கொஞ்சம் குண்டாகியிருக்கிறா, கண்ணன் அண்ணாவின் வளர்த்தி! அப்பாடா! ரதி அக்கா ஆளை அடையாளம் காணமுடியாதளவு எப்படி வளர்ந்திட்டா!

வாலை ஆட்டிக்கொண்டு இரண்டு கால்களில் ரதி அக்காவின் முன் நிற்கிறேன்.

வாசற்கதவை திறந்த பானு அக்கா "அம்மா ஆரோ வந்திருக்கினம்" என்று குரல் கொடுக்கிறாள்.

ரவி ஐயாவும், சிந்து அம்மாவும் ஹாலுக்குள் வரவும் சந்திரன் ஐயா குடும்பத்தினரும் வீட்டு வாசலுக்கு வந்து சேருகின்றனர்.

தன் காலை உரசி நிற்கும் என்னை ஊன்றிப் பார்த்த ரதி அக்கா.

"அம்மா இது பப்பியா?" என, சந்தேகத்துடன் என்னை அடையாளங் காண்கிறாள். அந்த மகிழ்வில் நான் அவள்மேல் துள்ளிப்பாய்கிறேன்.

"அதுதான் நல்லாய் வளர்ந்திட்டுது. கறுப்பும் வெள்ளையும், இப்பவும் காதை மடிச்சு விட்டுக்கொண்டு, நல்ல பிள்ளை மாதிரி சுற்றிவாறது, இது பப்பிதான்" மித்திரா அம்மா சரியாக அடையாளங்கொண்டு கொள்கிறாள்.

"நாங்கள்தான் இந்த வீட்டுக்காறர், நான் செல்வச் சந்திரன்"

"நான் ரவீந்திரன்"

இருவரும் கைகொடுத்து அறிமுகஞ் செய்து கொள்கின்றனர்.

"இருங்கோ" சிந்து அம்மா உபசரிக்கிறாள்.

"ஒரு அறையிலை உங்களுடைய சாமான்கள் இருக்கு. உங்களுடைய கடிதம் வந்த உடனேயே அந்த அறையைத் துப்புரவாக்கி விட்டிருக்கிறம்" ரவி ஐயா கூறுகிறார்.

அந்தக் கடிதம் இந்த வீட்டிலிருப்பவர்களின் நிம்மதியைத் தொலைத்து இரண்டு வாரங்களாகின்றன.

"நாங்கள் நேற்று வந்து சறோவின்ரை மாமா வீட்டிலை நிக்கிறம். கடிதம் கிடைச்சு ஒரு ஒழுங்கு

செய்திருப்பீங்கள் எண்டு நினைக்கிறம்." சந்திரன் ஐயா விடயத்திற்கு நேரே வருகிறார்.

பானு அக்கா குளிர்பானத்துடன் வருகிறாள். பிரசவத்திற்கு தயார் நிலையிலிருக்கும் அவள் எப்படித்தான் வேலை செய்கிறாளோ? ரதியக்கா போலவே என் மேல் அன்பு கொண்டவள்.

"வீட்டை ஒரு மாதத் தவணையிலை விடச் சொல்லியிருக்கிறியள். நாங்களும் வாடகைக்கு வீடு தேடுகிறம். A9 பாதை திறந்த பிறகு வீடு கிடைக்கிறது கஷ்டமாயிருக்கு. வீடு கிடைச்ச உடனை போறம்." ரவி ஐயாவின் முகத்தைப் பார்க்கவே பரிதாபமாயிருக்கிறது.

"நாங்கள் கனடாவாலை யாழ்ப்பாணம் வந்ததே இந்த வீட்டை விக்கத்தான். நீங்கள் இருக்கக் கூடியதாய் விக்கிறது கஷ்டம்."

"நீங்கள் சொல்லுறது உண்மை. ஆனால் இடம் பெயர்ந்து போனவை திரும்பி வந்து குடியேறுகினம். பல வீடுகள் பயணிகள் விடுதிகளாக்கிப் போட்டினம். இதுகளாலை வாடகைக்கு வீடு எடுக்கிறது கஷ்டமாயிருக்கு" சிந்து அம்மா விளக்கங் கொடுக்கிறார்.

"எங்களின்ரை வீடு அத்திவாரத்தோடை உடைஞ்சதால திருத்த முடியாமலிருக்கு. இந்த வீட்டுக்கு விலையைச் சொன்னால் நாங்கள் வாங்கிறம்" ரவி ஐயாவின் கோரிக்கையை சந்திரன் ஐயா எதிர்பார்க்கவில்லை போலிருந்தது. அவர்கள் முகங்களில் திகைப்பு வந்தமர்ந்துகொண்டது.

"நாங்கள் இங்கே எல்லாவற்றையும் விட்டுவிட்டு போய் கனடாவிலே குடும்பம் நடத்தத் தொடங்க

பட்டபாடு. அங்கத்தைய கடனுக்கு வீட்டைத் தாறமெண்டு ஒப்புக்கொண்டு, காசு வாங்கிக் கொடுத்திட்டம்."

சிறிது தயக்கத்திற்குப் பிறகு அவர்கள் கூறியது பொய்யாயிருக்குமோ என்று எனக்கே சந்தேகமாயிருந்தது. ரவி ஐயாவின் முகத்தைப் பார்க்கவே கவலையாயிருந்தது.

"எங்களின்ரை வீட்டை அத்திவாரத்தோடை உடைச்சுப் போட்டாங்கள். அதுதான் இதிலை வந்திருந்தனாங்கள். எங்களுக்கும் வீடொன்றுவேணும். அதுதான் கேட்கிறம்" சிந்து அம்மா கெஞ்சுவது போலக் கேட்டார்.

அவர்கள் எதுவுமே சொல்லவில்லை.

"வீட்டைச் சுற்றிப் பார்ப்போம்" அந்த பிரச்சனையிலிருந்து விடுபட விரும்புவது போல அவர்கள் எழுந்தார்கள்.

"ஹாலில் லெவல்கூஷீட் உடையேல்லை. மற்ற இடமெல்லாம் உடைஞ்சு கிடக்கு."

"நாங்கள் வரேக்கை இதுவும் உடைஞ்சுதான் கிடந்தது. ஓடுகளும் அரைவாசிக்குக் கிட்ட இல்லை. அந்தப் பெரியறைக் கதவு பிளந்துபோய்க் கிடந்தது. உங்களின்ரை சம்பந்தி விருப்பமெண்டால் திருத்திப் போட்டு இருக்கச் சொன்னார்."

சந்திரன் ஐயா கூறியதற்கு ரவி ஐயா பதில் கூறினார்.

"அந்த நேரம் ஓடுகளும் பலகைகளும் கிடையாது. பழசுகளை, கூட விலை கொடுத்து வாங்கித் திருத்தினம், அந்தநேர யாழ்ப்பாணம் இப்ப மாதிரி இல்லை" சிந்து

அம்மா அந்த நேர நிலைமையை மணிக்கணக்காக விளங்கப்படுத்தினாலும் இவர்களுக்கு விளங்கப் போவதில்லை என நான் நினைத்துக்கொண்டேன்.

"நாங்கள் எவ்வளவோ பாடுபட்டுத்தான் இந்த வீட்டைக் கட்டினனாங்கள். சொன்னால் நம்ப மாட்டீங்கள், கொன்றாக்காக சீமெந்து கல்லு அறுப்பித்துப் போட்டு நானும் இவவும்தான் துடைச்சு அடுக்கினனாங்கள், பார்த்துப் பார்த்து எவ்வளவோ ஆசையோடை கட்டின வீடு, பத்து வருஷங்கூட இருக்கக் கொடுத்து வைக்கேல்லை, தொண்ணூற்றைஞ்சிலை இடம்பெயரேக்கை, அந்தச் சித்திரையிலை பெயின்ற் அடிச்சு மூத்தமகளின்ரை கலியாண வீடு நடத்தினபடி புத்தம்புது வீடாய் விட்டிட்டுப் போனனாங்கள்."

சந்திரனையா சொல்வது அத்தனையும் உண்மை, வீடு அப்போது அந்த மாதிரித்தான் இருந்தது. வீட்டுக்காரரர் ஒவ்வொருவரும் அந்த வீட்டிலை அவ்வளவு கவனம்.

"ஆனால் நாங்கள் வரேக்கை வீடு உடைஞ்சு கிடந்தது. எங்களின்ரை வீட்டோடை பார்க்கேக்கை உங்களின்ரை வீடு பரவாயில்லை."

ரவி ஐயா சொல்கிற மாதிரித்தான் வீடு உடைந்து கிடந்தது. எனக்குத்தான் அந்த அகோர காலத்தைத் தெரியும். இடையே நடந்த போர்! விழுந்த ஷெல்கள்! வீடு உடைந்து நொறுங்க எப்படித் தப்பிப்பிழைத்தேன்? மனிதர்களையே காணமுடியாமல்... உணவுக்கு வழியின்றி அருகில் விழும் ஷெல்களின் பயத்துடன்... அந்த பங்கருக்குள் படுத்துக்கிடந்தது. ரதியக்காவ நினைத்தபடியே... எவ்வளவு அன்பாக வளர்த்தார்! ஒவ்வொரு முறை குண்டு வீச்சு விமானம் சுற்றும்போதும்

அந்த பங்கருக்குள் என்னையும் அழைத்து தன்னருகே வைத்திருப்பாளே, எப்படி விட்டுச் சென்றாள்?

"சுற்றிவர மதிலிருந்தது. இப்ப முன்னுக்கு மட்டுந்தான் இருக்கு." மித்திரா அம்மா எட்டிப்பார்த்துக் கூறுகிறாள்.

சண்டை ஓய வந்த இராணுவம் சுற்றுமதிலை உடைத்து அரணமைத்ததும்... ஓடுகளைக் களற்றிச் சென்றதும்... எனக்கு மட்டுந்தான் தெரியும்.

இவற்றை இவர்களிருந்து பாத்திருந்தால் இதயம் சல்லடையாகி...

"இருந்த கல்லுகளைப் பொறுக்கி முன்பக்க மதிலைக் கட்டினனாங்கள். போனவருஷம் நடந்த மகளின்ரை கலியாண வீட்டோடைதான் சுவருகளும் திருத்தி, பெயின்ற் அடித்து, ஹாலுக்கு லெவல்சூீற் அடித்து, இதையும் கட்டினனாங்கள்" ரவி ஐயா கூறினார்.

"நீங்கள் பெயின்ற் அடிக்கப்போறீங்களெண்டு தான் சறோவின்ரை மாமா சொன்னவர்."

"சூீற்றுக்கள் உடைந்து பொத்தலாய் கிடக்க சுவருகள் குண்டும் குழியுமாயிருக்க எப்படி பெயின்ற் அடிக்கிறது?"

மித்திரா அம்மாவின் கூற்றுக்கு சிந்து அம்மா பதில் சொல்லும்போது மனம் கொதிப்பது புரிந்தது.

"நாங்கள் வரமாட்டம், நீங்கள் இப்படியே இருக்கலாமெண்டு நினைச்சிருப்பியள்." அம்மம்மா வெளியே சூரியன் கக்கிக்கொண்டிருந்த வெப்பத்தைத் தன் சொற்களில் ஈர்த்தெடுத்துக் கொட்டினாள்.

"அப்படிச் சொல்லாதேங்கோ அம்மா, நாங்கள் உங்களின்ரை சம்பந்தியின்ரை அனுமதியோடை தான் வீட்டுக்கு வந்தனாங்கள், முதலிலை கூரை வேலையை முடித்தம்." ரவி ஐயா துடி துடித்துப் பதில் கூறினார்.

"ஓடுகள் கொஞ்சம் போட்டீங்களோ?"

"மரங்களும் ஷெல்பட்டுக் கிடந்ததாலை மாத்த வேண்டியிருந்தது. ஊசிக்கால்கள் அதிர்ந்து போயிருந்ததாலை, முழு ஓடுகளும் இறக்கி, சரிப்படுத்தி ஓடு போட்டடம்" ரவி ஐயா விபரித்தார்.

"அவ்வளவு செய்ய வேண்டியிருந்ததோ?" சந்திரன் ஐயாவின் நெஞ்சுக்குள் அடைத்து பீறிட முயன்ற சந்தேகம் அம்மம்மாவின் வாயிலே பிரத்தியட்சமாகியது.

"அது மட்டுமில்லையம்மா. ஜன்னல் கண்ணாடிகள், போடவும் அவரைக் கேட்டுத்தான் போட்டனாங்கள். அதோடைதான் பெரியறைக்கும் புதுக்கதவும் போட்டனாங்கள்." ரவி ஐயாவின் குரலில் வேதனை கலந்திருந்தது.

"வீட்டு வாடகை மூவாயிரம் நாலாயிரம் எண்டு நடக்குது. நீங்கள் ஒவ்வொண்டும் திருத்திப்போட்டு வாடகையே தராமல் கடத்துறீங்கள்." மீண்டும் ஒரு எறிகணை வீச்சு.

"வாடகை கூடினது இப்பதானம்மா, வீட்டைத் திருத்தி வைச்சிருந்தால் போதுமென்ற நிலைதான் முந்தி இருந்தது. எல்லாக்கணக்கும் உங்கடை சம்பந்திக்குத் தெரியும்."

"பழைய கதையள் என்னத்திற்கு? நாங்கள் வீடு ஒருத்தருக்குக் கொடுத்தாச்சு. நீங்கள் எழும்பவேணும்." சந்திரனையா முடிவாகச் சொல்கிறார்.

"மகளுக்கும் இந்த மாதம் குழந்தை பிறக்குப் போகுது. வீடும் கிடைக்காதாம். நாங்கள் இரண்டு மாதத்திற்கிடையிலை கட்டாயம் எழும்புவம்." ரவி ஐயா கெஞ்சுகிறார்.

"அது முடியாது. ஏதாவது ஒழுங்கு செய்யுங்கோ" சந்திரனையா எழுந்து செல்ல மற்றவர்கள் பின் தொடர்கிறார்கள். நான் ரதியக்காவின் அருகே ஓடுகிறேன். "அவை அதைச் செய்தம் இதைச் செய்தமெண்டு வீட்டை அமத்தப்பாக்கினம். இவைக்கு விக்க ஓமெண்டால் மலிஞ்ச விலைக்குத்தான் குடுக்க வேணும். இப்ப இங்க வீடுகள் நல்ல விலை போகுது."

ரதியக்கா இடம் பெயர்ந்தபொழுது என்னையும் கூட்டிச் செல்லவென்று கேட்க "மனிசருக்கே இருக்க இடம் தேடுறது கஷ்டம். நாய்க்குட்டியை என்ன செய்யிறது?" என்று கூறி என்னைத் தவிக்கவிட்டுச் சென்ற அதே அம்மம்மா இப்பொழுதும் அறிவுரை கூறுகிறாள்.

"இந்த வீட்டுக்குச் செலவு செய்த காசிலை எங்கடை நிலத்திலை ஒரு கொட்டிலோ, குடிலோ போட்டிருந்தாலும் இப்பிடிக் கேட்க வேண்டியிருந்திருக்காது." சிந்து அம்மா குரல் கம்மக் கூறுவது கேட்கிறது.

"அம்மா பப்பியைக் கொண்டுபோய் அங்கிள் வீட்டிலை விடுவமே." ரதியக்கா கேட்க நான் மறுநிமிடமே பாய்ந்தோடி வந்த பானு அக்காவின் காலருகே தஞ்சமடைகிறேன்.

# புத்தகமும் செங்கல்லும்

வானத்தையும் பூமியையும் அதிரச் செய்த வண்ணம் எறிகணைகள் வீழ்ந்து வெடித்து, அந்தப் பகுதியையே துவம்சம் செய்தன.

தம்மோடு போட்டியிடும் அந்த அதிர்வொலிகளைக் கேட்டு, அதன் காரணத்தை அறிய விரும்பிப் போலும் மின்னலும், இடியும் சோடியிட்டு வந்து அங்குமிங்குமாக ஓடியோடி எட்டிப்பார்த்தன.

போரின் கொடூரத்தினால் சிதைவுண்டு கிடந்த சாவகச்சேரிப் பிரதேசத்தைப் பார்த்துச் சகிக்க முடியாது போய், வேதனையில் வானமகள் கண்ணீர் விட்டழுதாள்.

அங்கேயுள்ள வீட்டின் அறையொன்றை நூலகமாக அந்த வீட்டுக்காரர் மாற்றியிருந்தார். பகுதி பகுதியாக அழகாக அடுக்கப்பட்ட நூல்கள், எறிகணை வீச்சினால் உடைந்து வீழ்ந்த சுவரினதும் கூரையினதும் சிதறல்களையும் தாங்கிக்கொண்டு உடைந்த கூரையினூடே வீழ்ந்த மழைநீரில் நீராடிக் கொண்டிருந்தன. முன்னர் பெய்த மழையிலும் நனைந்து கிடந்ததால் புத்தம் புதிதாக அடுக்கப்பட்ட நூல்கள் கூட கருமையேறி உக்கிப் போயிருந்தன. அப்போது பெய்த மழை அவற்றை மேலும் சீர்குலைத்துக் கொண்டிருந்தது.

தேடியெடுக்க முடியாத அருமையான பழைய நூல்கள் தொட்டுப் பார்க்க முடியாதளவு நைந்து கிடந்தன. யாழ்ப்பாணத்திலுள்ள பெரும்பாலான வீடுகளில் கணிசமானளவு புத்தகங்களிருப்பது வழமை. பல வீடுகளில்

ஒரு குட்டி நூலகம் அமைக்கக்கூடிய அளவு புத்தகங்களிருக்கும்.

யாழ் மண்ணில் போரினால் இடப்பெயர்வு ஏற்பட்ட காலம் முதல், யாழ் மக்கள் தாம் போகும் இடங்களுக்கெல்லாம் நூல்களையும் எடுத்துச் செல்ல முடியாது போகும் அவலம் தொடர்ந்து வருகிறது.

2000ஆம் ஆண்டு தொடங்கிய போர் தென்மராட்சிப் பிரதேச மக்களை அவ்வாறு ஓட வைத்திருந்தது.

அந்த நூலகத்தின் உரிமையாளர், அவற்றை நினைத்து நினைத்து ஏங்கிக் கொண்டிருந்திருப்பார். அவையோ தம்மை மீட்டெடுக்க யாராவது வரமாட்டார்களா என ஏங்கிக் கிடந்தன.

திடீரென ஒரு தொகுதி இராணுவத்தினர் அந்த வீட்டினுள் புகுந்தனர். இந்த வீடு உட்பட அடுத்தடுத்திருந்த மூன்று வீடுகளை அவர்கள் தாம் தங்குமிடமாக்கத் தீர்மானித்தனர்.

வீடுகளைத் துப்புரவாக்கி, உடைந்திருந்த கூரைகளையும் செம்மையாக்குமாறு உத்தரவுகளைப் பிறப்பித்தார் இராணுவ அதிகாரி.

மளமளவென வேலைகள் ஆரம்பித்தன. கூரையிலிருந்து மழைநீர் ஒழுகாதபடி, அவர்கள் உபயோகிக்காத வீடுகளிலிருந்து ஓடுகள் கழற்றப்பட்டு இவ்வீடுகளின் கூரைகளுக்குப் போடப்பட்டன. அப்பாடா, இனி ஒழுகாது.

இராணுவ வீரனொருவன் மேலதிகாரியிடம் வந்து சிங்கள மொழியில் உரையாடத் தொடங்குகிறான்.

"இந்தக் குப்பைகளை எங்கே போடலாம்?"

"அதோ அதற்குள் நிறையப் போடலாம்."

சிறிது தூரத்திலிருந்த கிணறொன்றை இராணுவ அதிகாரி சுட்டிக் காட்டினான்.

சிதறுண்டு கிடந்த உடைகள், பொருட்கள் எல்லாமே வாரி அள்ளப்பட்டுக் கொண்டுபோய் அந்தக் கிணற்றுள் போடப்பட்டன. காலங்காலமாக மிகவுங் கஷ்டப்பட்டு, எவ்வளவோ செலவு செய்து, அந்த வீட்டினர் அவற்றையெல்லாம் சேர்த்திருப்பார்கள்! அழிந்தால் மீளப்பெற முடியாத நினைவுச் சின்னங்களும் பரம்பரைப் பொருட்களும் இவற்றுடன் போகக்கூடும்!

சில சிப்பாய்கள் தமக்குத் தேவையெனக் கருதிய பொருட்களை மெல்லச் சுருட்டிக் கொண்டனர்.

"அந்த அறையையும் துப்புரவாக்க வேண்டுமா?" ஒருவன் மேலதிகாரியிடம் கேட்கிறான்.

"ஓமோம். நாங்களிருக்க இடம் வேண்டுமே!"

அவர்கள் அந்த இடத்தையும் துப்புரவாக்க ஆரம்பித்தனர். வழமையாகவே புத்தகங்கள் கனதியானவை. மழை நீரையும் உறிஞ்சி மேலும் கனத்தன.

இரண்டு மூன்று பேராகச் சேர்ந்து புத்தகங்கள் வைத்திருந்த பலகைத் தாங்கிகளுடனேயே அவற்றைக் கொண்டு போய் கிணற்றுள் போட்டார்கள்.

"போடாதே. போடாதே. அடடா அதையேன் போட்டீர்கள்?" தூர நின்ற ஒருவன் உரத்த குரலிலே தடுத்தான்.

போட்டவர்கள் கிணற்றுள் பார்த்தனர். புத்தகங்கள் அமிழ்ந்து கொண்டிருந்தன. அவர்கள் திரும்பினர். தடுத்தவன் அருகே வந்து "புத்தகங்களை மட்டும் போட்டு விட்டு றாக்கைகளை வையுங்கள். அடுப்புக்கு விறகு தேவை. இதை வைக்கலாம்" என்றான்.

பின்னர் மிகுந்த சிரமத்துடன் அவர்கள் புத்தகங்களை மட்டும் சுமந்து வந்து கிணற்றுக்குள் கொட்டினார்கள்.

ஆசையாக, அருமையாக, ஆர்வமாகச் சேகரிக்கப்பட்ட நூல்களில் ஒரு தாள் கூட எஞ்சவில்லை. அவற்றுள் எதுவுமே அவர்களுக்குத் தேவையானதாக இருக்கவுமில்லை.

அடுத்து, ஓரிடத்தில் குவிக்கப்பட்ட உடைந்த ஓடுகள், வீட்டின் உடையாடுகள் எல்லாவற்றையும் அள்ளிக்கொண்டு வந்து அதன்மேல் கொட்டினார்கள்.

வீடு குளிர்மையாக இருக்க வேண்டுமென்று செங்கற்களைக் கொண்டுவந்து கட்டியிருந்தார் அந்த வீட்டுக்காரர். எறிகணைகளால் உடைக்கப்பட்ட அந்தச் செங்கற்கள் கிணற்றினுள் குளிர்மை காணச் சென்று புத்தகங்களின் மேல் படுத்துக்கொண்டன.

சுழன்றடித்த காற்றொன்று கிணற்றின் அருகே கிடந்த புதினத்தாள்களையும் அள்ளிச் சென்று நீரின் மேற்பரப்பில் மிதக்க விடுகிறது.

அதில் ஒரு படம்...

சுட்டெரிக்கப்பட்ட யாழ் நூல் நிலையத்தை மீண்டும் கட்டியெழுப்ப உதவி கோரி அழகிய புன்னகையோடு கையிலே புத்தகமும் செங்கல்லும் ஏந்தி நிற்கும் படம்.

"எங்கள் ஜனாதிபதி அம்மாவின் படமிருந்த ஒரு பத்திரிகையை இங்கே வைத்தேனே. காணவில்லையே!" ஒருவர் பரபரப்பாக அங்குமிங்கும் தேடுகிறார்.

பத்திரிகை நீருள் மெல்ல மெல்ல அமிழ்ந்து கொண்டிருந்தது.

*'மல்லிகை'*
*ஒக்டோபர் 2004*

# நோய்...

கண்களை மூடி அயர்ந்து தூங்க வேண்டும் போலிருக்கிறது. இதுவரை இருந்ததை விடப் புதிய சூழல். எனக்கு அது இதமாகத் தெரியவில்லை.

கூண்டுக்குள்ளிருந்து விட்டு விடுதலையான போதும் மகிழமுடியாத மனநிலை.

மென்மையான படுக்கையில் படுத்திருந்தாலும் அது முன்புபோலில்லை.

விருப்பம் போல் உருண்டு புரளமுடியவில்லை.

வயிற்றினுள் புதிய உணர்வு!

வெறுப்போடு கை, கால்களை அசைத்துக் கொண்டிருக்கையில் நொய்யென்று காதுகளைப் பிடுங்குவது போல ஓரிரைச்சல்

என்னுடல் முழுவதுமே ஜிவ்வென்று கனலாக, ஏனென்று புரியாத ஓர் எரிச்சல் என்னுள் மூள,

வீரிட்டழுகிறேன். வீட்டிலுள்ள அனைவரும் என்னவோ ஏதோவென்று பதற நான் அழுகிறேன்.

''குழந்தை அழுகுது, இவள் அதுக்குள்ளே தன்ரை விளையாட்டு. அந்தப் பிளேன் சத்தத்தை நிப்பாட்டு குஞ்சு'' ஒருவர் உரத்துச் சத்தமிடுகிறார்.

சட்டென்று அந்தச் சத்தம் நிற்கிறது.

''அதுவும் குழந்தைதானே. பிளேன் விளையாடுது'' அந்தக் குழந்தைக்கு அனுசரணையான ஒருகுரல்.

சத்தம் நின்றதால் ஏற்பட்டு என்னுள்ளே பரவிய அமைதியால் நான் கண்விழித்துப் பார்க்கிறேன்.

அந்த விமானம் என் கண்படுமிடத்தில் கிடக்கிறது.

''இதென்ன பிளேனோ? காதைப் பிளக்கிற மாதிரிச் சத்தம் போடுது.'' என்னை ஆதரவாக அணைத்திருந்த என்னைப் பெற்றதாய் எரிச்சலுடன் கூறுகிறாள்.

''விளையாட்டுப் பிளேனெண்டாலும் குண்டுவீச்சு விமானமெல்லே. அப்பிடித்தானே சத்தம் போடும்!''

எனக்கு ஏனோ அதைப் பார்க்கப் பிடிக்கவில்லை. கண்களை மூடுகிறேன்.

வானத்தில் இராட்சத வண்டுகளாகச் சுற்றிய இரண்டு விமானங்கள் கண்களுள் தெரிகின்றன.

நான் மெல்ல விசும்புகின்றேன்.

அம்மா இதமாக அணைத்து, பாலூட்டுகிறாள். வயிற்றினுள் எழுந்த உணர்வு அடங்குகிறது.

கண்மூடி உறங்க முயல்கிறேன். கண்களுள் ஏதேதோ காட்சிகள் வந்து போகின்றன.

அழகான நீண்ட கூந்தலும் சிரிக்கும் கண்களுமாக சந்தியாவும் அவளின் சாயலிலேயே அழகான குழந்தையும். அவன் சாய்ந்தாடும் அழகு என்னுள் பனியில் குளித்த ரோஜாவாய் இறங்க...

நான் சிரிக்கிறேன்.

''நரி விரட்டுது''

''இல்லை. கடவுள் வந்து விளையாட்டுக் காட்டுறார்.''

மழலை மாறாத குரல்கள் என்னைச் சூழ்ந்து கேட்கின்றன.

சந்தியாவின் மகன் மித்திரன் கண்களுள் விளையாட்டுக் காட்டுகிறான். நான் மகிழ்வில் நீச்சலடிக்கிறேன்.

''என்னுடைய பேரப்பிள்ளை'' பெருமையும் மகிழ்வும் குழைந்து என்னுள் படர்கிறது.

''தம்பி எப்பிடிச் சிரிக்கிறான் பாருங்கோ.'' ஒரு குழந்தைக் குரல் என்னருகே கிரிச்சிட ''தம்பி நித்திரை கொள்ளுறான். சத்தம் போடாதேங்கோ'' எனது அம்மா கண்டிக்கும் குரலிலே கூறுகிறாள்.

நான் கண்விழித்துப் பார்க்கிறேன்.

புதிய காட்சிகள். பலர் என்னைச் சூழ இருக்கின்றனர். யார் இவர்கள்?

''என்ரை பேரன் எழும்பிட்டான். ஒருக்கா என்னட்டைத் தா''

என்னைப் போன்ற ஒருவர் அம்மாவிடம் கேட்கிறார்.

"இல்லையில்லை. இப்போது நான் அவரைப் போல இல்லை. நான் அவருக்குப் பேரனாம். மித்திரன் போல நான் மாறிவிட்டேன். நான் அவருக்குப் பேரன்"

அவருடைய மடியிற்கிடந்து அவரைப் பார்க்கிறேன். அணைப்பு இதமாக இல்லை.

எனக்குப் பேரனிருந்த காலம்போய் நான் பேரனாக மாறிய படிமுறைகள் மங்கி மங்கி நினைவில் வந்து போகின்றன.

கணநாயகன் சதையும் உதிரமுங்கரைந்த சகதியாகக் கொலையுண்டு கிடந்த கோலம்!

"ஙொய்" என்ற குண்டுவீச்சு விமானத்தின் குரூர இரைச்சல் எல்லாம் நிழலிடும் காட்சிகளாய்த் தோன்றி மனதைக் குழப்பிவிட

நான் உதடுகள் கோண விசும்புகின்றேன்.

"பேரன் ஏதோ கனவுகண்டு அழுகிறான்" எனது பேரனார் கூறுகிறார்.

எனது மகள் சந்தியாவின் கணவன் - எனது மருமகன் - கணநாயகன் குண்டுவீச்சில் இறந்த பின்பு இல்லையில்லை சிதைந்த பின்பு,

அடுப்பினுள் தேங்காய்ச் சிரட்டையை வைத்தால். எரியும் போது கேட்கும் சத்தங்கூட என்னைப் பயமுறுத்தியது.

குண்டுவீச்சு விமானத்தின் சத்தத்தைப் போன்ற எந்தச் சத்தங்கேட்டாலும் எனது மனம் குழம்பித் தவித்தது.

இனம் புரியாத பயமும் எரிச்சலுமாக.

அந்த நேரம் குழந்தையிடங்கூட எரிந்து விழுந்தேன். அருமை மகள் சந்தியாவின் இல்லற வாழ்க்கை ஐந்து வருடங்கள் கூடப் பூர்த்தியாகாமல் கருகிவிட்டதைத் தாங்க முடியாமல் என்மனம் தவித்தது.

கணநாயகன் சந்தியாவின் மேலும் மகன் மேலும் பாசத்தைப் பொழிந்தது இடை நடுவில் அவர்களைத் தவிக்க விட்டுப் பிரிவதற்காகவோ என்னவோ?

அவன் கொலையுண்டு கிடந்த கோரக்காட்சி மனதினுள் உறைந்துவிட, வேதனைகளைக் கொட்டித் தீர்க்கவும் முடியாமல் மனதினுள் குமைந்து குமைந்து, அதுவே நோயாகி என்னை மெல்ல மெல்ல மென்று இறுதியில் தின்றே விட்டது.

மரணத்தின் பின்பும் என் மகளையும் பேரனையும் என்னால் மறக்கவே முடியவில்லை.

நினைத்த பொழுதெல்லாம் என் வீட்டுப்பக்கம் போய் அவர்களைச் சுற்றிச் சுற்றி வந்தேன். அப்போது தான் கணநாயகனையும் சந்தித்தேன். அவனாலும் மனைவியையும் மகனையும் மறந்திருக்க முடியவில்லை. அவனும் அங்கேயே சுற்றிக் கொண்டிருந்தான்.

சந்தியாவும் மித்திரனும் எத்தனையோ கஷ்டப்பட்டார்கள். எவ்வளவோ வேதனைப்பட்டார்கள். ஆனால் அவர்களுக்கு எங்களால் எந்த உதவியுமே செய்ய

முடியவில்லை. அவர்களுடைய வேதனையைப் பகிர்ந்து கொள்ளக் கூட இயலவில்லை. வேதனைப்படுவதைத் தவிர எதுவும் செய்ய இயலாதவர்களாய் அருகே சுற்றிச் சுற்றி நிற்பது கூட ஒரு தண்டனை போன்றிருந்தது.

அந்த வேளையிலேதான் எனது நிலைமை மாறியது. நினைத்ததும் விரும்பிய இடத்திற்குப் பறந்து திரிந்த நான் ஒரு கூட்டிற்குள் சிக்குப்பட்டேன்.

இதற்குள் அடைபட்ட பின்னர் அவர்களைச் சென்று பார்க்க முடியவில்லை.

சந்தியா... மித்திரன்...

மனம் ஓயாமல் ஏங்கியது.

அவர்களை இனிப்பார்க்கவே முடியாதா? அவர்களைப் பார்க்க முடியாத வேதனையை என்னால் தாங்க முடியவில்லை. அந்தக் கூட்டினுள்ளிருந்து வெளியேறி அவர்களிடம் போகத் துடித்தேன். அந்தக் கூண்டின் எல்லாப் பாகங்களையும் இடித்துப் பார்த்தேன்.

இயலவில்லை!

அவர்களைக் காண்பதற்காகத் துடித்துப் புரண்ட என் முயற்சிகளெல்லாம் அவமே போய்க் கொண்டிருந்தன.

அண்மையில் ஒருநாள் அதனுள்ளிருந்து இயல்பாகவே எனக்கு விடுதலை கிடைத்தது. ஆனால் முன்பு போல் என்னால் அவர்களிடம் பறந்து செல்ல இயலவில்லை.

அவர்களின் நினைவுகள் மட்டும் என்னை ஆக்கிரமித்துக் கிடந்தன.

அதேவேளை புதிய உறவுகள் சூழ்ந்து நின்றனர். அவர்களுடன் இயைபாக என்னால் இயலவில்லை.

என் பேரனிடமிருந்து என்தாய் என்னைத் தூக்கிக் கொள்கிறாள். புதிய சூழலுக்குப் பழக்கப்பட என் உடலும் உள்ளமும் தயங்கித் தாமதிக்கின்றன. அன்னையின் ஆதரவான அணைப்பொன்றுதான் எனக்குப் பிடிக்கிறது. அதன் சுகத்திலே கண்கள் மூடிக் கொள்கின்றன.

ஓர் அழகிய பெண்ணும் குழந்தையும் கண்களுள் வந்து சிரிக்கிறார்கள்.

மனம் மகிழ்ந்து விகசிக்க, நான் சிரிக்கிறேன். என்னுள்ளே குளிர் மல்லிகையைத் தூவி நறுமணம் பரப்பிய அந்த முகங்கள்...?

யார்...? யார்...? யார் அவர்கள்...?

அவர்களுக்காக என் மனம் ஏங்குகிறதே... யார் அவர்கள்...? நன்கு பழகிய முகங்கள். சற்றுமுன் அந்தப் பெயர்கள் நினைவுக்கு வந்தனவே. இப்போது... இப்போது... ஏன் நினைவிற்கு வரவில்லை?

முயல்கிறேன். நினைவிற்குக் கொண்டுவர எவ்வளவோ முயல்கிறேன். ஆனால் முடியவில்லை. முடியவேயில்லை. அந்த நினைவுகளெல்லாம் மெல்ல மெல்ல என்னிடமிருந்து விடைபெறுகின்றனவா?

நான் முகம் சுழித்து அழுகின்றேன். அவர்களின் நினைவு என்னை விட்டகல்வதற்காக அழுகின்றேன்.

"தம்பி அழுகிறான். ஏனம்மா அழுகிறான்?"

யாரோ ஏதோ சொல்கிறார்கள். என்ன சொல்கிறார்கள்? எனக்கு எதுவுமே புரியவில்லையே, ஏன்? சற்றுமுன் அவர்கள் கூறியதெல்லாம் புரிந்ததே. இப்போது ஏன் புரியவில்லை? எனக்கு என்ன நடக்கிறது?

அந்த முகங்கள்...? அவை... அவை...? நினைவுக்கு வரக்கூட மறுக்கின்றன. அவற்றை மறந்துவிட்டேனா?

ஙொய்...?

காதையடைக்கும் அந்தச் சத்தம்! அதைக் கேட்டு மனம் குழம்பி ஏதேதோ செய்ய நான் தாங்கமுடியாது வீரிட்டழுகிறேன்.

அந்தச் சத்தத்துடன் கழன்று கழன்று ஓட ஆரம்பிக்கின்ற அது என்ன? அது என்னவென்பது நினைவிற்கு வரமறுக்கிறது. ஆனால் அதைப்பார்க்க எனக்குக் கோபம் கனல்கிறது.

அம்மா ஏதோ சொல்கிறாள். அவள் கூறுவதும் எனக்குப் புரியவில்லை.

சத்தமிட்டபடி ஓடும் அதைப் பார்க்கிறேன். அந்தச் சத்தம் எனக்குப் பிடிக்கவில்லை. அது என் உயிரையே தவிக்கச் செய்கிறது. சத்தமெழுப்பும் அந்தப் பொருளைப் பொரிப் பொரியாக்க வேண்டுமெனும் ஆவேசம் கிளர்ந்தெழுகிறது.

# நாவால் அரிந்து...

"இந்தப் பிள்ளை சொல்லுக் கேளாமல் மாமியார் வீட்டை போட்டுது, இன்னும் வரக்காணேல்லை" நகுலாம்பிகை கேற்றைப் பார்க்கக் கூடியதாக ஜன்னலருகே கதிரையை இழுத்துப் போட்டவாறு கணவன் இராமநாதனிடம் சொன்னாள்.

"அவையளும் தனியத்தானே. பார்த்துக் கொண்டு வரட்டுமென்" பார்த்துக் கொண்டிருந்த பத்திரிகையைச் சிறிது தாழ்த்தி அவர் கூறினார். "அப்பிடிப்போய்ப் பார்க்கக் கூடிய ஆக்களோ அவை? அந்தப் பிள்ளை வயித்திலை குழந்தையோட, கட்டி மூன்றாம் மாதத்திலை புருசனைக் காணேல்லையெண்டு கண்ணீரும் கம்பலையுமாயிருக்கேக்க, அவள் பாவி, தான் மாமியாரெண்டதைக் காட்டிப்போட்டாள். ஏதோ பிரியாதான் அவளின்ரை மகனைக் கொண்ட மாதிரியல்லே சித்திரவதை! ம்... இதையெல்லாம் பார்க்க வேணுமெண்டு எனக்கும் தலையெழுத்து" நகுலா தன் மனக்குறையைப் பொரிந்து தள்ளினாள்.

"அதுவும் பெத்ததாய், கொஞ்சம் மனநிலை பாதிக்கப்பட்டிட்டுது" இராமநாதன் அவளைச் சமாதானப்படுத்த முனைந்தார்.

"அவளைப் பார்த்தா அப்பிடி மனநிலை பாதிக்கப்பட்டதாய்த் தெரியேல்லை."

"அவ மட்டுமில்லை. எனக்கும் உங்களுக்கும் கூட மனவியாதி இருக்கலாம். இந்தப் போரின் அனர்த்தங்கள் எவ்வளவோ பேரை மன வியாதிக்காரராக்கிட்டுது. ஆனால் பார்க்க எங்களுக்குத் தெரியேல்லை" இராமநாதன் யாழ்ப்பாண மக்களின் மனநிலையை விவரித்து அவளுக்குப் புரிய வைக்க முயன்றார்.

"நீங்களும் உங்களின்ரை வியாக்கியானமும், அவ புருசனோடை இருக்கிறா, ஏதோ விசரிக்கோலத்திலை நிண்டாலும் காலமை வெள்ளனத் திருநீறு பூசி, பெரிய குங்குமப் பொட்டும் வச்சிடுவா. நானும் பொட்டும் பூவுமாயிருக்கிறன். என்ரை குஞ்சு, இருபது வயது முடியேல்லை. அது பொட்டு வைக்கிறது அவவுக்குப் பிடிக்கேல்லை. என்ரை ராசாத்தியை நான் எப்பிடி வளத்தனான். எவ்வளவு கனவு கண்டனான். அவள் பொட்டில்லாமல் எனக்கு முன்னாலை நிண்டா எப்பிடியிருக்கும்?" நகுலா விம்மி விம்மி கண்ணீர் விடுகிறாள்.

இராமநாதர் எதுவுமே சொல்ல விரும்பவில்லை. அவரால் அவளைப் போல அழ முடியவில்லை. ஆனால் வேதனை அவருக்கு இல்லையா? பிரியாவை அந்த வேதனையிலிருந்து விடுபடச் செய்யத்தான் பாலர் பாடசாலையில் கொண்டுபோய் ஆசிரியை ஆக்கினார். எவ்வளவோ யோசித்துத்தான் அந்த வேலையை அவளுக்குத் தேர்ந்தெடுத்தார். அவளோடொத்த பெண் பிள்ளைகள் அல்லது பெரியவர்கள் பலருடன் பழகுமிடத்தில் அவள்

வேலை செய்ய நேர்ந்தால் அவளது மன ரணத்தை நித்தம் நித்தம் கொத்திக் கிளறி விடுவார்கள் என்பது அவருக்குத் தெரியும். நேற்றுக்கூட அவளுக்கு மறுமணம் செய்து கொடுக்கச் சொல்லி அவரது பாடசாலை நண்பர் முருகேசர் ஆலோசனை கூறினார். அவர் எதுவுமே பேசவில்லை. இதே ஆலோசனையை நகுலாவிற்கு கண்மணி மச்சாள் சொன்ன அன்று முழுவதும் நகுலா அழுதாள்.

"இஞ்சாருங்கோ கண்மணி மச்சாள் சொல்லுறா பிரியாவுக்கு கனடா விலையிருக்கிற சம்மந்தரின்ரை மகனைக் கேட்கட்டாம். இவவுக்கு ஒரு மூளையிருக்கே அவன் ரமணன் திரும்பி வந்தால்... நான் இதைச் சொல்ல அவ எல்லாரையும் கொலை செய்து செம்மணிக்கை புதைச்சிட்டாங்கள். அவன் எங்கை வாறதெண்ணுறா. இவன்கள் துலைவான்கள் எத்தினை பேர்வந்து மகஜர் என்றாங்கள் விசாரணை என்றாங்கள், உந்தச் சின்ன இலங்கையிக்கை என்ன நடந்ததெண்டு கண்டு பிடிச்சுச் சொல்ல இத்தினை வருசமாகுதெண்டா நம்பேலுமே? அவனொருதன் செம்மணிக்கை புதைச்சதெண்டான். சரி உடனை விசாரியுங்கோவன். அந்த நேரம் அங்கையிருந்தவையைக் கண்டு பிடிக்கிறதென்ன பெரிய வேலையே?"

"எவ்வளவு பேர் கதைச்சு நடக்காதது நீரும் நானும் கதைச்சே நடக்கப் போகுது." அவளுடைய புலம்பலை நிறுத்த அவர் முயன்றார்.

"என்ரை வயித்தெரிச்சல் எனக்குத் தானே தெரியும். ஒவ்வொரு கதையைக் கேட்டு அந்தப் பிள்ளைக்கிருக்கிற வேதனை எனக்குத் தானே தெரியும். ஏதோ ஒரு முடிவு

தெரிஞ்சால் அதுக்கேத்த மாதிரி எதுவும் செய்யலாம். உங்களுக்கு அவளின்ரை பிரச்சினையள் தெரிய வாறேல்லை.'' நகுலா எதைச் சொல்ல வந்தாளென்பது அவருக்கும் தெரியும். நகுலாவுக்கு மட்டுமில்லை, அவருக்குக் கூட அந்தக் கதையை சந்திரா வந்து சொல்லியிருந்தாள்.

பிரியா ரமணின் விஷயமாய், மனு, விசாரணை என்று அலையும் போது ரமணனுக்கு ஒருமாதம் முதலில் காணாமல்போன சத்தியேந்திரனின் அண்ணனுடன் போய் வந்தாள். உதவியும் பாதுகாப்புமென்று கருதித்தான் அவள் அவனுடன் போய் வந்தாள். அவன் திருமணமாகாதவன் அதுபோதுமே ஊருக்கு.

''ஊரென்ன? அவனுக்கும் பிரியாவுக்கும் காதலென்று கதை தொடங்கியவர்கள், படித்து பட்டம் பெற்று உத்தியோகம் பார்க்கும் பெண்கள். படித்து பட்டம் வாங்கி, உத்தியோகம் பார்த்தால் போலை பெண்கள் முன்னேறி விட்டதாய்ச் சொல்ல முடியாது. ஒரு பெண்ணும் ஓர் ஆணும் பழகுவதை பார்த்து இவையே இப்படித் தவறான நோக்கில் கதைக்கத் தொடங்கினால் எப்பிடி?'' சந்திரா விஷயத்தைச் சொல்லும் போது இப்படிக் கூறினாள்.

ஆனால் ஒரு பாரிய துன்பத்தைச் சந்தித்து தன் துணையை நினைத்து நினைத்தே உருகிக்கொண்டிருக்கும் பிரியா இந்தக் கதைகளையெல்லாம் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் கேட்ட மறுகணமே உதறிவிட்டு எதையும் கண்டுகொள்ளாதவள் போல் வாழப்பழகிவிட்டதுதான் அவருக்குப் பெரும் ஆறுதலாக இருந்தது. ''அப்பா என்னை மூடியிருக்கிற துயரத்துக்கு மேலை இதெல்லாம் படும்போது இதுகள் துயரமாயே தெரியிற்தில்லை. இதுகளைப்பற்றி

கவலைப்படுகிற நிலையிலை நான் இல்லை அப்பா." பிரியா இப்படித்தான் சொன்னாள்.

அதனாலே தான் அன்றைக்கு அப்பம் சுட்டவுடன் அந்த கொத்திக் குதறும் மாமியையும் மாமாவையும் கண்டு வர அவளால் மகனுடன் புறப்பட முடிந்தது.

"இன்னும் இந்தப் பிள்ளையைக் காணேல்லை. என்ன பிரச்சனையோ? பொட்டும் பிறையுமாய் திரியிறாள் எண்டு மனிசி திண்டு தண்ணி குடிச்சிருக்கும். வழியிலை ஆமி செக் பொயின்ற். இப்பிடிப் பிள்ளையை பார்த்துக் கொண்டிருந்து, பிறகு பேரப்பிள்ளையை பார்த்துக் கொண்டிருந்து எங்கட காலம் இப்பிடித்தான் போகப்போகுதோ..."

நகுலா வாய்விட்டு அரற்றிக் கொண்டிருக்கும்போதே பிரியா குழந்தையுடன் வருவது கண்ணில் படுகிறது. அவள் வாசலில் வந்ததும் தாய் அவளது முகத்தை ஆராய்கிறாள். வீங்கிய விழிகள் அழுகையின் அடையாளமாக.

அந்தத் தாயின் மனமும் கண்களும் தன் மகளுக்காகக் கலங்குகின்றன.

*'தினக்குரல்'*
*18.07.1999*



# யார் செய்த பாவம்?

முகையவிழும் காலைப் பொழுதில், அதேபோல் முகையவிழ்ந்து, நறுமணத்தை அள்ளியிறைத்து, சுகந்தமாய் மலரும் மலர்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

வானொலி திடீரென உரத்துக் கேட்கிறது. மகளின் வேலையாகத் தானிருக்கும்.

கருமுகில்களிலிருந்து தலை நீட்டிய பிறையை மறுகணமே முகிற்கூட்டம் மறைப்பது போலொரு வேதனை. பத்திரிகைச் செய்திகளின் வேதனையை மறந்து, இயற்கையில் மனம் சிறிது ஒன்றும் வேளை மீண்டும் இது...

எம் மண்ணின் அழகுகளுடன் எம்மிடமுள்ள அழகியல் உணர்வுகளும் அழிக்கப்படுகின்றனவோ?

நான் கைநிறையப் பறித்த மலர்களுடன் பூஜை அறையை நோக்கி நடக்கிறேன்.

"அம்மா நீங்களும் செய்தி கேட்கவேணுமெண்டுதான் ரேடியோவைச் சத்தமாய்ப் போட்டனான்." மகள் இடைமறித்துக் கூறுகிறாள்.

"பத்திரிகைகளிலும் அப்படித்தானிருக்கு"

"அப்ப பேப்பர் பாத்திட்டீங்கள்?"

"இப்ப அது வந்த உடன பார்க்காமல் ஆர் இருப்பினம்?"

"அதைப் பார்த்திட்டும் கும்பிடப் போறியளோ?" மகளின் கேள்வியின் உட்பொருள் புரியாமல் நான் அவளைப் பார்க்கிறேன்.

"இண்டைக்கு பேப்பரில் எத்தனையோ கோயில்களின்ரை பேர் வந்திருக்கு? இனித் தொடருகின்ற தாக்குதலிலை எத்தனை கோயில்களோ? இதெல்லாம் வாசிச்சிட்டு புத்தருக்கு பூப்போட்டு கும்பிடப் போறியளோ?"

நான் என் மகளின் முகத்தைப் பார்க்கிறேன். அதில் இனம் புரியாத ஓர் ஆவேசம். 'என்னை எதிரியாக நினைக்கிறாளா?'

"என்னால அதைப் பார்த்துக்கொண்டு இருக்க முடியாதம்மா, நான் அந்தப்படத்தை எடுத்து எறியப்போறேன்." அவள் பூஜை அறைக்குள் புயல் போலப் போகிறாள்.

"மணிமேகலை..." அவள் எங்கே தான் சொன்னபடியே செய்து விடுவாளோ என்ற அந்தரத்தில் நான் அதட்டுகிறேன்.

அந்தப் படம் - சுமார் இருபது வருடங்களாக எனது பூஜை அறையில் இடம் பெற்றிருந்து, ஆராதிக்கப்பட்ட - அந்தப்படம் என் மகள் கையிலிருக்கிறது. எந்த நேரமும் அது சுக்குநூறாகிப் போகலாம்.

உணர்ச்சி வசப்பட்ட பெரியவர்களே பெரிய விடயங்களை சுக்கு நூறாக்குகையில், உணர்ச்சி வசப்பட்ட

இந்தச் சிறுமிக்கு அதன் மதிப்பு புரியப் போவதில்லை. அவள் வெறியின் உச்சக்கட்டத்தில் நிற்கிறாள்.

"அதை உடைச்சுப் போடாதை குஞ்சு. அம்மா கும்பிடுகிற படம்" நான் கெஞ்சுகிறேன்.

"இந்த வீட்டிலை இது இருக்கக் கூடாது" அவள் கத்துகிறாள்.

"டும்...டும்..."

அந்த ஷெல்லொலியின் அதிர்வில் வீட்டு யன்னல் கதவுகள் எல்லாம் அதிர்ந்தன.

என் இதயம் ஒருகணம் நின்றுவிட்டது போலிருந்தது.

"அந்தப் படத்தை எவ்வளவு நேசிக்கின்றேனெண்டு உன்னுடைய பெயரிலை இருந்தே உனக்குத்தெரியவேணும் மணிமேகலை."

"தெரியுமம்மா. நீங்கள் இப்ப என்ன சொல்லப் போறீங்களெண்டு எனக்குத் தெரியுமம்மா, லலிதா சகஸ்ர நாமத்தைப் பராயணம் செய்யிற நீங்கள். அந்த ஆயிரம் பெயர்களிலை ஒன்றைக்கூடத் தெரிஞ்சசெடுக்காமல், மணிமேகலையின்ரை பெயரை வைச்சது, அந்த மணிமேகலை மாதிரி ஊருக்கும் உலகுக்கும் தொண்டு செய்கின்றவளாய் நான் வர வேண்டும் என்றதற்காக, அதைத்தானே சொல்லப் போறீங்கள்? அந்த மணிமேகலை மிதித்த புண்ணிய பூமியில் என்ன நடந்தது? அந்தக் கதை தொடர்கதையாகேக்கை இந்தப்படத்துக்கு இந்த வீட்டிலை பூப்போட்டு பூஜை செய்யப் போறீங்களோ?"

என் மகளுக்கு இப்படியெல்லாம் பிரசங்கம் செய்ய யார் கற்றுக் கொடுத்தார்களென்ற மலைப்பு என்னுள் ஏற்பட்டது.

''பிள்ளை, உனக்கிப்பதான் பன்னிரண்டு வயது முடிஞ்சிருக்கு. வீட்டுக்குள்ளையிருந்து வெளியுலகைப் பற்றி நீ கேட்கிறதை மட்டும் வைச்சுக்கொண்டு உணர்ச்சி வசப்படக் கூடாது. பெரியவையே, அந்தத் துறையிலை ஊறினவையே, புரியாமல் தடம் புரள்கிற விஷயங்கள் இது குஞ்சு.'' நான் அவளை ஆசுவாசப்படுத்த முனைகிறேன்.

''நான் ஒண்டும் கேட்கிறதை வைச்சு முடிவுக்கு வரவில்லை. என்ரை தலைக்கு மேலேயே பொம்மர்க்கள் பறக்குது. என்ரை வீட்டுக்கு மேலே ஹெலி சுடுகுது. என்ரை பள்ளிக்கூடத்திலேயே ஷெல் விழுகுது. என்னோட பழகின எத்தனையோ பேர் அநியாயமாய்க் கொலை செய்யப்பட்டினம். இதையெல்லாம் அனுபவிக்கின்ற நான், கேட்கிறதை வைச்சா உணர்ச்சி வசப்படுகிறன்?'' அவளுள் கனன்ற நெருப்பு தணிவதாயில்லை.

''அது சரியம்மா, அதுக்காக இந்தப் படத்திலையா பழி தீர்க்கப் போறாய்? ஒருக்கால் எனக்காக ஒரு ஐஞ்சு நிமிசம் அந்தப்படத்தைப் பார்த்துக் கொண்டிரு., எந்த விதமான உணர்ச்சிக் குமுறலும் ஒரு முறை தணியும். அப்பிடி ஒரு சாந்தமும் அமைதியும் அந்தப் புத்த பகவானின் முகத்தில் குடிகொண்டிருக்கிறதுதான் நான் அதை விரும்பவே காரணம்.''

என் மனம் அந்தப் படத்தை நான் வாங்க நேர்ந்த சந்தர்ப்பத்தை நினைத்துக் கொள்கிறது.

எனது பட்டப் படிப்பின் முதல் ஆண்டைக் கொழும்பில் முடித்துக் கொண்ட நேரம். அடுத்த ஆண்டு பேராதனைக்குப் போகக்கூடுமென்ற நிலை.

அந்த வேளையில்தான் நான் ஒவ்வொரு நாளும் பார்த்து மகிழும் அந்தப் புத்தர் சிலையை விட்டுப் பிரியப் போகின்றேனென்ற எண்ணம் எனக்கு ஒருவித வேதனையைத் தந்தது. அந்த நாட்களில் அந்தப் புத்த பகவானை ஆறுதலாகத் தரிசித்துச் செல்வதற்கே பம்பலப்பிட்டியிலிருந்து பல்கலைக்கழகத்திற்கு நடந்து போய் வருவதைப் பெரிதும் விரும்பினேன்.

வெள்ளை வெளேரென்ற, சாந்தைக் குழைக்காமல் சாந்தத்தையே குழைத்து உருவாக்கியது போல், அந்தக் கண்களிலிருந்து பெருகிவரும் கருணை வெள்ளம் மனதை நிறைத்து, அமைதியை அங்கு உறைய வைப்பது போல், அதே போன்ற ஒரு படத்தை வீதியோரக் கடையொன்றில் கண்டதும் அதை வாங்கிக் கொண்டபோது எனக்கேற்பட்ட மகிழ்ச்சியை விவரிக்க முடியாது.

அதே நாட்களில் பல்கலைக்கழகத்தில் கற்றுக் கொண்ட மணிமேகலையும் என் மனதில் ஆழப்பதிந்து விட்டாள்.

மனுக்குலத்தை நெறிப்படுத்தத்தான் எல்லாச் சமயங்களும் அற நெறிகளைப் போதிக்கின்றன. நாம் நெறிப்பட உருவான மதங்களை வைத்து வெறிப்பட்டுப் போரிடுகின்றோம். மதத் தத்துவங்களை உணராமல் கண்மூடித்தனமான அபிமானத்தால் ஏற்படும் வெறியுணர்வே இது.

இதோ நிற்கும் என் மகளுக்கு அதோ இருக்கும் யேசுநாதரின் படத்தில் ஏற்படாத கோபம், இந்தப்படத்தில் ஏற்படுகிறது. சைவமும், கிறிஸ்தவமும் இங்கும் பௌத்தம் தென்னிலங்கையிலும் தோன்றியதென்று நினைத்து விட்டாளோ?

பார்க்கப் போனால் சைவமும் பௌத்தமும் ஓரிடத்தில் பிறந்த மதங்கள், சங்கத் தமிழுக்கும் இன்றைய தமிழுக்குமுள்ள வேற்றுமை போன்றதுதான். இம்மதங்கள் பயன்படுத்தும் வடமொழிக்கும் பாளிக்குமிடையிலுள்ள வேற்றுமை. இதெல்லாம் தெரியாமலேயே எல்லாம் தெரிந்ததாக ஒர் எண்ணம்.

"குஞ்சு, நீங்கள் சின்னப் பிள்ளை. படிச்சு அறிவு வளர்ச்சி பெற்ற பிறகுதான் எந்தப் பிரச்சினைகளையும் புரிந்து கொண்டு தீர்வு காண முடியும். இதுக்கு முதல் சூழ்நிலை உங்களுக்குக் கொடுக்கின்ற வெறும் உணர்ச்சிகளுக்கு அடிமைப்பட்டு இப்படிக் கோபிக்கக் கூடாதம்மா. இப்ப நீ செய்யக் கூடியது நல்லாய் உன்னுடைய அறிவை விருத்தி செய்யிறதுதான். இப்ப படத்தைத்தாங்கோ."

"நான் படிக்கமாட்டனெண்டு சொல்லேல்லை. ஆனால் இப்படியிருக்கேக்கை என்னமாதிரிப் படிக்கிறது? அந்தப்படம் எங்களின்ரை வீட்டிலை வேண்டாமம்மா. நான் வாசிக்கின்ற, கேட்கின்ற செய்திகளெல்லாம் இந்தப் படத்தை வெறுக்கச் செய்கின்றன."

'ஓ! புத்தபகவானையும் பௌத்த மதத்தையும் நானும் என் மகளும் வெவ்வேறு வகையில் அறிமுகம் செய்து கொண்டதுதான் எங்கள் மனநிலைகளின் வேறுபாட்டிற்குக்

காரணமோ? மலேசியாவில் வாழ்ந்து கொண்டிருந்த எனது இளம்பிராய நாட்கள் அவை. எனது உயிர்த் தோழி நீ சுவீ லாங் என்ற சீனச் சிறுமி. சீனப்புத்தாண்டு காலமென்று நினைக்கிறேன். இனிமையான கோலாகலமான நாட்கள்.

எனது தோழியின் குடும்பத்தினருடன் அவர்களது கோயிலுக்குச் சென்றிருந்தேன். படுத்த நிலையில் ஒரு நீண்ட புத்த பகவானின் சிலை. நின்ற நிலை, இருந்த நிலையென நெடிதுயர்ந்து நின்ற கோலங்கள் இன்றும் என் நினைவை விட்டகலவில்லை. பல தடவைகள் அந்தக் கோயிலுக்குச் சென்றதாக நினைவு.

அப்போது அது பாரதத்தில் பிறந்த மதமென்றோ எனது தாய் நாட்டிலேயே என் சகோதரர்கள் அதனை அனுஷ்டிக்கிறார்களென்றோ எனக்குத் தெரியாது. சீனர்களின் தெய்வமாகத்தான் புத்த பகவான் எனக்கு அறிமுகமானார். பின்னர் பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழியில் தலைசிறந்த காவியங்களுள் ஒன்றான மணிமேகலை மூலம் மனதுள் ஆழப் பதிந்தார்.

ஆனால் என் மகளுக்கு...?

கொடிகட்டிப் பறக்கவேண்டுமென்னும் சிலரின் ஆசையால் எவ்வளவு சின்னஞ் சிறிசுகள் கொடியவர்களாக்கப்பட்டு கொல்லப்படுகிறார்கள்.

அன்பு மயமான புத்தபகவான் மட்டும் இன்று இங்கு வந்தால்?

அந்தப் படத்தை எப்படியாவது வாங்கிவிட வேண்டுமென்ற அவசரம் என்னுள் நிறைகிறது.

நான் என் மகளின் கையிலுள்ள படத்தை வாங்க முன்னேறுகின்றேன்.

"படீர்!"

அந்தப் படம்... அந்தப் படம் விழுந்து உடைந்து துண்டு துண்டுகளாக...

"குஞ்சு..." நான் வீரிடுகிறேன். என் கைகளிலிருந்த மலர்களை அப்படியே போட்டு விட்டு என் மகள் மேல் பாய்கிறேன்.

அவளை அப்படியே பிடித்து அடி அடியென்று அடித்து... கோபத்தால் என் கைகள் துடித்தாலும் அறிவு 'ஆறுதலடை' என்கிறது.

எங்கிருந்தோ ஏவியவன் சிரித்து ரசித்திருக்க, வந்து விழும் குண்டு தானும் சிதறி மற்றவர்களையும் சிதறச் செய்வதற்கு குண்டின் மேற்கோபித்து என்ன பயன்?

"பகவானே, என் மகளை மணிமேகலையாக்க வேண்டுமென்றுதான் கனவு கண்டேன். ஆனால் என் மகளை அப்ப்டியாக்க முடியாமல் செய்தவர்களை - இதோ சிதறிக் கிடக்கும் படம் போல் என் கற்பனைகளையும் சிதறச் செய்த மூலகர்த்தாக்களை நீயறிவாய், அசோகனின் மனதை மாற்றிய உன் அடியவர் போன்ற ஒரு துறவியைக் கூட எம் நாட்டிற்குத் தரமாட்டாயா?"

உடைந்து விட்ட அந்தப் படத்தைப் பார்த்து நான் விம்மி விம்மி அழுகிறேன். ஆனால் அழ வேண்டியவர்கள்...?



'வீரகேசரி'
*17.05.1987*

## இந்நூலாசிரியைப் பற்றி...



பெயர் : திருமதி. யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

பிறந்த நாடு : மலேசியா

பிறந்த திகதி : 13.11.48

படித்த கல்லூரி : பண்டத்தரிப்பு மகளிர் உயர்நிலைக் கல்லூரி
இலங்கைப் பேராதனைப் பல்கலைக்கழக கலைப் பட்டதாரி (B.A. Hons)

எழுதி வெளிவந்த சிறுகதைத் தொகுதிகள் :

1. உணர்வின் நிழல்கள்
2. ஈன்ற பொழுதில்
3. கணநேர நினைவலைகள்

ஆன்மீகக் கட்டுரைத் தொகுதி - அரை நிமிட நேரம்

சார்க் மகளிர் அமைப்பு (இலங்கை) நடத்திய தமிழ்ச் சிறுகதைகளுக்கான போட்டியில் முதற்பரிசு 1999

சிரித்திரன் சுந்தர் விருது : கணநேர நினைவலைகள் சிறுகதைத் தொகுதிக்கு

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும் தேசிய ஒருங்கிணைப்புச் செயற்றிட்டப் பணியகமும் நடத்திய வானொலி நாடகப் பிரதியாக்கப் போட்டியில் பரிசு.

யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறை மாணவரும் சப்ரகமுவ பல்கலைக்கழக தமிழ்த்துறை மாணவரும் ஆக்கங்களைத் தம் ஆய்விற்கு எடுத்து கட்டுரை எழுதியுள்ளனர்.

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம் நடத்திய கருத்தரங்கக் கட்டுரைகளை முனைவர் ஆ. கார்த்திகேயனும் முனைவர் சா. உதயசூரியனும் தொகுத்த 'ஆய்வுநோக்கில் அயல்நாட்டுத் தமிழ்ச் சிறுகதைகள்' என்னும் நூலில் உணர்வின் நிழல்கள் தொகுப்பு ஆய்வு செய்யப்பட்டுள்ளது.